கல்கி

KALKI 14.9.1975



குல்ஷன் நந்தா எழுதும் புதிய தொடர் கதை
இன்பத் தென்றல் விரைவில்
ஆரம்பமாகிறது

75 காசு



உனக்கு ட்ரு பிடிக்குமா?
யாருக்குதான் பிடிக்காது?




TRUE
NICE
BISCUITS
TRUE
TRUE
TRUE

கல்கி

ராக்ஷஸ ஆவணி 29
செப்டம்பர் 14, 1975

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





ஸ்ரீ அருணகிரிநாதர் ஆறுவது நூற்றாண்டு விழா

புது தில்லி

13 - 9 - 75 சனிக்கிழமை
விக்யான் பவனில்

காலை 9-40க்கு ஸ்ரீ R. வெங்கட்ராமன் அவர்கள் வரவேற்புரை ஆற்றுவார்கள்.

காலை 9-55க்கு இந்தியாவின் உதவி ஜனாதிபதி ஸ்ரீ B. D. ஜட்டி அவர்கள் விழாவைத் துவக்கி வைக்கிறார்கள்.

விழாவில் உரையாற்றுபவர்கள்

காலை 10-30க்கு Dr. V. A. தேவசேனாபதி—ஆங்கிலம்

காலை 10-50க்கு திருமதி துளசி ஜெயராம் — ஹிந்தி

காலை 11-10க்கு வாகீச கலாநிதி ஸ்ரீ கி. வா. ஜெகந்நாதன் — தமிழ்

காலை 11-30க்கு ஸ்ரீ B. D. ஜட்டி அவர்கள் கீழ்க் காணும் புத்தகங்களை வெளியிடுவார்கள்.

கந்தர் அலங்காரம் — ஆங்கிலம்
கந்தர் அனுபூதி — ஹிந்தி

காலை 11-35க்கு திருப்புகழ் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்குதல்.

14 - 9 - 75 ஞாயிற்றுக்கிழமை
R.K.புரம், ஸ்ரீ சுவாமிநாத சாமி கோயிலில்

காலை 6-30க்கு திருப்புகழ் பஜனை — பித்துக்குளி முருகதாஸ்

காலை 11-30க்கு திருப்புகழ் சந்தங்கள் — ஸ்ரீ K. C. தியாகராஜன்

பகல் 1 மணிக்கு குருடர்களுக்கு அன்னதானம்

திருப்புகழ் சொற்பொழிவுகள்

மாலை 4-10க்கு வரவேற்புரை — R. வெங்கட்ராமன்

மாலை 4-25க்கு நிதி அமைச்சர் ஸ்ரீ C. சுப்ரமணியம் அவர்களின் உரை—விசேஷ மலர் வெளியீடு

சொற்பொழிவாளர்கள்

மாலை 5-10க்கு Prof. Dr. V. A. தேவசேனாபதி சென்னை பல்கலைக்கழக தத்துவப் பேராசிரியர்

மாலை 5-40க்கு வாகீச கலாநிதி கி. வா. ஜெகந்நாதன், கலைமகள் ஆசிரியர்

மாலை 6-10க்கு ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம்

மாலை 6-40க்கு ஸ்ரீ A. S. ஞானசம்பந்தம்

மாலை 7-10க்கு அருள்கவி சாதுராம் சுவாமிகள்

மாலை 7-40க்கு புலவர் கீரன்

இரவு 8-20க்கு சாந்தி கீதம்

பொதுமக்கள் இவ்விரு தின விழாக்களிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

லாட்டரி அரக்கனுக்குக் கல்தா!

செப்டம்பர் 15ந் தேதி அண்ணு தினத்தையொட்டித் தமிழகத்திலிருந்து லாட்டரி அரக்கனுக்கும் கல்தா கொடுக்கிறோம்.

இனி கடைத் தெருக்களிலும் கோயில் வாசல்களிலும் ஐந்தாறு வயதுச் சிறுவர் சிறுமியர், '' ஸார் ! தமிழகப் பரிசுச் சீட்டு ஸார் ! உங்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கும் ஸார் !'' என்று கெஞ்சுவதைக் கேட்க முடியாது. தமிழகத்தின் தன்மானத்துக்கே இழுக்கைத் தேடித் தந்த அருவருப்பான குரல்கள் இவை. இதற்கு முடிவு கட்டிய முதல்வரை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

கல்கி

மலர் 35

இதழ் 7

அதிர்ஷ்ட தேவதை உதவிக்கு வரும் என்று காத்திராமல் உழைப்புக்கு ஏற்ற பலனைப் பெற்று அருமைத் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவோம்.

ப. உ. ச.

திரு ப. வு. சண்முகம் தீக்குளித்து மாசின்றி வெளிவந்திருக்கிருர். வாழ்த்துகிறோம்.

ஆனுல் இதற்காக முரசொலி கார்ட்டூன் உணர்த்துவது போல் எதிர்க்கட்சியினர் தலையில் கையை வைத்துக் கொண்டு அழத் தேவையில்லை. எதிர்க்கட்சிகளின் முதல் கடமை எதிர்ப்பதே என்பது பிரிட்டிஷ் பாராளுமன்ற கோட்பாடு. அந்த எதிர்ப்பு பொறுப் புணர்ச்சியோடு நடக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

இந்த அரிசிப் பேர விஷயத்தில் எதிர்க்கட்சியினர் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதாக எண்ண லவலேசமும் இடமில்லை. அரசாங்கத்தின் கணக்குத் தணிக்கை, முறை பிசகான ஒரு காரியம் நடந்திருப்பதாகச் சுட்டிக் காட்டியது. இதன் தொடர்பாகப் பத்திரிகைகளில் வந்த செய்திகள் பெரிய பரபரப்பை ஏற்படுத்தின. மகத்தான ஊழல் நடந்திருப்பதாக மக்கள் அபிப்பிராயம் வளர்ந்தது. இதில் அமைச்சரும் சம்பந்தப்பட்டிருக்கலாமோ என்று சந்தேகம் எழுந்தது. தி.மு.கழகத்திலேயே சலசலப்பு நிறைய இருந்தது.

எனவே, எதிர்க்கட்சியினர் விசாரணைக்கு வழி வகுத்ததால் ஜனநாயகப் பண்புடன் கடமையாற்றியதாகவே கொள்ளலாம். இன்னும் சொல்லப் போனுல் நிலைமையைத் தெளிவாக்கி, தி.மு.க. வுக்கு இருந்த ஓர் அவப் பெயரைத் துடைத்தெறிய விசாரணை உதவியிருக்கிறது. ஆக எதிர்க்கட்சினருக்குத் தி.மு.க. நன்றி தெரிவித்தாலும் தவறில்லை !

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



கண்ணைக் கசக்காதீர்கள்!

'மெட்ராஸ் ஐ' சென்னையைக் கலக்குகிறது! அது ஒரு கலங்கம். எப்படி.....?

மனைவியின் கண்கள் கலங்கிச் சிவந்திருப்பதைக் கண்டு கணவனுக்குக் கலக்கம். அதிகாரியின் அறைக்குள் நுழைந்துவிட்டுத் திரும்பிய அலுவலரின் கண் சிவந்திருப்பது குறித்துச் சக ஊழியர் அனுதாபப்படுகிறார். சென்னை நகரில் யாரைப் பார்த்தாலும் ஏன் இப்படிக் கண் கலக்கம் உள்ளவர்களாகக் காட்சி அளிக்கிறார்கள் ?

பாண்டி பஜாரில் உள்ள கண் நோய் மருத்துவர் டாக்டர் என். ஸ்ரீநிவாசன் அவர்களுடைய சிகிச்சை நிலையத்துக்குள் நுழைகிறேன். என்ன ஆச்சரியம் ! அங்கு டாக்டரைக் காண வந்துள்ள பலருக்கும் கண்கள் ரத்தச் சிவப்பாக இருப்பதைக் கண்டு துணுக்குறுகிறேன்.

டாக்டர் கூறுகிறார்: ''இந்தக் கண் நோய்க்கு 'கஞ்சங்க்டிவிடிஸ்' என்று பெயர். வைரஸ் அல்லது பாக்டீரியா கிருமிகளால் இந்நோய் ஏற்படுகிறது. எளிதில் தொத்திக் கொள்ளும் தன்மையுடையது இந்நோய். இப்போது நகரில்

ராஜாஜி சிந்தனை

உணர்ச்சி வசப்படுவதில் ஆபத்து

ஒரு மனிதனைப் பாபத்தில் ஈடுபடுத்துவது எது ? அது தவறு என்று உணர்ந்தும் ஏன் செய்கிறான்? மனமறிந்து அப்பாதையில் செல்ல விருப்பமில்லாவிட்டாலும் எந்தச் சக்திக்கு ஆட்பட்டு அவன் நடக்கிறான் ?

ஆசை, கோபம் என்பன மனித இயற்கையில் உள்ள சக்தியின் இருவகை வடிவங்கள். இவைதாம் அவனைப் பாபம் செய்யத் தூண்டுகின்றன.

மனிதனின் மேலான ஆன்ம சக்தியால் கட்டுப்படுத்தப்படாதபோது அந்த உணர்ச்சிகள் அவனது நியாய உணர்வை மறைக்கின்றன — புகை ஒளியை மறைப்பது போல்.

புழுதி படிந்த நிலைக் கண்ணாடி பிரதிபலிக்காது. அதுபோல் நல்லது கெட்டது அறியும் சக்தியை ஆசை அல்லது கோபம் அல்லது ஆழ்ந்த உணர்ச்சியின் இதர வடிவங்கள் ஸ்தம்பிக்கச் செய்கின்றன.

ஆழ்ந்த உணர்ச்சி மனிதனின் சாசுவதமான எதிரி. அது பல வடிவங்களை எடுக்கிறது. நெருப்பு தன்னிடமிருந்தே எரிக்கும் சக்தி பெறுவது போல் இவையும் திருப்தி பெறாமல் கொழுந்துவிடுகின்றன.

எனவே, ஆழ்ந்த உணர்ச்சிக்கு ஆரம்பத்திலேயே தடை விதிக்க வேண்டும். அதற்குச் சிறிதும் இடம் தரக் கூடாது. இல்லாத போனால் அது உன் நியாய உணர்வை அழிக்கும்; உன் அனுபவங்களால் உனக்கு ஏற்படக் கூடிய நன்மைகளை இல்லாமல் செய்து விடும் ; கடைசியில் உன்னையே அழித்துவிடும்.

- ரத்னகிரி கீதா மண்டல் பிரசுரம், ஏப்ரல் 27, 1963

பரவலாகப் பலர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்நோயினால் கண்ணுக்குப் பெரிய ஆபத்து ஒன்றுமில்லை. ஒரு வாரத்துக்கு மேல் நோய் நீடிக்காது. 'நியூஸென்ஸ்' தான் அதிகம். நிரந்தரமாகக் கண் பழுதாகிவிடுமோ என்று பயப்படத் தேவையில்லை.''

''இந்நோயின் ஆரம்பகால அறிகுறிகள் என்ன? எப்படிப் பரவுகிறது?''.

''கண்ணில் எரிச்சல் ஏற்படும். கைகளால் கசக்கத் தோன்றும். கசக்கினால் கண் சிவந்துவிடும். நீர் வடியும். ஒருவரிடமிருந்து ஒருவருக்கு எளிதில் பரவும். ஏன், ஒரு கண்ணிலிருந்து இன்னொரு கண்ணுக்கு எளிதில் பரவி விடுகிறது.''

''பரவாமல் தடுக்க என்ன வழி?''

''இந்நோய் ஒருவருக்கு வந்தால் அவர் உபயோகித்த சோப்பு, டவல் முதலியவற்றை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. கண்ணிலிருந்து வடியும் நீரை வெந்நீரில் நனைத்த பஞ்சு கொண்டு துடைத்துவிட்டு, அந்தப் பஞ்சை ஃபினைல் அல்லது டெட்டால் கரைத்த நீருக்குள் போட வேண்டும். அந்தப் பஞ்சின் மூலம் நோய்க் கிருமிகள் பரவாமல் இருக்கவே இந்த முன்னெச்சரிக்கை.''

''வைத்திய வசதி இல்லாத கிராமப் பகுதிகளில் இந்நோய் பரவினால் என்ன மருந்தைச் சிபாரிசு செய்வீர்கள்?''

''அடிக்கடி 'லோகுலா சொல்யூஷன்' *(Locula Solution)* கண்களுக்கு விட்டுக் கொண்டால் சரியாகிவிடும்.''

''இந்நோய்க்கு 'மதராஸ் கண்' *(Madras Eye)* என்று பெயர் எப்படி வந்தது, டாக்டர்?'' என்று கேட்டதும் டாக்டர் ஸ்ரீநிவாசன் சிரித்தவாறு கூறுகிறார்:

''அப்படிச் சொல்வதே தவறு. நமது நகருக்கு நாமே ஒரு களங்கம் கற்பிப்பது முறையா? வெள்ளைக்காரர்கள் இங்கு ஆட்சி புரிந்தபோது டாக்டர் கிர்க் பாட்ரிக் என்ற மருத்துவர் ஒருவர் சென்னை அரசினர் கண் நோய் மருத்துவமனையில் பணியாற்றி வந்தார். அந்தக் காலத்தில் இந்நோயினை 'மெட்ராஸ் ஐ' என்று கிர்க் பாட்ரிக் முதலிய ஆங்கிலேயர்கள் கூறினர்கள். இப்போது நாமும் அந்தப் பெயரைக் கூறிச் சென்னைக்கு ஒரு களங்கம் ஏற்படுத்துவானேன்?''

டாக்டர் ஸ்ரீநிவாசன் கூறுவது நியாயந்தானே?

பேட்டி: '**பாணன்**'

அலைமீது தவழ்ந்துவரும் தென்றல் போலே
ஓல்ட் ஸ்பைஸ் டால்க் மேனியின் மேலே

தாரணியெங்கும் தரத்திற்குப் பெயர்போனது ஓல்ட் ஸ்பைஸ்.
வீசும் தென்றலின் வாசம் அப்படியே உங்களை வசமாக்கும்.
நீலவானம், அலைவீசும் கடல், ஓல்ட் ஸ்பைஸ் தரும்
நறுமணம்—அந்தக் கொள்ளை இன்பத்திற்கு ஈடிணையேது?
எங்கு சென்றாலும் அந்த டால்க்கின் புத்துணர்ச்சி
எல்லோரையும் என்றும் வசீகரிக்கட்டும்.




ஆண்களின் அழகுக்காக ஓல்ட் ஸ்பைஸ் அளிக்கும் அணிவரிசை : ஆஃப்டர்-ஷேவ் லோஷன்*, கொலோன்*, லாதர் ஷேவிங் க்ரீம்*, பிரஷ்லெஸ் ஷேவிங் க்ரீம், ஹேர் க்ரீம், பிரிலியண்டைன்.

*எலுமிச்சை மணத்திலும் கிடைக்கின்றன □ தயாரிப்பவர்கள் : கோல்ஃபாக்ஸ் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட். லிட்., மெனலீஸ்-ஷல்டன் எண்டர்ப்ரைஸ்.

OS-4/TAM

உங்கள் குறையும் என் நிறைவும்



ஜகத்குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

சந்நியாசிகளாகப் பல ஆசாரியர்கள், அதாவது ஒவ்வொரு சித்தாந்தத்தை ஏராளமான ஜனங்கள் ஏற்கிற மாதிரி செய்தவர்கள், தோன்றியிருக்கிறார்கள். முக்கியமாக மூன்று சித்தாந்தங்களை நிலைநாட்டியவர்கள் சங்கராசாரியார், ராமாநுஜாசாரியார், மத்வாசாரியார். இவர்களை சந்நியாசிகளிலேயே உத்கிருஷ்டமானவர்கள் என்பதால் 'யதீந்திரான்' என்று சொல்வது வழக்கம். இவர்கள் அரவிந்தகோஷ், 'கூடாது' என்று சொன்ன சந்நியாச ஆசிரமத்தை ஸ்வீகரித்தவர்கள் தான். ஆனால் அதற்காக இவர்கள் சுய மோட்சத்தை மட்டும் நினைத்துக் கொண்டு லோகோபகாரம் செய்யாமல் ஏகாந்தமாக உட்கார்ந்து விடவில்லை. ஒருநாள் இருந்த இடத்தில் மறு நாள் இல்லாமல் அவர்கள் தேசம் முழுக்கச் சுற்றிக் கொண்டே இருந்தார்கள். 'ஆஸேது ஹிமாசலம்' என்பார்கள்—ராமேசுவரத்திலிருந்து இமயமலை வரை என்று அர்த்தம் — அப்படித் தென் கோடி வட கோடி இவர்கள் இரண்டு தடவை, மூன்று தடவை சஞ்சாரம் செய்திருக்கிறார்கள். சந்நியாசிகள் இத்தனை காரியம் செய்தார்கள். ஆனால் இவர், கர்ம யோகமே பிரதானம் என்று சொன்னவர், அரவிந்தகோஷோ, வருஷக் கணக்கில் ஓர் உள்ளை (அறையை) விட்டே வெளியில் வருவதில்லை, தம்மை ஒருத்தருமே பார்க்கக் கூடாது என்று வைத்துக்கொண்டு விட்டார். ஸந்நியாசிகள் ஓரே கர்மாமயமாகவும், கர்மயோகி எல்லாவற்றையும் விட்டு விட்டு ஏகாந்தமாகவும் இருந்திருக்கிறார்கள். அது எப்படிப் போனாலும், அவரவர்களின் ஆத்ம சக்தியினால் இவர்கள் எல்லோரிடமும் ஜனங்கள் வந்து சேர்ந்து, இவர்களுடைய வழிக்கு மாறினார்கள்.

நான் சொல்ல வந்த விஷயம், ஒருத்தருடைய பழக்கம் அவருக்கு நல்லதில்லை, அதை நல்லபடியாக மாற்ற வேண்டும் என்று இன்னொருத்தருக்கு இருந்தால், இவர் அந்தப் பழக்கத்தைத் தாமே அநுஷ்டானத்தில் நடத்திக் காட்ட வேண்டும். நாம் பிறத்தியாருக்குச் சொல்வதுதான் நிஜமாகவே நல்லது என்ற நம்பிக்கை முதலில் நம் மனசில் பூரணமாக வர வேண்டும். இந்த மாதிரி முழு நம்பிக்கை (Conviction) இல்லாமலே கூடப் பெரிசாக உபந்நியாசம் பண்ணிவிடலாம். ஆனால் அது லோகத்தில் எடுபட வேண்டுமானால் முதலில் தனக்கு நம்பிக்கை வர வேண்டும். அதற்கப்புறம் நல்லதாக நாம் நினைக்கிறதை நாமே காரியத்தில் பண்ணிப் பார்க்க முடியுமா என்று பிரயாசைப்பட வேண்டும். மற்றவர்களை, 'அதைப் பண்ணு, இதைப் பண்ணு' என்று வைகிறது ரொம்ப சுலபம். ஆனால் நாமே அதைப் பண்ணிக் கொள்ள முடிகிறதா என்று பார்த்துக் கொண்டால்தான், இன்னொருத்தனை வைகிற லாயக்கு நமக்கு உண்டா என்று தெரியும்.

இத்தனை சாஸ்திரங்களும், தர்மங்களும் சொல்வது என்ன? நம் மனசு, ஆசைகள் இப்படிக் கட்டுப்படாமல் ஓடிக் கொண்டேயிருக்கக் கூடாது என்பதுதான். தன்னைத் தானே அடக்கிக் கொள்வதில்தான் எல்லாம் இருக்கிறது. அதற்குத்தான் சாஸ்திர விதிகள் எல்லாம். ஒருத்தன் எத்தனைக்கெத்தனை நல்ல நம்பிக்கையோடு, முடிகிற வரையில் தன்னை இம்மாதிரி அடக்கிக்கொண்டு, எவ்வளவு தூரம் தன்னைச் சீர்ப்படுத்திக் கொண்டிருக்கிறானோ அந்த அளவுக்கு உலகமும் அவனால் சீர்ப்படும். அந்த அளவுக்குத் தான். இவன் கொஞ்சம்கூடத் தன்னை உயர்த்திக் கொள்ளாமல் உலகத்தை உயர்த்துகிறேன் என்று எத்தனை உபந்நியாசம் செய்தாலும் விருதா (வீண்)தான். உலகம், உலகம் என்கிறேனே, இதனால் இந்த 'லோகம் முழுக்கவும்' என்று அர்த்தமில்லை. இவன் யாரைச் சீர்ப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறானோ, அவர்கள்தான் இவனுக்கு உலகம். இவனுடைய சொந்த வாழ்க்கைச் சக்தி அதிகமாக ஆக, இன்னும் தானாக மற்றவர்களும் இவன் வழிக்கு மாறலாம். இவனுடைய சொந்த நிறைவுதான் முக்கியம்.

நான் சொன்னபடி கேட்க முடியவில்லையே என்று பரிதாபப்பட்டுக் கொள்கிறீர்கள். ''ஸ்வாமிகள் இவ்வளவு சொன்னாரே, நாம் கேட்கவில்லையே'' என்று என்னிடமும் ரொம்பப் பரிதாபப்படுகிறீர்கள். ''இனிமேலாவது கொஞ்சம் கேட்டால் தேவலையே'' என்று தனித் தனியாகவும், எல்லாரும் சேர்ந்தும் என்னிடம் பரிதாபப்பட்டிருக்கிறீர்கள். **நீங்கள்** கேட்கவில்லை என்பதற்காகப் பரிதாபம் வேண்டாம். வேறு எதற்குப் பரிதாபப்பட வேண்டும் ? இப்போது நான் சொல்லப் போவது உங்களுக்கு ரொம்பக் கடுமையாகத் தோன்றினால்கூட, தனக்குத் தெரிகிற குறையைச் சொல்லத்தான் வேண்டும் என்ற நியாயப்படி சொல்கிறேன்: உங்களை நீங்கள் நல்ல வழிக்கு அடக்கிக் கொண்டு வரும்படி நான் செய்யவில்லை என்றால், என்னை நானே அடக்கிக் கொள்ளும்படியான சக்தி எனக்கு அத்தனை குறைச்சலாக இருக்கிறது என்றுதான் அர்த்தம். ஆகையால், **நீங்கள்** நான் சொன்னதைக் கேட்காததற்காக என்னிடம் பரிதாபம் வேண்டாம். **எனக்கு** என்னையே

* 1959ல் சென்னை பிரிவுபசாரத்தில் அருளிய உரை.

அடக்கிக் கொள்கிற சக்தி போதவில்லையே என்பதற்குத்தான் பரிதாபப்பட வேண்டும். என்னை எவ்வளவு தூரம் அடக்கிக் கொள்ளும்படியான சக்தி எனக்கு இருக்கிறதோ, அவ்வளவு தூரத்துக்கே நீங்கள் எல்லோரும் திருந்தியிருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் எவ்வளவு திருந்த வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களோ, அவ்வளவும் நான் திருந்தியாக வேண்டும். அதற்கான சக்தி எனக்கு வருவதற்காக நான் ஸ்வாமியைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்க வேண்டும். பிரார்த்தித்துக்கொண்டே இருந்த முடியாமல் மறுபடியும் மறுபடியும் எத்தனை இடைஞ்சல் வந்தாலும் கஷ்டப்பட்டுக் கொண்டு, பிரயத்தனத்தைப் பண்ணியாக வேண்டும். இப்படிப் பண்ணி என்றைக்காவது நானும் ஸித்த புருஷனாக (நிறைந்த நிறைவு என்ற லட்சியத்தை அநுபவபூர்வமாக அடைந்து, அதிலிருந்து விலகாதபடி நிலைத்துவிட்டவனாக) ஆகிவிட்டேனானால், அப்போது நீங்கள் எல்லோரும் தானே அந்த ஸித்தியை அடைந்து விடுவீர்கள்; நிறைந்துவிடுவீர்கள்.

சரி, உபந்நியாசம் பண்ணிப் பிரயோஜனமில்லை என்றால் நான் ஏன் இப்படிப் பட்டணத்துக்கு வந்து, பேட்டைக்குப் பேட்டை, ஓயாமல் ஒழியாமல் பேசிக் கொண்டிருந்தேன்? என் உபந்நியாசத்துக்காகத்தான் நீங்கள் ரொம்பவும் என்னை ஸ்தோத்திரம் பண்ணினீர்களானாலும், ஸ்திரமாக ஒரு பிரயோஜனத்தையும் பண்ணவிட்டால் அது வேலை மெனக்கெட்ட வேலைதானே? உங்கள் தூக்கத்தையும் கெடுத்துக் கொண்டு என் தூக்கத்தையும் கெடுத்துக் கொண்டு நித்தியம் இது எதற்கு ஒரு கச்சேரி பண்ணிக் கொண்டு வந்தேன்? இதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். (தொடரும்)

வட்ட மேஜை

“பணம் பத்தும் செய்யும்” திரைப்படத்தில் ராக்கம்மாவாக நடித்திருப்பது ராதிகா அல்ல; ரத்னா.

மேலூர்
14–8–75 நூர்

சமீபத்திய 'கல்கி' இதழில் ஸ்ரீ ஞானந்த ஸ்வாமிகள் பற்றிய கட்டுரையை வாசித்தவுடன், தபோவனத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் நினைவுக்கு வந்தது.

குடும்பத்துடன் ஸ்ரீ ஞானந்த ஸ்வாமிகளைத் தரிசிக்கச் சென்றிருந்தேன். மாலையில் ஊருக்குத் திரும்ப அனுமதி கேட்டோம்.

“இருந்து காலை பூஜையெல்லாம் பார்த்துக் கொண்டு போகலாமே!” என்றார்கள் ஸ்வாமிகள். ஆனால் எங்களுக்கு ஊருக்குத் திரும்பிவிட வேண்டும் என்று எண்ணம். “ஆஹா” என்று சொல்லிவிட்டுச் சாலையில் பஸ்ஸுக்காக வந்து நின்றோம். எத்தனையோ பஸ்களும், லாரிகளும் தபோவனம் மார்க்கமாகச் சென்றன. ஆனால் ஒன்றுகூட நிற்கவில்லை. அப்புறம்தான் எங்களுக்கு உறைத்தது. பேசாமல் சென்று மடத்தில் படுத்திருந்துவிட்டுக் காலையில் பூஜை முதலியவற்றைப் பார்த்தோம். முகத்தில் குறுநகையுடன் ஸ்வாமிகள் சொன்னார்கள்: “இருந்து பூஜையைப் பார்த்துக் கொண்டே போவதாகத் தீர்மானித்துவிட்டீர்களா? சந்தோஷம். ஆண்டவன் காப்பாற்றுவான்.”

திருவண்ணாமலை
19–8–75 ஏ. சங்கரன்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு 2792 கதைகள் வந்தது குறித்துப் பிரமித்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். பரிசுக்குகந்ததாகத் தேர்ந்தெடுத்த நான்கு கதைகளைப் படித்ததும் நான் அசந்துவிட்டேன். மூன்றும் பரிசுக்குரிய இரண்டு கதைகளுமே முதல் தரமாக அமைந்து விட்டன என்றால் முதல், இரண்டாவது பரிசுக் கதைகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா :


உதகமண்டலம்
23–8–75 உதகை நா. மனோகரன்

மணி சூட்டிய மணி என்ற கட்டுரையில் திரு ராமபத்திரன் விபத்தில் சிக்கிய ஒரு மிருதங்க வித்வானுக்குப் பதிலாக அகாடமி மத்தியானக் கச்சேரிக்கு வாசித்ததாக ஒரு செய்தி விவரிக்கப்பட்டுள்ளது. தக்க சமயத்தில் திரு ராமபத்திரன் கௌரவம் பாராமல் உதவியது உண்மையே. ஆனால் அகாடமியில் தரப்பட்ட சன்மானத்தை விபத்துக்குள்ளான மிருதங்க வித்வானிடமே தந்து விட்டார் என்று கூறுவது சரியல்ல. எனக்கு அந்த வித்வானைத் தெரியும். திரு ராமபத்திரன் கொடுத்திருந்தாலும் அவர் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்.

சென்னை–14
16–8–75 எஸ். ரங்கநாதன்

“பொன்னியின் புதல்வர்” தொடரில், “பாரதி விவாதம்” கட்டுரையை வெகு நாளுக்காக வரைந்துள்ள திரு சுந்தா பாராட்டுக்குரியவர். கல்கிக்கும் வ. ரா.வுக்கும் இடையே எழுந்த சர்ச்சையைப் பல ஆண்டுகளுக்குப் பின் பார்க்கும்போது அவர்களுக்குள் நிலவிய உறவைப் பற்றி ஐயத்துக்கு இடமின்றித் தெளிவாக்கியுள்ள சுந்தா நல்ல காரியமே செய்திருக்கிறார். என்றாலும் 'மகாகவி விவாதம்' என்பது 'வேண்டியதே இல்லாத ஓர் அடைமொழிக்காக நடந்த, வேண்டாத ஒரு விவாதம்' என்று சுந்தா குறிப்பிடுவதை ஏற்பதற்கில்லை. அது வெறும் அடைமொழிச் சண்டை இல்லை. சுந்தா சுருக்கித் தந்துள்ள பகுதிகளை மட்டும் படித்தால் கூட, அடிப்படைக் கேள்வி ஒன்று இன்றும் மிஞ்சுகிறது. பாரதி மீது பக்தியா, பாசமா என்பதும், கங்கை, காவிரி என்று உபமானம் காட்டுவதும் சாமர்த்தியமே தவிர இலக்கியத் தீர்ப்பாகாது. இன்று என்னைப் போன்றவர்களுக்குத் தாகூரை விடப் பாரதி பெரிய கவியாகவே படுகிறான். சுய மொழி அபிமானம் அல்ல; உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

பெரியகுளம்
15–8–75 எஸ். சங்கரன்


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்..



வரம் தாரும் மன்னவனே!

சோம. மகாதேவன்

சொல்லி வைத்தது போலவே, ஆணும் பெண்ணுமாக நாலைந்து பேர்களோடு குற்றால லிங்கம் பெண் கேட்டு வந்துவிட்டார்.

மருதமுத்துவுக்குக் கைகால் ஓடவில்லை.

எல்லாம் நிறைந்தே இருக்கிறது. மாப்பிள்ளை அழகன். படித்து, நல்ல வேலையிலும் இருக்கிறான். மரகதத்தை வந்து பார்த்து, மிகவும் பிடித்தும் விட்டது. வேறு நச்சுப் பிச்சும் இல்லை. கண்ணை மூடிக் கொண்டு பெண்ணைக் கொடுக்கலாம் என்றிருக்கும் போது, நேற்றிலிருந்து நெஞ்சில் திகில் நிறைந்து விட்டதே! எதை, எப்படி, எடுத்துச் சொல்வது என்பதே புரியவில்லையே?

கூடத்திலே விரித்த பாயில் எல்லோரும் அமர்ந்து, பற்பல பேச்சுக்களில் சுற்றி வந்த பின்னர், குற்றால லிங்கம் வந்த காரியத்துக்குத் திரும்பினார்.

"அப்ப – நல்ல நேரத்துக்குள்ளே நிச்சயத்தை முடிச்சுக்குவோம்" என்று ஆரம்பித்தார்.

மருதமுத்துவின் முகம் இருள் அடைந்தது. பின்புறம் உள் நடையில் நின்று கொண்டிருந்த மனைவி செல்லம்மாளைத் திரும்பிப் பார்த்தார். அவளும் தலை குனிந்திருந்தாள்.

பெண்ணைப் பெற்றவரின் முக மாறுதலைக் கண்ட குற்றாலலிங்கத்துக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்னங்க.... தயக்கமாகத் தெரியுது. செய்யிறது – செலுத்துறதைப் பத்தி எதுவுமே யோசிக்க வேண்டாம். அது உங்க விருப்பத்தைப் பொருத்தது. உங்க மகள் மரகதம் எங்க வீட்டு மருமகளா வந்து விளக்கேத்தி வைக்கணும். அவ்வளவுதான்" என்றார்.

மருதமுத்து சிரித்தார். அது போலியாக இருந்தது.

"நமக்குள்ளே பேசிக்கிறதுக்கு எதுவுமே இல்லிங்க. இந்த நிச்சயத்தை இன்னும் இரண்டு மாசம் தள்ளி வைக்கலாம் என்று இப்ப யோசனையா இருக்கு" என்று கம்மிய குரலில் சொன்னார்.

"ஏன்... என்ன காரணம்?" என்று அவசரத்துடனே கேட்டார் குற்றாலலிங்கம்.

மருதமுத்து தயங்கித் தயங்கிச் சொன்னார்:

"எனக்குக் கவலையாக இருக்கு. எனக்கு மச்சினன் ஒருத்தன் இருக்கான். சின்ன வயசிலேயே தட்டிச் சொல்ல ஆளில்லாமல் தான் தோன்றியாகத் திரிஞ்சு, கேடுகெட்ட காலிப் பயலாப் போயிட்டான். போன வருஷம் ஓர் அடிதடி வழக்கிலே தண்டிச்சாங்க. அதுக்குப் பிறகு அவனும் இந்த ஊருக்குள்ளே வரலே. நேத்துப் பாருங்க.... திமிர்ன்னு வந்து குதிச்சிருக்கான்!" என்றார்.

"அதுக்கு என்னங்க இப்ப?"

"நானும் அவன் தலை தெரியறதுக்குள்ளே நல்லபடியா இந்தக் கல்யாணத்தை முடிச்சுப் போடணும்னுதான் அவசரப்பட்டேன்."

"அது சரிங்க.... மச்சினனுக்கே பெண்ணைக் கொடுக்கிறதிலே உங்களுக்கு விருப்பம் இருக்கா?" என்று கேட்டார் குற்றால லிங்கம்.

"அதைவிடப் பாழுங் கிணற்றிலே தள்ளிப் போடலாம்" என்று அழமாட்டாத குறையாகச் சொன்னார் மருதமுத்து.

"அப்ப.... நிச்சயத்தை நடத்துங்க."

ஏறிட்டுப் பார்த்த மருதமுத்துவின் கண்கள் கலங்கியே இருந்தன. உங்களுக்கு மைத்துனன் சந்தானத்தை முழுசாத் தெரி

யாது. அவன் எதுக்கும் துணிஞ்சவன். ஏற்கெனவே இந்தப் பொண்ணு எனக்குத்தான்னு சொல்லிக்கிட்டிருந்தான். இப்பவும் எந்த நோக்கத்தோட பொருத்தமா வந்திருக்கானோ தெரியலியே?'' என்றார்.

குற்றாலலிங்கமும் திகைப்புடன் — முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

அவர் மகன் பூபதி—'இந்தப் பெண் மரகதத்தைத்தான் கட்டுவேன். இல்லை யென்றால் கல்யாணமே வேண்டாம்' என்று ஒற்றைக் காலில் நிற்கிறான். எல்லாமே கூடி வந்தபோது —இடையிலே கெட்டி முடிச்சாகவே விழுகிறதே.

''அப்ப என்ன முடிவு சொல்றீங்க ?'' என்று திகைப்பு மாறாமலே கேட்டார்.

''நிச்சயத்தை இரண்டு மாசம் கழிச்சு வைச்சுக்கலாம்.''

''அதிலேயாவது உறுதி இருக்கா ?'' என்றார் பெண் கேட்டு வந்த இன்னொருவர்.

'' நான் உறுதியாகவே இருக்கேன்'' என்று திடமாகவே சொன்னார் மருதமுத்து.

அடுத்து, வேறு என்ன பேச முடியும் ?

வந்தவர்கள்—கொண்டு வந்த தட்டுத் தாம்பாளங்களைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

அதுவரையிலும் வாய் திறக்காமலே இருந்த செல்லம்மாள், குனிந்து, முகத்தையோ கண்களையோ துடைத்துக் கொண்டு கூடத்துக்குள்ளே எட்டிப் பார்த்தாள்.

மருதமுத்து தலையில் கையை வைத்தவாறு உட்கார்ந்திருந்தார்.

இடையிலே மகள் மரகதத்தின் நினைவு வந்தது அவளுக்கு. திரும்பி உள் பக்கமாக நடந்தாள்.

மையத்து அறைக்குள்ளே கட்டிலிலே முகம் புதைத்துப் படுத்திருந்தாள் மரகதம். உடல் குலுங்குவதிலிருந்து அவள் அழுகிறாள் என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது.

மகளைப் பார்த்தவாறே, செல்லம்மாளும் செயலற்று நின்றாள்.

அப்போது, கொல்லைப் பக்கமாக நுழைந்து வந்த மேலத் தெருப் பையன் ஒருவன், பக்கத்தில் வந்து நின்று, ''சந்தானம் உங்களைக் கூப்பிடுகிறாரு'' என்று இரகசியமாகச் சேதியும் சொன்னான்.

மதியம் திரும்பி விட்டது.

கவலை மருதமுத்துவை வாட்டி எடுத்தது.

உடன்பிறந்தவனிடமிருந்து வந்த அழைப்பைக் கேட்டுத் திகைத்துப் போனவளாக, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் நின்ற செல்லம்மாளை, அப்போதே, ''அவனைப் பார்த்துத் தொலைத்து விட்டு வா'' என்று சொல்லி அனுப்பி வைத்துவிட்டு, அதே சிந்தனையோடு வாசல் திண்ணையிலே வந்து உட்கார்ந்து விட்டார்.

ஊருக்குள்ளே இவரை, 'அப்பாவி மனிதர்' என்று சொல்லுவார்கள். யாரையும் அதட்டிப் பேசத் தெரியாது இவருக்கு.

திண்ணையைவிட்டு இறங்காமலே அவர் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, செல்லம்மாளும் வந்து சேர்ந்தாள்.

''என்ன சொன்னான் ? இப்ப எதுக்கு வந்து குதிச்சிருக்கானாம்?'' என்று கவலையோடு கேட்டுக் கொண்டே எழுந்தார் மருதமுத்து.

படியேறிய செல்லம்மாள், '' உள்ளே வாங்க'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் நடந்தாள்.

மருதமுத்துவும் பின் தொடர்ந்தார்.

''அவன் பழைய பல்லவியைத்தான் பாடுகிறான்'' என்றாள் அவள் கூடத்தில் நின்று, திரும்பிப் பார்த்து.

இடையிலே என்னதான் இருந்தாலும் உடன்பிறப்பு என்பதும் ஒரு பக்கம் இருக்கும் இல்லையா ?

செல்லம்மாள் கலக்கத்தோடு சொன்னாள்:

''அவனும் கண் கலங்கத்தான் செய்யறான். எனக்கு





உறவுன்னு சொல்லிக்க வேறே யாரு இருக்காங்க? மரகதத்தைக் கட்டிக் கொடுங்க, நான் எல்லாத்தையும் மறந்திட்டு ஒழுங்குமுறையோட இருக்கேன். அதை நினைச்சுத்தான் ஓடியாந்தேன்னு சொல்றான்'' என்றான்.

''நீ என்ன சொன்னே?''

''நான் என்னத்தைச் சொல்றது? அவனைப் பார்க்கிறப்பவும் பரிதாபமாத்தான் இருக்கு'' என்றாள் செல்லம்மாள்.

''இருக்குமா உனக்கு? அந்த மானங்கெட்ட பயலுக்குப் பெண்ணைக் கொடுத்துப்போட்டு நானும்தான் உயிரோடே இருப்பேனா? காலையிலேயிருந்து மரகதம் அன்னந் தண்ணி இல்லாமக் கண் கலங்கிப் போயிருக்கா!'' என்று பதற்றத்துடன் சொன்னார் மருதமுத்து.

''ஆமா.... அவள் எங்கே மரகதம்?'' என்று கேட்டுப் பரபரப்புடன் உள் பக்கம் சென்றாள் செல்லம்மாள்.

மருதமுத்துவும் பின்தொடர்ந்தார்.

வீட்டுக்குள்ளே மரகதத்தைக் காணவில்லை.

செல்லம்மாள் ''மரகதம்!'' என்று அழைத்தவாறு பதற்றத்துடன் கொல்லைப் பக்கம் சென்றாள்.

அங்கும் மரகதத்தைக் காணவில்லை.

தேடியபோது அக்கம் பக்கத்திலும் அவள் இல்லை.

தீவு போல் வயல்களால் சூழ்ந்த அந்த இடலில், ஒரு கோவிலும், அதற்கொரு சுற்று மதிலும் இருக்கிறது. உள்ளூர்க் கைகள் மட்டுமல்லாமல், வெளியூரிலிருந்தெல்லாம் அங்கே வருவார்கள் சூதாடுவதற்கு. ஒளிவு மறைவுக்குத் தக்கதோர் இடமாக, சகல விதமான சூதாட்டங்களும் விடிந்து அடையும்வரையிலும் அங்கே நடந்து கொண்டிருக்கும். ஒவ்வொரு பாய் விரிப்புக்கும் முறையான கப்பப் பணம் சந்தானத்தைச் சேர்ந்துவிடும். விவரம் தெரிந்த பருவம் முதல் — இதிலேயே வளர்ந்து ஆளானவன் அவன். போக்கிரிகளுக்குத் தலைமை தாங்குவதிலும் ஆபத்து இருக்கிறதல்லவா? ஓராண்டுக்கு முன்பாக, இதில் அடிதடி என்று நடந்து, கையும் மெய்யுமாகப் பிடிபட்ட சந்தானத்துக்கு ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. விடுதலையாகி வந்ததும் அவனுக்கு வெட்கமும் வந்து விட்டதோ என்னவோ? இப்போது பல மாதங்கள் கழித்துத்தான் ஊருக்குள்ளே வந்திருக்கிறான்.

கோவிலின் உள்பக்கமாகச் சுற்றி வந்த சந்தானம், தலைவாசல் பக்கமாகத் திரும்பி வந்தபோது, கோவிலுக்கு முன்பாக மரகதம் தனியாக நின்று கொண்டிருப்பதைக் கண்டபோது, அவனது விழிகள் வியப்பால் விரிந்தன. அவனால் நம்பவும் முடியவில்லை. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான். மரகதமேதான்.

பொற்சிலையென அசையாது நின்றவள், அவனை ஏறிட்டுப் பார்த்தாள். பூவிதழ்களில் புன்னகையும் நெளிந்தது.

சந்தானத்துக்கு மெய்சிலிர்த்தது.

''என்னைத் தேடியே வந்தாயா மரகதம்?'' என்றவாறு உணர்ச்சிப் பெருக்கோடு அவன் அருகே நெருங்கி வந்தான். மரகதம் திரும்பிக் கோயிலுக்குள்ளே பார்த்து, ஒரு கும்பிடையும் போட்டுவிட்டு வாசற்படியிலேயே உட்கார்ந்தாள்.

அவளுக்கு அருகிலேயே வலது காலைப் படியின்மீது வைத்து, கவிழ்ந்து நின்று ''அக்காவே அனுப்பிச்சாங்களா?'' என்று கேட்டான் அவன்.

கன்னங்கள் குழிந்து சிவக்க, அவனை ஏறிட்டுப் பார்த்துத் தலையசைத்தாள் அவள்.

''மரகதம்... உன்னோட நினைவுதான் என்னையும் மனுசனாக்குது. இல்லையின்னா... எப்படி எப்படியோ தடம் புரண்டு அழிஞ்சு போயிருப்பேன்'' என்றான் அவன் உருக்கமாக.

''இந்த நினைவு இருந்தா ஊருக்குள்ளே நல்ல பேரு எடுத்திருப்பீங்களே. உங்களை நினைச்சு எவ்வளவு வேதனைப் பட்டிருக்கேன்னு எனக்குத்தான் தெரியும்'' என்றாள் அவள், அவனை ஏறிட்டுப் பார்த்து.

பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றுவிட்டவனைப் போல் மகிழ்ந்தான் அவன்.

''நீ மனசு வைச்சா... நான் மனுசனாயிருவேன்'' என்றான் அவன் ஆவலுடன்.

அவள் சிரித்தாள்.

''நான் மனசு வைச்சா மட்டும் எல்லாமே முடிஞ்சு போகுமா?'' என்று கேட்டாள்.

''இந்த உயிரே உனக்காகத்தான் இருக்கு. நான் என்ன செய்யணும் சொல்லு'' என்று பரபரப்புடன் கேட்டான் அவன்.

''முதல்லே உங்களை நினைக்கிறப்ப என் மனசுக்குத் தெளிவு வேணும் இல்லையா? அதுக்கு நீங்க ....நாலு வரம் தரணும்.... எனக்கு'' என்று ஒயிலாகச் சாய்ந்து கொண்டு கேட்டாள் அவள்.

''வரமா...? என்ன வரம்...? உனக்கில்லாததா?'' என்று சொல்லி மகிழ்வு பொங்கச் சிரித்தான் அவன்.

மரகதம் எழுந்தாள்.

''சிரிச்சா மட்டும் போதாது மாமா. வரத்தைக் கொடுத்துட்டு, வாழ்நாள் முழுதும் கடைப்பிடிச்சாகணும். இதிலே தவறினா... அப்பவே என்னைக் கொன்னுட்ட மாதிரியாகும்'' என்று மேலும் சொன்னாள் அவள்.

''என்ன வரம்னு சொல்லு மரகதம்...'' என்று உரிமையோடு மிக நெருக்கமாக நின்று கேட்டான் அவன்.

அவள் சொன்னாள்: ''முதல்லே நீங்க சூதாடக் கூடாது.''

''சரி... அந்தப் பக்கமே திரும்பலே'' என்றான் அவன் அவசரத்துடன்.

''தினமும் வேர்வை சிந்த வயல்லே உழைக்கணும்.''


''நீ சொல்றதைத் தட்டுவேனா?'' என்றான் அவன் உற்சாகத்துடன்.

''போதைப் பொருள் எதையுமே தொடக்கூடாது.''

''தொடலே... நிச்சயமாத் தொடலே.''

''கடைசியா... முக்கியமா... பெண்டாட்டியைத் தவிர வேறெந்தப் பெண்ணையும் மனசாலேகூட நினைக்கக் கூடாது.''

''நினைக்கலே..... உன் மேலே ஆணையா நினைக்கலே'' என்றான் அவன் பூரிப்புடன்.



''என் தம்பி நண்பனுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது.... ஆனால் அவன்தான் ரொம்ப வருத்தமாக இருக்கிறான்....''

''ஏன்? என்ன விஷயம்?''

''குழந்தைக்குத் தலையிலே மயிரே இல்லையாம்!''—தாஜா

மரகதம் சிரித்தாள்.

''கொடுத்த வாக்கை நீங்க நிச்சயமா காப்பாத்துவீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு மாமா! அதை வைச்சுத்தான் இப்பவே வரம் கேட்டுக்கறேன்'' என்றாள்.

''இந்த முத்தாலம்மன் சாட்சியா சத்திய வாக்காச் சொல்றேன் மரகதம். வாழ்நாள் முழுதும் கட்டின பெண்டாட்டியைத் தவிர வேறெந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன். இது உறுதி'' என்றான் சந்தானம் உணர்ச்சிப் பெருக்கோடு.

மரகதம் அவனையே இமையாது பார்த்தாள்.

''நீங்க சத்தியம் தவற மாட்டீங்கன்னு உறுதியா நம்பலாமில்லையா?'' என்று மேலும் கேட்டாள் அவள்.

அவன் உறுதியாகவே சொன்னான்.

''மரகதம்...! நேற்று வரையிலும் நான் கெட்டவனாகவே இருந்திருக்கேன். ஆனா இதுவரைக்கும் எதுக்காகவும் சத்தியம் செய்யலே. இப்பச் செய்திருக்கேன். இதிலே பிறந்து தவறவே மாட்டேன்'' என்றான்.

''உங்க மேலே எனக்கு முழுசா நம்பிக்கை இருக்கு'' என்றவள், அவன் முகம் நோக்கி ''ஏன் மாமா பூமயில்னு ஒருத்தியை நினைவிருக்கா உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

சந்தானம் திடுக்கிட்டான்.

''பூமயிலா... யாரு...'' என்றான்.

மரகதத்துக்கு நொடிப் பொழுதில் ஆவேசம் வந்து விட்டது.

''பூமயில்தான்! கடந்த ஆறு மாச காலமா அவளோட இல்லறம் நடத்தியிருக்கீங்க. நீங்க மறுத்தாலும், மறைத்தாலும் எடுக்காது'' என்றாள் துடிப்புடன்.

''யாரு சொன்னது?'' என்று கேட்டுக் குறுக்கே பாய்ந்தான் அவன்.

''தற்செயலாகத்தான். உங்களையே தேடி வந்த பூமயிலையும் சந்தித்தேன். கொஞ்ச நேரத்திலே ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுக்கிட்டோம். நீங்களும் பாருங்க. அப்பவாவது உங்க நெஞ்சிலே ஈரம் கசியும்'' என்ற மரகதம், வாசல் பக்கம் திரும்பி ''பூமயில், உள்ளே வாம்மா'' என்று அழைத்தாள்.

சொல்லி வைத்தபடியே, வெளியே மறைவில் நின்று கொண்டிருந்த பூமயில், அழுதழுது சிவந்துவிட்ட விழிகளுடன், அலைந்தலைந்து தளர்ந்துவிட்ட நடையுடன் உள்ளே நுழைந்தாள்.

சந்தானம் செயலற்றுப் போனவனைச் சிலையாக நின்றான்.

இவள் இங்கே — இடம் தெரிந்து எப்படி வந்து சேர்ந்தாள்?

அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த மரகதம் குமுறலோடு கூறினாள்:

''முத்தாலம்மனை முன்னாலே வைச்சுச் சத்தியம் செய்திருக்கீங்க!''

சந்தானம் இருவரையும் வெறித்துப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான்.

''என்னை ஜெயிச்சுட்டே மரகதம்'' என்றான் பெருமூச்சோடு.

''நீங்க கொடுத்த வரம் கொடுத்ததாகவே இருக்கட்டும் மாமா. இனிமேலாவது மத்ததை யெல்லாம் மறந்திடுங்க. நம்மகிட்டே பொன்னு விளையற பூமி இருக்கு. அதிலே கருத்தோட பாடுபட்டுப் பூமயிலோட குடியிருங்க. அதைப் பார்த்து நான் பெருமைப் படுவேன். பூரிச்சுப் போவேன்'' என்றாள் பாச உணர்வோடு.

''இல்லே மரகதம்!— இந்த மண்ணை மிதிக்கிறப்ப என்னாலே எதையுமே மறக்க முடியாதம்மா'' என்ற சந்தானம் சற்றுக் கழித்து, ''நீயும்... இந்த மாமனுக்கொரு வாக்குக் கொடுப்பியாம்மா?'' என்று கேட்டான்.

மரகதம் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவனது கண்களும் கலங்கித்தான் இருந்தன.

''என்ன வாக்கு மாமா?'' என்று அவளும் கண் கலங்கவே கேட்டாள்.

''நீ பெற்றெடுக்கும் மகனுக்குச் சந்தானம்னு பேர்வைச்சு அவனையாவது நல்லவனா வளர்த்து ஆளாக்கு. அது போதும் எனக்கு. நானும் பூமயிலும் இப்படியே போறோம். எப்படியும் பிழைச்சுக்குவோம்'' என்றான் சந்தானம் கண்களைத் துடைத்துக்கொண்டே.

ஏமாறாதே, ஏமாற்றாதே!



பள்ளி ஆரம்ப மணி ஒலிக்கவில்லை. வெளியே தன் தோழியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் எனது தங்கை. அவளையும், அவளது தோழியையும் அழைத்தாள் ஒரு பெண்மணி. இருவரும் சென்றனர். குழந்தைகள்தானே! எனது தங்கையை அப்பெண்மணி குசலம் விசாரித்தாள், 'அம்மா சௌக்கியமா, அப்பா சௌக்கியமா?' என்று.

பிறகு, என் தங்கையின் தோழியை நோக்கி 'நீ பள்ளிக்குச் செல். இவளை அப்புறம் அனுப்புகிறேன்' என்று சொல்லி அனுப்பிவிட்டாள். எனது தங்கையும் அந்தப் பெண்மணியும் கடை வீதிக்குச் சென்றனர். அங்கு ஓரிடத்தில் அமர்ந்து எனது தங்கையின் காது வளையத்தினைக் கழற்றுமாறு கூறினாள் அந்த மாது. என் தங்கை மறுத்திருக்கிறாள். உடனே அந்தப் பெண்மணி பத்துக் காசு கொடுத்துக் கொய்யாப் பழம் போய் வாங்கி வருமாறு கூறினாள்.

பழம் வாங்கி வந்த பிறகு தன் மடியின் மீது குழந்தையை உட்கார வைத்து லாகவமாக காது வளையங்கள் இரண்டையும் கழற்றினாள். பின்னர் அவ்விரண்டு வளையங்களையும் என் தங்கையிடம் காண்பித்து அதை ஒரு காகிதத்தில் பொட்டலம் கட்டினாள்.


பள்ளிக்கு நேரமாகிவிட்டது. நீ பள்ளிக்குச் செல் என்று கூறிப் பொட்டலத்தை என் தங்கையின் பையில் போட்டாள் அப்பெண்மணி. 'பொட்டலம் பத்திரம். எங்கேயாவது போட்டுவிடப் போகிறாய். வீட்டில் போய்ப் போட்டுக்கொள்' என்று சொல்லி என் தங்கையைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டாள்.

பள்ளிக்கு வந்த என் தங்கை பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தாள். பொட்டலத்தில் மடித்து வைக்கப்பட்டிருந்ததோ இரண்டு கற்கள்!

இது உண்மைச் சம்பவமாகும். உங்கள் வீட்டுக் குழந்தைகளை எச்சரித்து வையுங்கள்.

ஜி. தண்டபாணி

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பமிக்கமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

முப்பத்தோராம் அத்தியாயம்

பிக்ஷுவின் சபதம்

புலிகேசியின் கதி என்னவாயிற்று? இப்படி நடந்திருக்குமா, அப்படி நடந்திருக்குமா என்று வெகு நேரம் விவாதித்த பிறகு அதைப் பற்றி மேலும் விவாதிப்பதில் பயனில்லை என்ற முடிவு ஏற்பட்டது. சத்ருக்னனுடைய தலைமையில் போர்க்களமெல்லாம் நன்றாகத் தேடிப் பார்த்துப் புலிகேசியின் உடல் கிடைத்தால் எடுத்து வருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு மாமல்லரும் மற்றவர்களும் வாதாபியை நோக்கித் திரும்பினார்கள்.

* * *

வாதாபிக் கோட்டைக்கு வெளியே சற்றுத் தூரத்தில் காபாலிக மதத்தாரின் பலிபீடம் இருந்தது என்பதை நேயர்கள் அறிவார்கள்.

வாதாபிப் பெரும் போர் முடிவுற்றதற்கு மறு நாள் இரவு அந்தக் காபாலிகர் பலிபீடத்துக்குச் சமீபத்தில் ஒரு பயங்கர சோக நாடகம் நடைபெற்றது.

கிழக்கே அப்போதுதான் உதயமாகிக் கொண்டிருந்த சந்திரனின் கிரணங்கள் மரங்களின் வழியாகப் புகுந்து வந்து மொட்டை மொட்டையாக நின்ற பாறைகள்மீது விழுந்தபோது, அந்தக் கறுத்த பாறைகளும் அவற்றின் கறுத்த நிழல்களும் கரிய பெரிய பேய்களின் உருவங்களைக்



கொண்டு அந்தப் பாறைப் பிரதேசத்தைப் பார்ப்பதற்கே பீதிகரமாகச் செய்து கொண்டிருந்தன.

பாறைகளின் ஓரமாகச் சில சமயம் நிழல்களில் மறைந்தும் சிலசமயம் நிலா ஒளியில் வெளிப்பட்டும் ஒரு கோரமான பெண் உருவம் வந்து கொண்டிருந்தது. அந்த உருவம் தோளின் மீது இன்னொர் உடலைச் சுமந்து கொண்டு நடந்தது.

அந்த உடல் விறைப்பாகக் கிடந்த விதத்திலிருந்து அது உயிரற்றது என்பதை எளிதிலே ஊகிக்கலாம்.

அவ்விதம் தோளிலே பிரேதத்தைச் சுமந்து கொண்டு நடந்த பெண் உருவமானது நிலா வெளிச்சத்தில் தோன்றியபோது அதன் நிழல் பிரம்மாண்ட ராட்சஸ வடிவம் கொண்டு, ஒரு பெரும் பூதம் தான் உண்பதற்கு இரை தேடி எடுத்துக் கொண்டு வருவது போலத் தோன்றியது.

சற்று அருகில் நெருங்கிப் பார்த்தோமானால், அந்தப் பெண் உருவம் கற்பனையில் உருவகப்படுத்திக் கொள்ளும் பேயையும், பூதத்தையும் காட்டிலும் அதிகப் பயங்கரத் தோற்றம் அளித்தது என்பதை அறியலாம்.

கறுத்துத் தடித்த தோலும், குட்டையான செம்பட்டை மயிரும், அனலைக் கக்கும் கண்களுமாக அந்தப் பெண் உருவம் காவியங்களில் வர்ணிக்கப்படும் கோர ராட்சஸிகளைப் பெரிதும் ஒத்திருந்தது.

ஆனால், அந்தப் பெண் பேய் தன் தோளில் போட்டுக் கொண்டு சுமந்து வந்த ஆண் உருவம் அத்தகைய கோரமான உருவம் அல்ல. இராஜ களை பொருந்திய கம்பீர முகத் தோற்றம் கொண்டது !

அது யார் ? ஒரு வேளை....?


* * *

மேற்கூறிய கோர ராட்சஸி ஒரு பாறையின் முனையைத் திரும்பியபோது, எதிரில் யாரோ வருவது கண்டு திடுக்கிட்டுத் தயங்கி நின்றாள். அவள் திடுக்கிட்டதற்குக் காரணம் என்ன? பயமா? அவளுக்குக் கூடப் பயம் உண்டா ? அல்லது வேறு ஏதேனும் காரணமா ?

எதிரே வந்த உருவம் சிறிதும் தயங்காமல் மேலும் வந்து கொண்டிருந்தது. அருகில் நெருங்கி வந்ததும், ''ரஞ்சனி! நீதானா ?'' என்று புத்தபிக்ஷுவின் குரல் கேட்டது.

அந்தக் கோர ராட்சஸியின் பெயர் 'ரஞ்சனி' என்று அறிந்து நமக்கு வியப்பு உண்டாகிறதல்லவா ? ஆயினும், அந்தப் பெண் ஒரு காலத்தில், 'ரஞ்சனி' என்னும் அழகிய பெயருக்கு உரியவளாய், பார்த்தவர் கண்களை ரஞ்சிக்கச் செய்பவளாய் அவர்கள் உள்ளத்தை மோகிக்கச் செய்பவளாய்த்தான் இருந்தாள். அவளை இம்மாதிரி கோர வடிவங் கொண்ட காபாலிகையாகச் செய்தவர் புத்தபிக்ஷுதான் என்பதை முன்னமே அவருடைய வாய் மொழியினால் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

பிக்ஷுவின் குரலைக் கேட்டதும், காபாலிகையின் திகைப்பு இன்னும் அதிகமானதாகத் தோன்றியது. கற்சிலை போல் ஸ்தம்பித்து நின்றவளைப் பார்த்து.







புத்தபிக்ஷு மறுபடியும், ''ரஞ்சனி! இது என்ன மௌனம்? எங்கே போய் வேட்டையாடிக் கொண்டு வருகிறாய்?'' என்று கேட்டார்.

காபாலிகையின் திகைப்பு ஒருவாறு நீங்கியதாகத் தோன்றியது.

''அடிகளே! நிஜமாக நீங்கள்தானா?'' என்று கேட்டாள். அவளுடைய கடின மான குரலில் வியப்பும் சந்தேகமும் தொனித்தன.

''இது என்ன கேள்வி? நான்தானா என்பதில் உனக்கு என்ன சந்தேகம் வந்தது? உன்னைத் தவிர இந்த நள்ளிர வில் உன்னை யார் தேடி வருவார்கள்? உன் குகையில் உன்னைத் தேடிக் காணா மல் எங்கே போயிருக்கிறாய் என்று பார்க்கக் கிளம்பினேன்! அது என்ன? யார் உன் தோளில்? எந்தப் பாவியின் பிரேதத்தைச் சுமந்து வருகிறாய்? இப்போதெல்லாம் உனக்கு நல்ல வேட்டை போலிருக்கிறது!''

இவ்விதம் பிக்ஷு சொல்லிக் கொண்டு வந்தபோது காபாலிகை தான் இத்தனை நேரமும் தோளில் சுமந்து கொண்டிருந்த உடலைத் தொப் பென்று கீழே போட்டாள்.

''நல்ல வேடிக்கை!'' என்று சொல்லிவிட்டுக் கோரமாகச் சிரித்தாள்.

''என்ன வேடிக்கை? இந்தச் சவத்தை எங்கே கண்டு எடுத்தாய்?'' என்று பிக்ஷு கேட்டார்.

''அடிகளே! தங்களை நினைத்து இரண்டு காத தூரம் கண்ணீர் விட்டு அழுதுகொண்டே நடந்து வந்தேன். அவ்வளவும் வீணாய்ப் போயிற்று!'' என்றாள் காபாலிகை.

''கண்ணீர் விட்டாயா? என்னை நினைத்து ஏன் கண்ணீர்விட வேண்டும்? இது என்ன வேடிக்கை?'' என்றார் பிக்ஷு.

''பெரிய வேடிக்கைதான். அந்த வேடிக்கையை அடியிலிருந்து சொல்லு கிறேன், கேளுங்கள்!'' என்று காபா லிகை ஆரம்பித்தாள்.

''யுத்த வேடிக்கை பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். போர்க்களத்துக்குக் கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு குன்றின் உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருந் தேன். அப்பப்பா! என்ன யுத்தம்! என்ன சாவு! எத்தனை நரபலி! காபாலி கர் இங்கே மாதம் ஒரு தடவை வந்து ஒரு நரபலி கொடுக்கிறார்களே! இது என்ன பிரமாதம்? அங்கே லட்சோப இலட்சம் மனிதர்களையும் ஆயிரம் பதினாயிரம் யானைகளையும் குதிரைகளை யும் பலி கொடுத்தார்கள். மூன்று நாள் இரவும் பகலும் பலி நடந்தது. கடைசி யில், ஒரு கட்சியார் ஓடவும் இன்னொரு கட்சியார் துரத்தவும் ஆரம்பித்தார்கள். யாரை யார் துரத்துகிறார்கள் என்று கூட நான் கவனிக்கவில்லை. எங்கே என்னைப் பிடித்துக் கொள்வார்களோ என்று பயந்து ஓட்டம் பிடித்தேன். இன்று பகலெல்லாம் காட்டில் ஒளிந்து ஒளிந்து வந்தேன். சாயங்காலம் ஆன போது பின்னால் ஒரு குதிரை ஓடி வரும் சத்தம் கேட்டது. என்னைப் பிடிக்கத் தான் யாரோ வருகிறார்கள் என்று மேலும் வேகமாய் ஓடினேன். கொஞ்ச நேரம் குதிரையும் தொடர்ந்து ஓடி வந்தது. நன்றாக இருட்டியதும் யார் தான் என்னைப் பிடிக்க வருகிறார்கள் என்று பார்ப்பதற்காக ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன். என்னைத் துரத்தி வந்த குதிரை திடீரென்று கீழே விழுந்தது. அதன் மேலிருந்த மனித னும் அப்படியே கிடந்தான். எழுந் திருக்க வில்லை. அருகிலே சென்று பார்த்தபோது குதிரை மரணாவஸ்தை யில் இருந்தது. அதன் மேலிருந்த மனிதன் கிடந்த மாதிரியிலிருந்து அவன் இறந்து போய் வெகு நேரம் ஆகி யிருக்க வேண்டும் என்று தோன்றியது. அவன் கால்கள் குதிரையின் கடிவாளத் தில் மாட்டிக் கொண்டிருந்தபடியால் கீழே விழாமல் தொங்கிக் கொண்டே வந்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. குனிந்து அவன் முகத்தைப் பார்த் தேன். தங்களுடைய முகம் மாதிரி இருந்தது. நான் பைத்தியக்காரிதானே? தாங்கள்தான் என்று நினைத்துத் தோளில் போட்டுக் கொண்டு அழுது கொண்டே வந்தேன்!''

அப்போது புத்த பிக்ஷுவுக்குத் திடீரென்று ஏதோ ஓர் எண்ணம் தோன்றி யிருக்க வேண்டும். சட்டென்று கீழே குனிந்து தரையில் கிடந்த உடலின் முகத்தை நிலா வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தார்.

''தம்பி! புலிகேசி!'' என்று பிக்ஷு வீறிட்டு அலறியது அந்த விசாலமான



புது பாண்ட் தைக்கும்போதே அது கிழிந்து போன பின் ஒட்டுப் போட்டது போல் தோற்றமளிக்கும் படி வேறு துணியை ஒட்டுப் போட்டுத் தைத்துக் கொள்கிறார்கள். அமெரிக்காவில் இது இன்றைய இளைஞர்கள் நாகரிகம்.

அமெரிக்கன் கோல் - பாபு

உலகிலேயே சிறந்த ஆறு டாக்டர்கள்: சூரிய ஒளி, தண்ணீர், காற்று, ஓய்வு, உடற்பயிற்சி, மிதமான உணவு.
டெக்கான் ஹெரால்ட் - பாலி

பாறைப் பிரதேசம் முழுவதிலும் எதிரொலி செய்தது.

''ரஞ்சனி ! நீ போய் விடு! சற்று நேரம் என்னைத் தனியே விட்டுவிட்டுப் போ! இங்கு நிற்காதே!'' என்று பிக்ஷு விம்மலுடன் சொன்னதைக் கேட்டுக் காபாலிகை பயந்து போய் அங்கிருந்து விலகிச் சென்று பாறையின் மறைவில் நின்றாள்.

பிக்ஷு கீழே உட்கார்ந்து புலிகேசியின் உடலைத் தமது மடியின் மீது போட்டுக் கொண்டார்.

''தம்பி! உனக்கு இந்தக் கதியா? இப்படியா நீ மரணமடைந்தாய்? இந்தப் பாவியினால் அல்லவா நீ இந்தக் கதிக்கு உள்ளாக நேர்ந்தது?'' என்று சொல்லிவிட்டுப் பிக்ஷு தமது மார்பிலும் தலையிலும் மாற்றி மாற்றி அடித்துக் கொண்டார்.

''ஐயோ ! தம்பி! உனக்கு நான் துரோகம் செய்துவிட்டதாக எண்ணிக் கொண்டேயல்லவா நீ இறந்து போனாய்? என் உயிருக்குயிரான சகோதரனுக்குத் தாயின் கர்ப்பத்திலே என்னோடு பத்து மாதம்கூட இருந்து பிறந்தவனுக்கு—நான் துரோகம் செய்வேனா? மாமல்லனைப் பயங்கரமாகப் பழி வாங்குவதற்காக அல்லவா நான் சூழ்ச்சி செய்தேன்? அதை உன்னிடம் சொல்லுவதற்கு முடியாமல் இப்படி நடந்துவிட்டதே !''

மறுபடியும் பிக்ஷு தமது மார்பில் ஓங்கி அடித்துக் கொண்டு சொன்னார்: ''பாழும் பிக்ஷுவே ! உன் கோபத்தில் இடி விழ ! உன் காதல் நாசமாய்ப் போக! உன் சிவகாமி! ஆ! சிவகாமி என்ன செய்வாள்? தம்பி! உனக்கு நான் துரோகம் செய்யவில்லை. நம் தேசத்துக்கும் நான் துரோகம் செய்து விடவில்லை. அன்றைக்கு அஜந்தாவில் நீயும் நானும் கொஞ்சம் பொறுமையாக மட்டும் இருந்தோமானால் இம்மாதிரி விபரீதம் நேர்ந்திராதே ! இந்த யுத்தம் நடக்கவே நான் விட்டிருக்க மாட்டேனே! பல்லவ நாட்டார் அத்தனை பேரையும் பட்டினியால் சாகப் பண்ணியிருப்பேனே ! மாமல்லனையும் உயிரோடு பலி கொடுத்திருப்பேனே ? ஐயோ ! இப்படி ஆகிவிட்டதே !''

பிக்ஷு புலிகேசியின் உடலை மடியிலிருந்து மெதுவாக எடுத்துக் கீழே வைத்தார். எழுந்து நின்று இரு கைகளையும் வானத்தை நோக்கித் தூக்கிக் கொண்டு, பாறை மறைவிலிருந்த காபாலிகைக்குக்கூட ரோமம் சிலிர்க்கும் படியான அலறுகின்ற குரலில் உரக்கக் கூறினார்: ''தம்பி! புலிகேசி! உன் மரணத்துக்குப் பழி வாங்குவேன் ! புத்த பகவானின் பத்ம பாதங்களின் மேல் சத்தியம் செய்கிறேன். கபாலம் ஏந்தும் சம்ஹார ருத்ரன் தலை மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இரத்த பலி கேட்கும் சக்தி பத்ரகாளியின் பேரில் சத்தியம் வைத்துச் சபதம் செய்கிறேன். உன்னைக் கொன்றவர்களைப் பழி வாங்குவேன்!''.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

காபாலிகையின் காதல்

வானை நோக்கிக் கைகளைத் தூக்கிப் பல தெய்வங்களின் பேரில் ஆணையிட்டுச் சபதம் செய்த பிக்ஷு மறுபடியும் கீழே உட்கார்ந்து புலிகேசியின் உயிரற்ற உடலை எடுத்துத் தம் மடியின் மீது வைத்துக் கொண்டார்.

''தம்பி! நீ சாகவில்லை. இத்தனை நாளும் நாம் ஒருயிரும் இரண்டு உடலுமாக வாழ்ந்து வந்தோம். இப்போது உயிரைப் போல் உடம்பும் ஒன்றாகிவிட்டோம். என் உயிரோடு உன் உயிர் ஒன்றாகக் கலந்து விட்டது. இனிமேல் நீதான் நான்; நான்தான் நீ! இரண்டு பேர் இல்லை!''

இவ்விதம் உருகிக் கனிந்த குரலில் கூறிவிட்டுப் புத்த பிக்ஷு தமது தேகம் முழுவதும் குலுங்கும்படியாக விம்மி விம்மி அழுதார்.

சுயப் பிரக்ஞையை அறவே இழந்து சோகக் கடலின் அடியிலே அவர் ஆழ்ந்து விட்டார் என்று தோன்றியது.

இரவு விரைவாகச் சென்று கொண்டிருந்தது. சந்திரன் மேலே மேலே வந்து கொண்டிருந்தது.

பாறைகள் — மரங்களின் நிழல்கள் வர வரக் குட்டையாகிக் கொண்டு வந்தன.

நெடுநேரம் பாறை மறைவில் நின்று காத்துக் கொண்டிருந்த காபாலிகை, கடைசியில் பொறுமை இழந்தாள்.



டி. கே. சி. நினைவு நாள் 29-8-75



இறக்கப் பிறப்பது மன்னுயிர்
எஞ்ஞான்றும்
துறக்கப் படைப்பது செல்வம் – அறிவு
சிறக்கப் படிப்பது தொன்னூல், அறவே
மறக்கப் படிப்பது தான்!

— டி. கே. சி.

மகிழ்ச்சியை மதிப்பிட முடியுமா?

சுற்றுப் பிரயாணத்தின்போது டி.கே.சி.க்குச் சொந்தமான வெள்ளித் தம்ளர் காணாமல் போய் விட்டது. சில நாட்கள் கழித்து அந்த வெள்ளித் தம்ளரைக் கண்டு பிடித்து ஒரு நண்பர் டி. கே.சி யிடமே அதை ஒப்படைத்துவிட்டார். காணாமல் போன பொருள் கிடைத்துவிட்டதே சந்தோஷம்.

சொல்கிறார்: "வெள்ளித் தம்ளர் கிடைத்துவிட்டது. இனிமேல் காணாமல் போனாலும் கவலை இல்லை! காணாமல் போன பொருள் கைக்கு வந்து விட்டதே! பொருள் அல்ல விஷயம். கைக்கு வந்து விட்டதே அதுதான் விஷயம்."

காணாமல் போனது வெள்ளியாய் இருந்தால் என்ன, மண் பாண்டமானால் என்ன, அது திரும்பக் கிடைக்கும்போது ஏற்பட்ட உணர்ச்சி இருக்கிறதே, அதுதான் மதிக்கத்தக்கது. தம்ளரைத் திரும்பவும் இழக்கலாம். ஆனால், திரும்பக் கிடைத்தபோதுள்ள உணர்ச்சியை இழக்க வேண்டியதில்லையே!



டி.கே.சி. அவர்களைச் சந்தித்த ஸ்காட்லாண்டு தேசத்துப் பாதிரியார் ஒருவர் சிறிது ஏளன பாவத்துடன், "ஸ்காட்லாண்டு தேச மக்களுக்கு மரங்கள் என்றால் ரொம்பப் பிரியம். இந்தியர்களுக்கு எப்படியோ?" என்றார்.

"மரங்களிடத்தில் எங்களுக்குப் பிரியம் கிடையாது. பக்தியே செலுத்துகிறோம்" என்று பதில் சொன்னார் டி. கே. சி.

எஸ். மகராஜன் அவர்கள் எழுதிய 'டி. கே. சி. ஜாதகம்' கட்டுரையிலிருந்து தகவல்:வீரவேலுசாமி

மெதுவாகப் பாறை மறைவிலிருந்து வெளிப்பட்டு மெள்ள மெள்ள அடிமேல் அடிவைத்து நடந்து வந்தாள்.

பிக்ஷுவின் பின்புறத்தில் வந்து நின்று அவருடைய தோள்களை இலேசாக விரல்களால் தொட்டாள்.

புத்தபிக்ஷு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

''ரஞ்சனி! நீதானா?'' என்றார்.

''ஆம், நான்தான்!'' என்றாள் காபாலிகை.

''இன்னும் நீ போகவில்லையா?''

''போகச் சொல்லி ஆக்ஞாபித்தால் போய்விடுகிறேன்.''

''வேண்டாம், இரு! இந்தப் பெரிய உலகில் என்பேரில் அன்பு உடையவள் நீ ஒருத்திதான் இருக்கிறாய்.''

''என்பேரில் அன்பு கொண்டவர்கள் ஒருவருமே இல்லை.''

''ஆ! ரஞ்சனி! ஏன் அப்படிச் சொல்கிறாய்? நான் ஒருவன் இல்லையா?'' என்றார் பிக்ஷு.

சற்று முன் அவருடைய குரலில் தொனித்த கோரம் எங்கேயோ போய் இப்போது அதில் கபடம் கலந்த நயிச்சிய பாவம் தொனித்தது.

''அடிகளே! ஏன் இந்தப் பேதையை ஏமாற்றப் பார்க்கிறீர்? இந்தக் கோர அவலட்சண உருவத்தின் பேரில் யாருக்குத்தான் பிரியம் ஏற்படும்?'' என்று காபாலிகை கேட்டாள்.

''காதலுக்குக் கண்ணில்லை என்று நீ கேட்டதில்லையா? நீ எத்தனை குரூபியாக இருந்தாலும் என் கண்ணுக்கு நீதான் ரதி!'' என்றார் புத்தபிக்ஷு.

''வஞ்சக பிக்ஷுவே! ஏன் இப்படி மனமறிந்து பொய் சொல்லுகிறீர்? என்னை இந்த அலங்கோலம் ஆக்கினது நீர்தானே? என்பேரில் அன்பு இருந்

தால் இப்படிச் செய்திருப்பீரா?'' என்றாள் அந்தக் கோர காபாலிகை.

''ரஞ்சனி! இதைப்பற்றி எத்தனை தடவை உனக்குச் சொல்லி விட்டேன்? அஜந்தாச் சித்திரத்தைப் போன்ற அற்புத அழகோடு வாதாபி அரண்மனையில் நீ இருந்தால் யாராவது ஓர் இராஜ குமாரன் உன்னை அபகரித்துக் கொண்டு போய்விடுவான் என்றுதானே இப்படிச் செய்தேன்?''

''என்னைத் தாங்களே அபகரித்துக் கொண்டு போயிருக்கலாமே? யார் வேண்டாம் என்று சொன்னது?''

''அதையும்தான் உனக்கு ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன். மறுபடியும் சொல்லுகிறேன். நான் செய்ய வேண்டிய காரியங்கள் சில இருந்தன. முக்கியமாக, புத்த சங்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டி யிருந்தது.''

''இப்படித்தான் எத்தனையோ காலமாய்ச் சொல்லி வருகிறீர். எப்போதுதான் உமக்கு விடுதலை கிடைக்கப் போகிறது?''

''ரஞ்சனி! எனக்கு விடுதலை கிடைத்து விட்டது! உன் மனோரதம் நிறைவேறுவதற்கான பெருந் தடை நீங்கி விட்டது. உனக்குச் சந்தோஷம் தானே?'' என்று பிக்ஷு நயமாகக் கூறினார்.

''சத்தியமாகச் சொல்லுகிறீரா?'' என்று ரஞ்சனி கேட்டாள்.

''முக்காலும் சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் விடுதலை கேட்கவே தேவை ஏற்படவில்லை. புத்த சங்கத்தாரே என்னைப் பிரஷ்டம் செய்து விட்டார்கள். உன்னுடைய தபஸின் சக்தியினால்தான் இது நடந்திருக்க வேண்டும்.''

காபாலிகை இன்னும் சந்தேகம் நீங்காதவளாய், ''ஏன் பிரஷ்டம் செய்தார்கள்? சர்வ சக்தி வாய்ந்த நாகநந்தி பிக்ஷுவைப் புத்த சங்கத்தார் எப்படிப் பிரஷ்டம் செய்யத் துணிந்தார்கள்?'' என்று கேட்டாள்.

''அது பெரிய கதை. அப்புறம் சொல்லுகிறேன். ரொம்ப முக்கியமான வேலை இப்போது நமக்கு இருக்கிறது. இதோ இந்த உடலை உடனே தகனம் செய்ய வேண்டும். யாருக்காவது தெரிந்து விட்டால் காரியம் கெட்டு விடும். எங்கே ரஞ்சனி? கட்டைகள் கொண்டு வந்து இங்கேயே சிதை அடுக்கு பார்க்கலாம்?''

''என்னால் அது முடியாது.''

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? எனக்கு உதவி செய்ய மாட்டாயா?'' என்றார் புத்த பிக்ஷு.



வாராவாரம் வர வேண்டுமா ?

அந்தத் தொழிற்சாலையில் நிறைய கம்ப்யூட்டர்களை வைத்துவிட்டார்கள். முதலாளி சொன்னார்: ''இதனால் பல தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமல் போய்விடும். இருந்தாலும் வழக்கமான வாரச் சம்பளம், அலவன்ஸ், மருத்துவ வசதி எல்லாவற்றையும் தொடர்ந்து கொடுக்கப் போகிறோம். வெள்ளிக்கிழமைகளில் வந்து சம்பளம் வாங்கிக் கொண்டு போக வேண்டியதுதான் உங்கள் வேலை.''

தொழிலாளர் யூனியன் தலைவரான முல்லா கேட்டார்: ''என்ன அநியாயம்! ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வரவேண்டுமா ?''

— பாலாஜி

''புத்த சங்கத்திலிருந்து உம்மை ஏன் பிரஷ்டம் செய்தார்கள்? அதைச் சொன்னால் உதவி செய்வேன்.''

''சுருக்கமாகச் சொல்கிறேன், கேள்! காஞ்சி மாமல்லன் படையெடுத்து வருகிறான் என்ற விஷயம் எனக்கு முன்னமே தெரியும். ஆனால் அதைச் சில காரணங்களுக்காக என் சகோதரனிடம் சொல்லாமல் இரகசியமாய் வைத்திருந்தேன். இது தெரிந்தபோதுதான் சகோதரத் துரோகமும் தேசத் துரோகமும் செய்து விட்டதாக இந்த நிர்மூடன் எண்ணினான். நான் உயிர் கொடுத்துக் காப்பாற்றி இவ்வளவு மேன்மைப் பதவிக்குக் கொண்டு வந்த என் சகோதரன் என்னைப் பார்த்து 'உயிரோடிருக்கும் வரையில் என் முகத்தில் விழிக்காதே' என்று சொல்லி அனுப்பினான். அதன் பலனாகத்தான் இப்போது இங்கே அநாதைப் பிரேதமாகக் கிடக்கிறான். நீயும் நானும் இவனை எரித்துத் தகனம் செய்தாக வேண்டும்!'' என்று சொல்லிப் புத்த பிக்ஷு பெருமூச்சு விட்டார். மறுபடியும் கூறினார்: ''இதெல்லாம் அஜந்தா சங்காராமத்துப் புத்த பிக்ஷுக்களுக்குத் தெரிந்தது. இத்தனை காலமும் என்னால் கிடைத்த உதவிகளையெல்லாம் பெற்று வந்தவர்கள், நான் சக்கரவர்த்தியின் கோபத்துக்கு ஆளானேன் என்று தெரிந்ததும் உடனே என்னைச் சபித்துப் புத்த சங்கத்திலிருந்து பிரஷ்டம் செய்தார்கள். அதன் பலனை அவர்களும் அனுபவிக்க நேர்ந்தது. ரஞ்சனி! நீலகேசியை எதிர்ப்பவர்கள் யாராயிருந்தாலும் தப்பிப் பிழைக்க முடியாது. அவர்களுடைய கதி அதோ கதிதான்!''

''அஜந்தா பிக்ஷுக்களுக்கு அப்படி என்ன கதி நேர்ந்தது?'' என்று காபாலிகை கேட்டாள்.

''வேறொன்றும் இல்லை. அப்புறம் ஒரு வாரத்துக்கெல்லாம் அஜந்தா பிக்ஷுக்கள் சங்காராமத்தை மூடி விட்டு உயிர் தப்புவதற்கு ஓடும்படி நேர்ந்தது. நாடு நகரங்களில் எல்லாம் 'அஜந்தா கலை விழா, புத்த பிக்ஷுக்க

ளின் சூழ்ச்சி, காஞ்சி மாமல்லனுக்கு ஒத்தாசையாக அவர்கள் செய்த வஞ்சகமான ஏற்பாடு' என்ற வதந்தி பரவியது. வதந்திக்கு விதை போட்டவன் நான்தான். ஜனங்கள் கோபங்கொண்டு அஜந்தாவுக்குத் திரண்டு போய்ச் சங்காராமத்தையும் அங்குள்ள சிற்பச் சித்திரங்களையும் அழித்துப் போடுவதற்கு ஆயத்தமாகி விட்டனர். இது தெரிந்ததும் பிக்ஷுக்கள் அஜந்தாவுக்குப் போகும் அந்தரங்கப் பகிரங்க வழிகள் எல்லாவற்றையும் மூடி மறைத்து விட்டு வடக்கே ஹர்ஷனுடைய இராஜ்யத்தை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள். அப்புறம் அஜந்தாவுக்குப் போக நானே பிரயத்தனம் செய்தேன். என்னாலேயே வழி கண்டு பிடிக்க முடியவில்லை. பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம் என்று திரும்பி வந்து விட்டேன். நல்ல சமயத்திலேதான் வந்தேன். ரஞ்சனி! எழுந்திரு! சீக்கிரம் நான் சொன்னபடி செய்! உடனே சிதை அடுக்கு! நெருப்பு கொண்டு வா!''

''சக்கரவர்த்தியைத் தகனம் செய்த பிறகு என்ன செய்யப் போகிறீர்கள்?''

''ரஞ்சனி! சக்கரவர்த்தியின் மரணத்தைப் பற்றியோ, தகனத்தைப் பற்றியோ யாரிடமும் பிரஸ்தாபிக்கக் கூடாது. காற்றினிடம் கூடச் சொல்லக் கூடாது. இதைப் பரம ரகசியமாக வைத்திருக்க வேண்டும். தெரியுமா?''

''எதற்காக ரகசியம் அடிகளே?''

''எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன், ரஞ்சனி! இப்போது ஒரு கணமும் வீணாக்க நேரமில்லை.''

''வஞ்சக பிக்ஷுவே! நீர் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. காரணம் எனக்கே தெரியும்.''

''உனக்கு என்ன தெரியும்?''

''இந்தப் பிரேதத்தைத் தகனம் செய்து விட்டு இரகசியச் சுரங்க வழியாக வாதாபி நகருக்குள் போகப் போகிறீர்! நீர்தான் சக்கரவர்த்தி என்று சொல்லிக் கொள்ளப் போகிறீர். சளுக்க சிம்மாதனத்தில் ஏறி அந்தக் காஞ்சி நகரத்து மூளியை உமக்கு அருகே உட்கார்த்தி வைத்துக் கொள்ளப் போகிறீர்...!''

நாகநந்தி கோபம் கொண்டு எழுந்து, ''உன் வாக்குப்படியே செய்கிறேன். எப்படியாவது நீ தொலைந்து போ! இனி மேல் உன்னோடு...'' என்று மேலும் சொல்வதற்குள் காபாலிகை அவர் காலில் விழுந்து, ''அடிகளே! என்னை மன்னித்து விடுங்கள். நீர் சொல்வதைக் கேட்கிறேன்!'' என்றாள்.

''உனக்குத்தான் என்னிடம் கொஞ்சங்கூட நம்பிக்கை இல்லையே! உன்னிடம் சொல்லி என்ன பிரயோஜனம்?''

''எனக்கு நம்பிக்கை உண்டாக்குவதற்கு ஒரு வழி இருக்கிறதே!''

''அது என்ன?''

''அந்த நடனப் பெண்ணை எனக்குக் கொடுத்து விடுங்கள்!''

''ரஞ்சனி! இத்தனை காலம் பொறுத்தாய். இன்னும் சில நாட்கள் பொறுத்துக் கொள். இந்த வாதாபி முற்றுகை முடியும்வரையில் பொறுத்துக் கொள்... சிவகாமியை ஒரு காரியத்துக்காகக் காப்பாற்றி வைத்திருக்கிறேன் என்று உன்னிடம் சொல்லி வந்தேனல்லவா? அந்தக் காரியம் இப்போது நெருங்கி வந்து விட்டது. மாமல்லன் மீது பழி வாங்கியதும் சிவகாமியை உனக்குத் தந்து விடுகிறேன். பிறகு இந்த நீலகேசிதான் தக்ஷிண தேசத்தின் சக்கரவர்த்தி; நீதான் சக்கரவர்த்தினி. சளுக்க — பல்லவ — சோழ — பாண்டிய —வேங்கி நாடுகள் எல்லாம் நம் இருவருடைய காலின்கீழ் கிடக்கப் போகின்றன!'' என்று நாகநந்தி என்கிற நீலகேசி கூறியபோது நிலவொளியிலே அவருடைய கண்கள் தீப்பிழம்பைப் போல் ஒளி வீசின.

காபாலிகை ஒருவாறு சமாதானம் அடைந்தவளாகக் காணப்பட்டாள். நீலகேசியின் சொற்படி அவள் தன் குகைக்குச் சென்று அங்கிருந்து விறகுக் கட்டைகளைக் கொண்டு வந்து அடுக்கலானாள். அப்போது நீலகேசியின் காதில் விழாதபடி அவள் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்: ''வஞ்சக பிக்ஷுவே! நீர் என்னை மறுபடியும் ஏமாற்றப் பார்க்கிறீர். ஆனால் உம்முடைய எண்ணம் ஒரு நாளும் பலிக்கப் போவதில்லை. நீர் எவ்வளவுதான் காலில் விழுந்து கெஞ்சினாலும், தேவேந்திர பதவியே அளித்தாலும் அந்த மூளி சிவகாமி உம்மைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள். கடைசியாக, என் காலிலே வந்துதான் நீர் விழுந்தாக வேண்டும்!'' (தொடரும்)



''ஏம்பா கண்டக்டர், ராயப்பேட்டை ஸ்டாப் வந்ததும் என்னை இறக்கிவிடச் சொன்னேன் இல்லையா, ஏன் செய்யவில்லை? வரவர ரொம்ப மோசமாயிட்டீங்க நீங்க.''

''சார், வந்து . . . . . .''

''வந்து போயெல்லாம் கிடையாது ஏதோ தெரியாதவர்கள் கேட்டால் உதவி செய்வதை விட்டுவிட்டு இப்படியா....''


''உதவத்தானே சார் நாங்கள் இருக்கிறோம். ஆனால் . . . . . .''

''என்ன ஆனால், போனால் . . . .''

''இன்னும் ராயப்பேட்டை வரவேயில்லையே!''

சமீபத்தில் 21-G பஸ்ஸில் நடந்த உரையாடல். — கேட்டவர்: எம். எஸ்.

The Sanitaryware with a Tradition of Durability and Dependability



Parryware

From 1898 to 1975, Parry's have kept abreast with changing trends. Parryware, over the years, has been equal to the demands made of it, at times adopting improvements suggested by customers.

You too can depend on Parryware. After all, so many satisfied customers can't be wrong.

That's because people trust Parryware and are sure of its Quality and Durability.

Parryware Superfine products are leaders in today's design trends.

The earlier conventional angular designs have given way to the sleek, modern, contoured designs. There is a wide range of Parryware products and these are available in six gentle, pleasing pastels that have found continued popularity with leading hotels, skyscrapers and even the household bathroom.

Parryware—India's favourite Sanitaryware

Parryware VITREOUS

Traditional yet modern.

E.I.D.-PARRY LTD., Dare House, MADRAS 600 001

பொன்னியின் புதல்வர்



சுந்தா

59. தனி நபர் போராட்டம்

"சுடுதலும் குளிரும் உயிர்க்கு இல்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கு இல்லை
எடுமினோ அறப் போரினை" என்றான்
எம் கோமேதகம் ஏந்திய காந்தி - பாரதியார்

ஆண்டை சண்டை போடுகையில் அடிமையும் பக்கத்தில் நின்று சண்டை போட வேண்டியதுதானே? இவ்வித மனப்பான்மை கொண்ட பிரிட்டன், தான் ஈடுபட்ட யுத்தத்தில் இந்தியாவை ஈடுபடுத்தி விட்டது — அதன் தலைவர்களின் உடன்பாட்டைப் பெறாமலும், பெற வேண்டும் என்று எண்ணாமலும். அந்தச் சாம்ராஜ்ய எதேச்சாதிகாரப் போக்கை இந்திய தேசிய காங்கிரஸ் கண்டித்து, அப்போது ஏழு மாகாணங்களில் ஆட்சி நடத்திய காங்கிரஸ் மந்திரி சபைகளை ராஜிநாமாச் செய்துவிடும்படி சொல்லிற்று. அந்த ஏழிலும் முன்னதாக, சென்னை மாகாணத்தின் ராஜாஜி மந்திரி சபை 1939 அக்டோபர் இறுதியில் பதவியிலிருந்து விலகிற்று.

(அதன் காரணமாய், பஸ்லுல்லா தெரு 48ம் நம்பர் வீடு, பிரதம மந்திரியின் இல்லம் என்ற புகழை இழந்தது. கல்கியின் அந்த முன்னாள் வீடு, முன்னாள் பிரதம மந்திரியின் வீடு என்று ஆனபோதிலும், முன் எப்போதையும் விட அதிகமான புகழைப் பின்னர் அதுவும், அந்தத் தெருவும் அடைந்தது என்பதைச் சற்றுப் பொறுத்துக் காணப் போகிறோம்.)

ராஜிநாமா போனவுடனே, 48ம் நம்பர் வீடு ஒரு பெரிய நெடுமூச்சு விட்டிருக்க வேண்டும்! ''அப்பாடி! இனிமேல் கூட்டம் இல்லை, கும்பல் இல்லை; பேச்சில்லை, விவாதமில்லை; இராத்திரி கண் விழிப்பும் இல்லை'' என்று அந்த வீடு சந்தோஷப்பட்டிருக்கலாம். ஆனால் அது அற்ப சந்தோஷம் என்பதைச் சீக்கிரத்திலேயே அது தெரிந்துகொண்டிருக்கும். ராஜாஜி பிரதம மந்திரி வேலையை விட்டாரே தவிர, தேசத் தலைமையை விடவில்லை.

மந்திரிப் பதவிகளை விட்ட பிறகு, காங்கிரஸ் என்ன முறையைக் கைக்கொள்வது என்பது இலேசான காரியமாய் இல்லை. இது விஷயத்தில் காரியக் கமிட்டிக்கும் மகாத்மாவுக்குமே அபிப்பிராய பேதம் இருந்தது. எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒரு திட்டத்தை ராஜாஜி சிந்தனை செய்துகொண்டிருந்தார்.

(ஆ. வி. 8-12-40)

இவ்வாறு கல்கி, ராஜாஜியின் சிந்தனைகளை உடனிருந்து அறிந்து கொண்டவர், பகிர்ந்து கொண்டவர் என்ற முறையில் பின்னர் எழுதினார்.

ராஜாஜி சிந்தித்து உருவாக்கிய அந்தத் திட்டம் 1940 ஜூலை மாதம் பூனாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் தாக்கலாகி, வெகுவான விவாதத்துக்குப் பிறகு ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் அதை அடிப்படையாகக் கொண்ட மூன்று தீர்மானங்களை அக்கமிட்டி இயற்றியது. இந்தியாவின் பூரண சுதந்திர உரிமையைப் பிரிட்டன் ஒப்புக் கொள்ள வேண்டும்; எல்லாக் கட்சிகளும் அடங்கிய தேசிய மந்திரி சபை ஒன்றை டெல்லியில் அமைக்க வேண்டும்; இவ்விரண்டும் நிறைவேறினால், இந்தியாவின் பாதுகாப்பு முயற்சிகளில் காங்கிரஸ் ஒத்துழைக்கும்.

அந்தப் பூனாத் தீர்மானங்களைப் பிரிட்டிஷ் அரசு ஏற்க மறுத்தது. அதன் பேரில் காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடி, மேலும் சில தீர்மானங்களை மேற்கொண்டது. இணக்கம் இல்லாமல் இந்தியாவை யுத்தத்தில் ஈடுபடுத்தி இருப்பதைக் கண்டித்துப் பேசுவதற்கு இந்திய மக்களுக்கு உரிமை உண்டு. இந்த உரிமையைக் கொண்டு செலுத்தும் பொறுப்பை மகாத்மா காந்தி உசிதம்போல் வகிப்பார்.

அதை அடுத்து நடந்தது என்ன என்பதை, 6—10—40 விகடன் இதழில் கல்கி எழுதிய தலையங்கத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்:

...சென்ற வாரத்தில் வைஸ்ராய லின்லித்கோ பிரபு மகாத்மா காந்திக்கு ''இல்லை'' என்று பதில் சொல்லி அவரை வெறுங் கையுடன் திருப்பி அனுப்பினர்.

மகாத்மா காந்தி என்ன கேட்டார்?

''யுத்த மறுப்புப் பிரசாரம் செய்ய உரிமை வேண்டும்'' என்று கேட்டார். இத்தகைய உரிமையைக் கோரியதற்கு அவர் இரண்டு காரணங்கள் கூறினர்.

முதன்மையாக, ''எங்களில் சிலர் பூரண அஹிம்சா தர்மத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்; பலாத்காரம் எதுவுமே பாவம் என்று நினைக்கிறவர்கள். ஆகையால், பலாத்கார யுத்தத்தில் சேர வேண்டாம், உதவி செய்ய வேண்டாம் என்று பிரசாரம் செய்ய எங்களுக்கு உரிமை வேண்டும்'' என்று சொன்னர்.

இரண்டாவது காரணமாக அவர் சொன்னது இது:

''இந்திய மக்களின் சம்மதத்தைக் கேட்காமல் இந்தியாவை யுத்தத்தில் சேர்த்தீர்கள். அது போதாதென்று 'இந்திய மக்கள் ஒரு முகமாக யுத்தத்தில் ஒத்துழைப்பதாகச் சொல்லிக்கொள்கிறீர்கள். ஆனல் பெரும்பாலான காங்கிரஸ்காரர்களோ, இந்த யுத்தம் ஏகாதிபத்தியப் பாதுகாப்புக்காகவே நடக்கிறது என்றும், இதில் இந்தியாவுக்குச் சம்பந்தம் இல்லை என்றும், சர்க்கார் அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே இந்திய ஜனங்கள் யுத்த உதவி செய்கிறார்கள் என்றும் நம்புகிறார்கள். தங்கள் கட்சியின் உண்மையை நிரூபிக்கக் காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும். ஆகவே அவர்கள் யுத்த மறுப்புப் பிரசாரம் செய்யும் உரிமை கோருகிறார்கள்'' என்றார்.

இவ்வாறு ஒரு தார்மீகக் காரணத்தையும் ஓர் அரசியல் காரணத்தையும் மகாத்மா காந்தி கூறி, ''இந்த யுத்த சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. பூரண சுதந்திரத்தை ஒப்புக்கொள்ளுங்கள், ஜனநாயகத்தை ஏற்படுத்துங்கள் என்றெல்லாம் இப்போது உங்களைக் கேட்கவில்லை. பேச்சு சுதந்திரம் ஒன்றுதான் கேட்கிறோம். அதைக் கொடுத்தால் ஒரு தகராறும் இல்லை'' என்று சொன்னர்.

மகாத்மாவின் இந்தக் கோரிக்கையை வைஸ்ராய் லின்லித்கோ அங்கீகரித்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? வானம் இடிந்து விழுந்திருக்குமா? இமய மலை சாய்ந்திருக்குமா? கங்கை வறண்டுபோயிருக்குமா? அல்லது பிரிட்டிஷ் பீரங்கிகளிலிருந்து கிளம்பும் குண்டுகள் வெடிக்க மறுத்திருக்குமா? அல்லது பிரிட்டிஷ் ஆகாய விமானிகள்தான் அஹிம்சா தர்மத்தை மேற்கொண்டு குண்டுபோட மறுத்துவிடுவார்களா?

இந்தமாதிரி விபரீதம் ஒன்றும் நடந்திராது. காந்திஜியின் கோரிக்கையை ஒப்புக்கொண்டிருந்தால் விளைந்திருக்கக் கூடிய நன்மைகளைப் பாருங்கள்:

○ ''ராஜினமா போன உடனே 48-ம் நம்பர் வீடு ஒரு பெரிய நெடுமூச்சு விட்டிருக்க வேண்டும்!'' ○ ''சென்ற வாரத்தில் வைஸ்ராய் லின்லித்கோ பிரபு மகாத்மா காந்திக்கு 'இல்லை' என்று சொல்லி அவரை வெறுங் கையுடன் திருப்பி அனுப்பினர்...'' ○ ''ராஜாஜி கைதுப்பட்டார் என்பதை விடச் சென்னை மாகாணமே சிறைப்பட்டது என்று சொல்வதுதான் பொருத்தமாயிருக்கும்!'' ○ ''ஜவாஹர்லால்ஜி வெளியில் இருந்தால் இந்தியாவுக்கு அபாயமாம்! இந்தியாவின் பரம விரோதி அல்லவா அவர்? வேடிக்கை! வேடிக்கை!'' ○ ''இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எத்தனையோ பேர் சிறை சென்றிருக்கிறார்கள். ஆனல் அவர்களுடைய சிறைவாசமெல்லாம் வினோபாவின் சிறைவாசத்தைப் போல் இவ்வளவு தூரம் தேசத்தின் கவனத்தைக் கவரவில்லை.''











பிரிட்டிஷ் சர்க்காரின் நல்லெண்ணத்தில் உடனே இந்திய ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். பிரிட்டிஷார் தாங்கள் கோரும் சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள் என்ற நிச்சயம் உண்டாகியிருக்கும். பிரிட்டிஷ் ஆட்சி முறையையும் ஹிட்லரின் ஆட்சி முறையையும் ஜனங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். ஒருவேளை, காங்கிரசுக்கு விரோதமாகக்கூட யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவி செய்ய அவர்கள் மனப் பூர்வமாக முன்வந்திருப்பார்கள்.

இவ்வளவும் நடந்திருக்கக் கூடியவை. ஆனால் வைஸ்ராயின் ''இல்லை'' என்ற பதிலினால் நடக்க முடியாதவை ஆகிவிட்டன.

மேலே நடக்கப் போவதென்ன?

மகாத்மா காந்தி புதியதொரு சத்தியாக்கிரகத் திட்டத்தை உருவாக்கி அறிவித்தார். தேசபக்தர்கள் தனித் தனியாகவும், அமைதியான முறையிலும், சட்டத்தை மீறிச் சிறை புகுவதற்கு அது வகை செய்தது. அந்தத் திட்டத்தின்படி சத்தியாக்கிரகிகள் தனித் தனியே காந்திஜிக்கு விண்ணப்பம் செய்து அவருடைய அனுமதியைப் பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றவர், ''யுத்த முயற்சியில் ஈடுபடாதீர்கள்'' என்று மக்கள் கூட்டங்களில் பேசலாம். அல்லது அவ்விதக் கருத்து அடங்கிய வாக்கியங்களை எழுதிப் படிக்கலாம்; அல்லது இன்னும் அமைதியான, எளிதான முறையில், உரிய அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதி அந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம். ஆர்ப்பாட்டங்களோ, அமைதிக் குலைவோ, வன்முறைச் செயல்களோ நேராமல் தவிர்ப்பதற்காகவே, இத்தகைய சத்தியாக்கிரக உத்தியைச் சாந்தமூர்த்தி வகுத்தார்.

அதன்படி அவர் தேர்ந்தெடுத்த தனி மனிதரான விநோபா பாவே, வர்தா நகருக்குப் பக்கத்துக் கிராமங்களில் சத்தியாக்கிரகம் செய்து, 21—10—40ம் தேதியன்று மூன்று மாதச் சிறைத் தண்டனை அடைந்தார்.

இதன் பயன் என்ன ஆயிற்று? பம்பாயில் ஸ்டாக் மார்க்கெட்டை மூடினார்கள். கராச்சியிலிருந்து மதுரை வரையில், கண்டனத் தீர்மானங்கள் நிறைவேறி வருகின்றன. இதற்கு முன்னால், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எத்தனையோ பேர் சிறை சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சிறைவாசமெல்லாம் விநோபாவின் சிறைவாசத்தைப் போல் இவ்வளவு தூரம் தேசத்தின் கவனத்தைக் கவரவில்லை.

மகாத்மா காந்தியின் அறிக்கையில் மிகுந்த உற்சாகம் காணப்படுகிறது. ''இதற்கு ஜனங்கள் என்ன செய்கிறார்கள்? பார்த்துக் கொண்டு மேலே காரியத்தை நடத்துகிறேன்'' என்கிறார். ஜனங்கள் தாங்களாகவே வேலை நிறுத்தம் செய்தால் அதைத் தாம் ஆட்சேபிக்கவில்லை என்கிறார்.

இதையெல்லாம் பார்க்கும்போது, இப்போது ஆரம்பித்திருக்கும் ''தனி மனிதர் சத்தியாக்கிரகம்'' நாளடைவில் பொதுஜன இயக்கமாக வளர்ந்து விடலாம் என்றுகூடத் தோன்றுகிறது.

இவ்வாறு கல்கி, 27—10—40 தேதிய விகடன் இதழில் எழுதினார்.

மகாத்மா தேர்ந்தெடுத்த அடுத்த தனி சத்தியாக்கிரகி, ஜவாஹர்லால் நேரு. அவருக்குக் கிடைத்தது நாலு வருடக் காவல் தண்டனை.

மிக்க பரபரப்பூட்டிய அச்செய்தி பற்றிக் கல்கி எழுதிய தலையங்கம் 10—11—40 விகடன் இதழில் வந்தது:

ஜெர்மன் நாஜிகளுக்கும் இத்தாலிய பாஸிஸ்டுகளுக்கும் இந்தியாவிலே ஒரு மகத்தான சத்துரு உண்டு என்றால் அவர் ஜவாஹர்லால் நேருவேயாவார். பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் ஹிட்லருடனும் முஸோலினியுடனும் சிநேகப் பேச்சுப் பேசிக் கொண்டிருந்த காலத்திலேயே ஜவாஹர்ஜி மேற்படி சர்வாதிகாரிகளைத் தாக்கத் தொடங்கி விட்டார். இந்தியாவெங்கும் ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களில் லட்சக் கணக்கான ஜனங்களுக்கு, ஹிட்லர், முஸோலினி இவர்களின் கொடுமைகளை அவர் எடுத்துரைத்திருக்கிறார். சென்ற சில வருஷமாக, காங்கிரஸ் மகாசபைகளில் சர்வாதிகாரிகளைத் தாக்கும் தீர்மானங்கள் தவறாமல் நிறைவேறி வந்ததற்கும் அவரே காரணமாவார்...


இன்னும் பிற்காலத்தில், மகாத்மாவின் பூரண அஹிம்சைக் கொள்கைக்கு மாறாக, ராஜாஜியின் ''தேசிய சர்க்கார்'' தீர்மானத்தை அவர் ஆதரித்தார். அதாவது, இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டால், காங்கிரஸ்வாதிகள் இப்போதுள்ள வைஸ்ராயின் கீழ் தேசியக் கூட்டு மந்திரி சபை அமைத்து, யுத்த முயற்சியில் பரிபூரணமாகக் கலந்து கொள்வதை அவர் ஆமோதித்தார்.

இவ்வளவும் அவர் செய்தது — தீவிர சோஷலிஸ்டுகள் எல்லாம் ஏசும்படியான 'மிதவாத' மனப்பான்மையை அவர் காண்பித்தது — எதன் பொருட்டு? நாஜிகளிடமும் பாஸிஸ்டுகளிடமும் அவர் கொண்டிருந்த தீராத வெறுப்பினால்தான்.

இந்த வெறுப்பை வைஸ்ராய் லின்லித்கோ சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தாரானால் என்ன ஆகியிருக்கும்?

ஜவாஹர்ஜி இன்றைய தினம் இந்திய சர்க்காரில் யுத்த மந்திரியாகவோ, தளவாட மந்திரியாகவோ இருந்திருப்பார். சர்வாதிகாரிகளின் படுதோல்விக்காக இரவு பகல்





''விமலா, நீ இன்னும் டிரஸ் செய்து முடிக்கவில்லையா? பரவாயில்லை. படம் நல்லாயில்லை. நான் பார்த்துவிட்டு வந்துவிட்டேன்.'' ஜோக்ஸ் - பானி

உழைத்துக் கொண்டிருப்பார். இந்தியாவின் நாற்பது கோடி மக்களுக்கும் இந்த யுத்தம் சம்பந்தமாக மகத்தான உற்சாகத்தை ஊட்டிக் கொண்டிருப்பார்.

ஆனால் இன்று என்ன நடந்திருக்கிறது? ஜவாஹர்ஜி இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைப்பட்டிருக்கிறார்! அவர் வெளியில் இருந்தால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அபாயம் என்று தீர்மானித்து நாலு வருஷம் சிறைத் தண்டனை அளித்திருக்கிறார்கள். ஆமாம்; அவர் வெளியில் இருந்தால் இந்தியாவுக்கு அபாயமாம்! இந்தியாவின் பரம விரோதி அல்லவா அவர்! வேடிக்கை! வேடிக்கை!

இந்தத் தலையங்கம் எழுத்துக் கட்டத்தில் இருந்தபோதோ, அச்சாகிக் கொண்டிருந்தபோதோ, ஆனந்த விகடன் அதிபர் எஸ். எஸ். வாசன், 6–11–40 தேதியுடன் ஒப்பமிட்ட ''அலுவலகக் குறிப்பு'' (ஆபீஸ் மெமோ) ஒன்று கல்கியின் மேஜைக்கு வந்தது:

பத்திரிகைகளையெல்லாம், குறிப்பாக நமது பத்திரிகையை அரசாங்கம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவோ, எச்சரிக்கை செய்யவோ கூட, காரணமாய் இருக்கும்படியாய் எந்த விஷயத்தையும் நமது பத்திரிகையில் வெளியிடலாகாது.

இந்தக் குறிப்பைக் கண்டு கல்கி ஆச்சரியப்பட்டிருப்பார் என நினைப்பதற்கில்லை. ஏனெனில், காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பிணக்கு உண்டானதிலிருந்தே, அடிக்கடி வாசன் வாய்மொழியாய் எச்சரிக்கை செய்து வந்தாராம். அதன் மூலம் கல்கி, வாசனின் மனநிலையில் உண்டாகிவிட்ட மாறுதலைக் கண்டுகொண்டார். ஆனந்த விகடனுக்கு ஆபத்தோ, தடையோ நேருவதை வாசனால் பொறுத்துக் கொள்ள முடியாது. அந்தப் பத்திரிகையின் மூலம் கிடைத்து வந்த பொருள் லாபத்தை அவர் இழக்க விரும்பவில்லை.

வாசனின் அந்தக் குறிப்புக்குப் பிறகு கல்கி எழுதிய தலையங்கங்களை, முன்பு எழுதியவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் வேற்றுமை ஏதும் புலனாகவில்லை. முன்போலவே அவர் நியாயத்துடனும் பொறுப்புடனும் தமது கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். உதாரணமாக 24–11–40 இதழில் வந்த தலையங்கம்:



பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒருவர் திடீரென்று இறந்துவிட்டால் அந்த ஊழியரின் குடும்பத்துக்குப் பன்னிரண்டாயிரம் ரூபாய் உதவி கிடைக்கிறது!

எப்படி?

அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றும் பன்னிரண்டாயிரம் தொழிலாளரும் தங்கள் சம்பளத்தில் தலா ஒரு ரூபாய் கொடுத்து இறந்த தொழிலாளியின் குடும்பத்துக்கு உதவுகிறார்கள்!

மன்னை சௌரிராஜன்

தேசமக்களின் அன்புக்கும் பக்திக்கும் உரியவர்களான தலைவர்கள் ஒவ்வொருவராய்ச் சிறைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்கள் சிறை செல்கிறார்கள்; மாஜி மந்திரிகளும் சட்டசபை அக்ராசனர்களும் சிறை செல்கிறார்கள்.

பண்டித ஜவாஹர்லால் நேருவைச் சிறைப்படுத்தியது பற்றி ''நியூஸ் கிரானிகல்'' என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை, ''உலகம் எங்கும் நமக்குக் கெட்ட பெயரும் தீங்கும் உண்டாக்க வேண்டும் என்னும் நோக்கம் ஒருவனுக்கு இருந்தால் இதைக் காட்டிலும் ஒன்று செய்திருக்க முடியாது'' என்று எழுதிற்று.

இப்போது மேலும் மேலும் எம். எல். ஏ.க்களும், எம்.எல்.ஸி.க்களும் மாஜி மந்திரிகளும் சிறை புகுவதால் அந்தக் கெட்ட பெயரும் தீங்கும் வளர்ந்து கொண்டு போகாதா? இதிலே வெட்கக் கேடு, பரிதாபமான விஷயம் என்னவென்றால், இப்போது சிறை புகுகின்ற இவ்வளவு தலைவர்களும் ஜனப் பிரதிநிதிகளும் யுத்த முயற்சியில் ஈடுபட்டுப் பிரிட்டனுக்கு உதவி செய்யத் தயாராய் இருந்தவர்கள்!

இவர்களிடையே, சென்னை மாகாண முன்னாள் பிரதம மந்திரி ராஜாஜி, டிசம்பர் மூன்றும் தேதி செவ்வாய்க் கிழமையன்று சிறை புகுந்தார். அது பற்றி 8ம் தேதிய விகடனில் வெளியான தலையங்கத்தில், ''ராஜாஜி சிறைப்பட்டார் என்பதை விட சென்னை மாகாணமே சிறைப்பட்டது எனச் சொல்வதுதான் பொருத்தமாய் இருக்கும்'' என்று கல்கி எழுதினார்.

பொதுப்படையான அந்தத் தலையங்கம் வெளியான அதே இதழில், தனிப்பட்ட கட்டுரை ஒன்றையும் கல்கி எழுதி இருந்தார். அதிலே அவர் தமது தனி உணர்ச்சியைப் பொழிந்திருந்ததுடன், பஸ்லுல்லா சாலையையே ஒரு பார்வை



வீட்டுக்காரர் சலவைத் தொழிலாளியிடம் சொன்னார்: ''பார்த்தாயா நீ சலவை செய்திருக்கிற லட்சணத்தை''

''ஏன், இந்தக் கைக்குட்டையைச் சலவை செய்திருப்பதில் எனக்கொன்றும் குறை தெரியவில்லையே!'' என்றான் சலவைத் தொழிலாளி.

வீட்டுக்காரருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் கத்தினார்: ''அடப்பாவி நீ சலவை செய்து கொண்டு வந்திருப்பது என் சட்டையை அப்பா, சட்டையை!''

உமன்ஸ் ஈரா - சரஸ்வதி பந்த

யாளனுடைய் மாற்றி, அதன் உணர்ச்சியையும் சேர்த்துக் கொண்டிருந்தார்.

யுத்த முயற்சிக்கு எதிரான வாக்கியங்கள் அடங்கிய கடிதங்களை உரிய அதிகாரிகளுக்கு ஞாயிற்றுக்கிழமையன்று ராஜாஜி அனுப்பிவிட்டுச் சிறைக்கு ஆயத்தமாகக் காத்திருந்தார். அவர்மட்டும் அல்ல —

பஸ்லுல்லா சாலே...

தன் கண் முன்னால் தியாக வாழ்க்கை வாழ்ந்து, தேசத்துக்காகவும் பொது நலத்துக்காகவும் அகோராத்திரம் பாடுபட்டு வந்த மகானை, ஒரு சமயம் அவர் கீழ் வேலை பார்த்த போலீஸ்காரர்கள் வந்து கைது செய்து கொண்டு போகும் காட்சியைக் காண்பதற்காக, கண்ணில் ததும்பிய கண்ணீருடன், காத்துக் கொண்டிருந்தது...

திங்கட்கிழமை காலை 6-30 முதலே பஸ்லுல்லா சாலையில் ஜனக் கூட்டம் சேர ஆரம்பித்துவிட்டது. நேரமாக ஆகக் கூட்டம் அதிகமாயிற்று. ராஜாஜியின் சிநேகிதர்களும் சகாக்களும் காங்கிரஸ் தொண்டர்களும் வந்து, வீட்டுக்குள் இடம் இருந்தவரையில் உள்ளே புகுந்து கொண்டார்கள். மற்றவர்கள் எல்லாம் வாசலில் நின்றார்கள்.

பொதுஜனங்கள் வாசலில் வரிசையாக நிற்கத் தொடங்கினார்கள். குழந்தைகளும், சில வயதான குழந்தைகளும் ஜன்னல் ஓரமாகக் கும்பலாக நின்று எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜாஜி தம்முடைய சிறைச் சாமான்களை முன்னதாகவே எடுத்து வைத்திருந்தார். ஒரு சின்னப் படுக்கை; துணிமணிகளும் சில்லறைச் சாமான்களும் உள்ள ஒரு தகரப் பெட்டி ; ஒரு சிறு புத்தகப் பெட்டி — இவ்வளவுதான் சாமான்கள்....

பதினொரு மணி வரையில் கூட்டம் வர வர அதிகமாகிக் கொண்டு வந்தது. அவர்களைப் போகச் சொல்வதற்காக ராஜாஜி ஒரு யுக்தி செய்தார். வாசலுக்கு வந்து ஜனங்களிடம், ''தயவுசெய்து திரும்பிப் போங்கள்'' என்று சொல்லிவிட்டு, சட்டசபைத் தலைவர் ஸ்ரீ சாம்பமூர்த்தியுடன் ஒரு வண்டியில் ஏறிக் கொண்டு வெளியே சென்றார். கூட்டத்தில் ஒரு பகுதி கலைந்து போயிற்று. அன்று சாயங்காலம் வரையில் இப்படியே ஜனங்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள்.

இரவு எட்டு மணிக்கு, அதுவும் ஒரு பலத்த மழை அடித்த பிறகுதான் கூட்டம் கலைந்தது. ஆனால் அப்போதும் சில தொண்டர்கள் மட்டும், ''ஒரு வேளை ராத்திரியில் வந்து கைது செய்து கொண்டு போவார்களோ?'' என்ற பயத்தினால் அங்கேயே படுத்துக் கொண்டுவிட்டார்கள்.

மறுநாள் காலை ஏழரை மணிக்கு மறுபடியும் ஸ்ரீ சாம்பமூர்த்தி வந்து சேர்ந்தார். ''இன்னும் இருக்கிறீர்களா ?'' என்று கேட்டுவிட்டு அவர் சிரித்தார். ராஜாஜியும் சிரித்துவிட்டு உடனே ஓர் உவமையும் சொன்னார்:

'' நான் சிறு பிள்ளையாய் இருந்தபோது எங்கள் வீட்டில் வாழைத் தார் பழுக்கப் போடுவது வழக்கம். குழந்தைகளுக்கு அவசரம் தாங்காது. ஒவ்வொருவரும் கொஞ்ச நேரத்துக்கு ஒரு தடவை வந்து, பானையின் மூடியைத் திறந்து, பழுத்துவிட்டதோ என்று பார்ப்பார்கள்; அது பழுக்கவே பழுக்காது!'' என்றார்....

முதல் நாள் வந்து விடைபெற்றுப் போன பிரமுகர்கள், சிநேகிதர்கள் எல்லாரும் இன்றைய தினமும் வந்தார்கள். சிநேகிதர்களில் முக்கியமானவர்கள் ''ஹிந்து'' ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாசனும், ஸ்ரீ ஜி. ஏ. நடேசனும்.

ஸ்ரீ நடேசன் கடைசியாக விடைபெற்றுக் கொண்டு போனபோது என்னைப் பார்த்தார். ''உன்னுடைய வருத்தத்தை வெளியில் காட்டிக் கொண்டு அவருக்குத் தொந்தரவு கொடுக்காதே !'' என்றார்.

நான், ''எனக்கு ஒரு வருத்தத்தையும் காணோம். ஆனால், உங்களுடைய கண்ணில் என்ன?'' என்று கேட்டேன். மறு வார்த்தை பேசாமல் கண்ணைத் துடைத்துக் கொண்டு போய்விட்டார்......

எட்டரை மணிக்கெல்லாம் வாசலில் போலீஸ் சேவகர்கள் வந்தார்கள். போலீஸ் வந்ததும், ''இன்றைக்குக் கைதியாவது நிச்சயம்'' என்று ஏற்பட்டுவிட்டபடியால், வீதியில் கூட்டமும் பெருகத் தொடங்கியது. இச்சமயத்தில், ''வாழைப் பழம் சரியாகப் பத்து மணிக்குப் பழுக்கும்'' என்று செய்தியும் கிடைத்தது.....

சரியாகப் பத்து மணிக்குப் போலீஸ் அதிகாரிகள் வந்து சேர்ந்தார்கள். பத்து அடித்து ஒரு நிமிஷத்துக்கு ராஜாஜி போலீஸ் வண்டியில் இருந்தார். வண்டி உடனே கிளம்பிச் சென்றது. கூடியிருந்தவர்களின் ''ஜய'' கோஷம் வண்டியைத் தொடர்ந்துபோயிற்று.

பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் ஜனாப் அப்பாஸ் அலிகான் கோர்ட்டில் வழக்கு விசாரணை நடந்தது. இது போன்ற ஒரு வழக்கு விசாரணையை நான் இதற்கு முன் பார்த்ததே இல்லை.

கோர்ட்டில் மாஜிஸ்ட்ரேட் வரும்போது எல்லாரும் எழுந்து நிற்பது சம்பிரதாயம். அதன்படியே எல்லாரும் எழுந்து நின்றார்கள். பிறகு, ராஜாஜி வந்தபோது மறுபடியும் எல்லாரும் எழுந்து நின்றார்கள். அவர் உட்கார்ந்த பிறகுதான் உட்கார்ந்தார்கள்...

விசாரணை விவரங்கள் எல்லாத் தினசரிகளிலும் வெளியாகி யிருக்கின்றன. ராஜாஜி



நாடியின் நீளம்!

ஒரு காலத்தில் யாரும் நான்கு விரற்கடை அளவுக்கு மேல் நீளமுள்ள தாடி வளர்க்கக்கூடாது என்று இந்தியாவை ஆண்ட ஓர் அரசன் உத்தரவு போட்டிருந்தான். அவனுடைய காவல் வீரர்கள் கையில் கத்தரிக்கோலும், அளவுகோலும் இருக்கும். தெருவில் போகிறவர்களின் தாடிகளை அளவுகோல் கொண்டு அளந்து பார்ப்பார்கள். அது நான்கு விரற்கடை நீளத்துக்கு மேல் இருந்தால் கத்தரிக் கோலால் கத்தரித்து விடுவார்கள்.

இப்படியும் ஓர் அரசன் நம் நாட்டை ஆண்டானு என்று ஆச்சரியப்படாதீர்கள்! அவன் வேறு யாரு மில்லை, அவுரங்கசீபுதான்!

ஆதாரம்: பெகின்கெஸ்டு எழுதிய
மாபெரும் புரட்சி வீரன். உதவி: நாடோடி

கொடுத்த வாக்குமூலம் பற்றி ''ப்ரீ ப்ரஸ்'' என்ற பத்திரிகை வெகு நன்றாய் எழுதி இருக் கிறது. ''அந்த வாக்குமூலம் பிரிட்டிஷ் சர்க் கார் மீது படித்த குற்றப் பத்திரிகையாகவே இருந்தது. அச்சமயம் கைதிக் கூண்டில் ராஜாஜிக்குப் பதிலாகப் பிரிட்டிஷ் சர்க் காரை நிறுத்தி விசாரணை நடப்பதாகவே ஏற் பட்டது'' என்று அந்தப் பத்திரிகை கூறி யிருப்பது முற்றும் உண்மையாகும்...

பிறகு மாஜிஸ்ட்ரேட் தம்முடைய தீர்ப் பைக் கூறினார். (ஒரு வருடச் சிறைவாசத் தண்டனை)

அவர் உணர்ச்சி மிகுதியினால் தவித்த தவிப்பு எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்தது. அவருக்கு வாய் குழறிற்று: பேச்சு தடு மாறிற்று: உதடுகள் துடித்துக் கொண் டிருந்தன.

सीदन्ति मम गात्राणि
मुखं च परिशुष्यति ।
वेपथुश्च शरीरे मे
रोमहर्षश्च जायते ॥

(என் அவயவங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. என் உடம்பு நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது.)

गाण्डीवं स्रंसने हस्ता
त्वक्चैव परिदह्यने ।
न चशक्नोम्यवस्थ.तुं
भ्रमतीव च मे मनः ॥

(காண்டீபம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சல் உண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழலுகிறது.)

என்ற பகவத் கீதை சுலோகங்களை அவர் சொல்லி, ''அந்த அர்ச்சுனனுடைய நிலைமை யிலேயே நானும் இருக்கிறேன்'' என்று கூறினார். பிறகு,

कर्मण्येवाधिकारस्ते
मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा
ते सङ्गो ऽस्त्वकर्मणि ॥

(தொழில் செய்வதுதான் உனக்கு அதி காரம் உண்டு. அதன் பயன்களில் எப் போதுமே அதிகாரம் இல்லை. செய்கையின் பயனைக் கருதாதே. தொழில் செய்யாமலும் இராதே.)

என்ற சுலோகத்தை (ஜனுப் அப்பாஸ் அலிகான்) சொல்லி, ''அவ்விதமே நானும் என் கடமையைச் செய்ய வேண்டி இருக் கிறது. வேறு என்ன சொல்லட்டும்? சீக்கிரத் தில் விடுதலை பெற்று வந்து, நீங்கள் மகிமை யுடன் வகித்து வந்த மேலான பதவியை மறு படியும் வகித்தால், என்னைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள்'' என்று கூறி முடித்தார்.....

அடுத்த, கடைசிக் காட்சி சென்ட்ரல் ஸ்டேஷனில். பன்னிரண்டு மணி முதலே ஸ்டேஷன் வெளி மண்டபத்திலும், உள்ளே பிளாட்பாரத்திலும் ஜனங்கள் கூட ஆரம் பித்துவிட்டார்கள். (ராஜாஜியை வேலூர் சிறைச்சாலைக்குக் கூட்டிச் செல்லப் போகி றார்கள் என்ற தகவலை அவர்கள் அறிந்திருந் தார்கள்.)

ரயில் கிளம்புவதற்கு ஐந்து நிமிஷத்துக்கு முன்னால்தான் ராஜாஜியைக் கொண்டு வந்து வண்டியில் ஏற்றினார்கள். அந்த ஐந்து நிமிஷமும், ஒரே ஜயகோஷந்தான்.... ''மகாத்மா காந்திக்கு ஜே!'' ''ராஜாஜிக்கு ஜே!'' ''ஜவாஹர்லாலுக்கு ஜே!'' சப் தங்கள் ஸ்டேஷன் கூரையைப் பிளந்தன.

இதிலெல்லாம் வியக்கத் தக்கது எதுவும் இல்லை. இயற்கையானதுதான்; எதிர்பார்த் ததுதான். ஆனால் ரயில் கிளம்பியபோது, கூட்டத்தில் அத்தனை பேர் கண்ணீர் விடு வார்கள், அழுவார்கள் என்பதை மட்டும் நான் எதிர்பார்க்கவில்லை.....

தேச வேலையில் ராஜாஜி தாட்சண்யம் பார்ப்பதே கிடையாது; குற்றம் கண்டு பிடிப்பதற்கும் தயங்குவதில்லை. எவ்வளவோ பேரிடம் எத்தனையோ கண்டிப்பாக நடந்து கொண்டிருக்கிறார். அதெல்லாம் யாருடைய மனத்திலும் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்களுடைய உள்ளத்திலிருந்து பொங்கிய அன்பும் பக்தியும்தான் அப்படிக் கண்ணீராகப் பெருகிற்று. சென்ற சில வருஷ காலத்தில் அவ்வளவு தூரம் ராஜாஜி சென்னைப் பொது ஜனங்களின் மனத்தையும், தொண்டர்களின் அன்பையும் கவர்ந்திருந்தாரென்றுதெரிந்தது.

எனக்குத்தான் ஏதோ அவர் மேல் அபார மான அன்பும் பக்தியும் உண்டென்று எண்ணி யிருந்தேன்.

இந்தக் கர்வம் அன்றோடு தீர்ந்தது.

(தொடரும்)

குறைந்த முதலீட்டில் சிறந்த முறையில் தேங்காய் நார் தயாரிக்க இயந்திரங்கள் இதோ!


தேங்காய் நார் தயாரிக்க இந்தியாவில் இதுவரை
சரியான இயந்திரங்கள் இல்லாமல் இருந்தது.
அதிக அளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி
செய்ய முடியாமல் இருந்தது.

இப்பொழுது இதற்குத் தேவையான எல்லா
இயந்திரங்களையும் நாங்கள் தயாரித்துள்ளோம்.
இதன் மூலம் நீங்கள் குறுகிய காலத்தில் அதிக
அளவு தேங்காய் நார் உற்பத்தி செய்யலாம்.
அதிக அளவு ஏற்றுமதியின் மூலம் அதிக
வருவாய் தேடிக் கொள்ளலாம்...
உங்களுக்கும் உங்கள் தேசத்திற்கும்!


இதுவரை தென் இந்தியாவில் 12 இடங்களில்,
எங்கள் என்னுர் இயந்திரங்கள் நல்ல
முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன

மற்ற விபரங்களுக்கும் சரியான
ஆலோசனைக்கும் எங்களை அணுகுக:


Manufacturers:
BHARAT MOTORS
5, Greames Road, Madras-600006
Phone: 86204 Cable: FIBRO-FLEX




Turbo Cleaner



Defibering Machine



Revolving Screen



Fibre Baling Press



7. வெரி வெரி 'பேட்' மார்னிங்!

டாக்டர் பணிக்கரிடம் மிஸஸ் பணிக்கர் தாரிணியின் உணர்ச்சி வசப்பட்ட நிலையை விவரித்த போது, டாக்டர் அவளுக்கும் தாரிணிக்கும் நடுவில் உட்கார்ந்திருந்தார்.

''என்ன பேசாமலிருக்கிறீர்கள்? ஹிஸ்டீரியாக்காரர்கள் இந்த மாதிரி 'மூடி'ல்தான் ஏதாவது செய்து வைப்பார்களாம்!'' என்றாள் மிஸஸ் பணிக்கர்.

''என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

''சற்றைக்கெல்லாம் அந்த மோதிரத்தைப் பற்றிப் பெரிதாக அளப்பாள்; பெருமையுடன் எழுந்து சபையோரிடம் காட்டுவாள். எல்லார் கை வழியாகவும் அது சுற்றுலா வரும்... உங்கள் முறை வரும்போது அதை அமுக்கி விடுங்கள் —''

''என்னது? என்னைத் திருடச் சொல்கிறாயா —''

''ஆமாம். ஒன்று நீங்கள் அதைத் திருடிக் கொண்டு போய்த் தலையைச் சுற்றிச் சமுத்திரத்தில் போட வேண்டும். அல்லது நான் போட வேண்டும். வேறு வழியே இல்லை.''

சடசடவென்று கரவொலி எழுந்தது. பணிக்கர் தம்பதிகள் பேச்சை நிறுத்தி விட்டுப் பிரசங்கத்தைக் கவனித்தார்கள்.

''எப்பேர்ப்பட்ட வம்சம் இது என்பதை உங்களுக்குச் சொல்கிறேன்!'' என்று உரத்த குரலில் தாரிணி தேவி சொல்லிக் கொண்டிருந்தாள்... ''மாற்றான் நிழல் பட்டு விட்டதற்காக மடுவில் பாய்ந்து உயிர் நீத்தாள் மகேசுவரி என்ற இளவரசி; ஆற்றில் மூழ்கிக் கொண்டிருந்த போது, தூக்கி உதவியது அன்னிய ஆடவன் என்பதற்காக அக்னியில் குளித்தாள் ராஜகுமாரி இந்திராணிஜீ...''

''ஆரம்பித்து விட்டதா, டமாரம்!'' முணுமுணுத்து விட்டு நாற்காலியின் பின்னால் நன்றாய்ச் சாய்ந்து கொண்டார் கோவிந்து.

''ஹியர் ... ஹியர்!'' என்று உற்சாகமாகக் கைதட்டினார் நீதிபதி.

திடீரென்று கோவிந்துவின் கண்கள் ஓர் அசாதாரண சமிக்ஞையைக் கண்டு திடுக்கிட்டு ஒளி பெற்றன. அதைச் செய்தவன் அந்த ஹிட்லர் மீசைக்காரன்.

அவனுடைய வலக்கையில் இப்போது அந்தக் காகித ரோஜா இருந்தது. அவனுடைய பார்வை பூவையும் கோவிந்துவையும் மாறி மாறிப் பார்த்து, ''இதோ இதைப் பார் —'' என்று சொல்லிற்று.

கோவிந்துவுக்குப் புல்லரித்தது. அவர் புரிந்து கொண்டு விட்டார் என்று தெரிந்ததும் ராகுல்ஜி கையை மேஜைக்கு அடியில் கொண்டு போய், பூவை அவர் பக்கமாக விட்டு எறிந்தான்.

காலடியில் வந்து தொட்டுக் கொண்டு விழுந்த பூவை, இலேசாக அமுக்கிக்கொண்டு, கர்ச்சிப்பை நழுவ விட்டு, அதை எடுக்கிற சாக்கில் குனிந்து, அதையும் பூவையும் எடுத்துக் கொண்டார் கோவிந்து. மேஜையடியிலேயே பூவின் மூடிய இதழ்களைப் பிரித்தார்.

உள்ளே, ஒரு சின்னஞ் சிறு பொட்டலம் இருந்தது. அதைச் சுற்றியிருந்த காகிதத்தில்—

''ஆச்சரியப்படாதே! இந்த ராஜ கோஷ்டியில் நைசாகக் கலந்து கொண்டு நான்தான் வந்திருக்கிறேன். இந்த ஒட்டு மீசையை மறந்து விட்டுப் பார். தெரிந்து கொள்வாய். நீ அனுப்பிய பரிசு கிடைத்தது... நன்றி ... அதற்கு விலையாக நீ கேட்ட பொருள் இதில் இருக்கிறது —''

மேசையடியிலேயே பூவைக் கசக்கி எறிந்து விட்டுப் பொட்டலத்தையும் கடிதத்தையும் மட்டும் கைக்குள் அடக்கிக் கொண்டார் கோவிந்து.

பிற்பகலிலிருந்து அவர் உள்ளத்தை வாட்டிய பெரிய கவலையின் ரேகைகள் இப்

இரு விழிகள்

ரேகா சந்திரநாத்

போது அவர் முகத்திலிருந்து முற்றிலும் மறைந்து புதிய பிரகாசமே ஏற்பட்டிருந்தது.

''ட்ரிங்.... ட்ரிங்....'' — கோவிந்துவின் அறையில் டெலிபோன் ஒலித்தது.

ராகுல்ஜி கொடுத்த பொட்டலத்தைப் பிரித்து ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த கோவிந்து, ரிஸீவரை எடுத்து ''ஹலோ!'' என்றார்.

''மிஸ்டர் கோவிந்தன்—''

''எஸ் — டியர்!'' என்று குரலைப் புரிந்து கொண்டு சொன்னார் கோவிந்து. ''என்ன விஷயம்...என்ன இது அர்த்த ராத்திரியில்...? இப்போதான் இங்கே விருந்து முடிந்து எல்லோரும் போனார்கள். நீ இன்னும் தூங்கவில்லையா தனம்?''

''தூக்கம் வரவில்லை, கோவிந்த்... சாயங்காலம் நீங்கள் சொன்னதைக் கேட்ட பிறகு என் மன அமைதியே போய் விட்டது. ஒரே கவலையாக இருக்கிறது. தாரிணிக்கு ஏதாவது ஆகி, உங்களை....'' என்றபோது தனத்தின் குரல் கெஞ்சியது.

''ஸில்லி கேர்ல்'' என்றார் கோவிந்து. ''தாரிணியின் முடிவு நெருங்குகிறது என்று தான் சொன்னேனே யொழிய நானே தாரிணியைக் குளோஸ் செய்யப் போவதாகச் சொன்னேனா? ஒரு நாளும் மாட்டேன்.... அவள் என் வாழ்க்கையை நாசமாக்கி யிருந்தாலும் அவள் என் மனைவி... நான் சொன்னதை நீ தவறாகப் புரிந்து கொண்டுவிட்டாய். அவள் இன்றிரவே போய்விடுவாள் என்று நான் அத்தனை உறுதியாகச் சொன்னது ரிஷிகேசத்திலிருந்து வந்த ஒரு யோகீசுவரர் என் ரேகையைப் பார்த்துவிட்டுச் சொன்னதைக் கொண்டுதான். 'அந்தப் பாவி அவளுடைய ஆயுதத்தாலேயே ஒழிந்துபோவாள். உனக்கு விடுதலை' என்று அவர் சொல்லியிருக்கிறார்.''

''ஓ... ஜோசியரா !'' என்று சிரித்தாள் தனம். ''எனக்கு நம்பிக்கையே கிடையாது அவர்களிடம். சுத்த ஹம்பக் பேர்வழிகள்.''

''இவர் அப்படி இல்லை, தனம். நிஜமாகவே மகான்.''

''இருக்கட்டும். நீங்கள் ஒன்றும் பிளான் செய்யவில்லையே?—''

''சேச்சே ! அசட்டுப் பிசட்டென்று பேசாதே.'' என்றார் கோவிந்து. ''ஈ எறும்புக்குக்கூட நான் தீமை நினைக்க மாட்டேன். அது உனக்கே தெரியும். நீ இப்படிக் கேட்பது தான் எனக்கு வியப்பாக இருக்கிறது..''

''அப்ப ! இப்போதான் மனசு நிம்மதியாயிற்று. நான் இனி நிம்மதியாகத் தூங்குவேன். குட் பை!''

''பை—''

போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸில், இன்டலிஜென்ஸில், ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் சேகரின் தனியறையில் டெலிபோன் 'ட்ரிங்... ட்ரிங்' என்று ஒலித்தது.

வெளுத்துக் கொண்டு வரும் கீழ் வானத்தைப் பார்த்துக் கொண்டே ரிஸீவரை எடுத்து ''ஹலோ! இன்டலிஜென்ஸ்—'' என்றான்.

உதயத்தின் ரேகைகள் புது நாள் ஒன்றை ஏந்திக்கொண்டு வந்திருந்தன. செய்தித்தாள் பையன்களின் சைக்கிள் மணியோசை கேட்டது. ஜன்னல் வழியாக, அப்போது ஓர் ஆட்டோ வந்து நிற்பதும், அதிலிருந்து 'பிரேக்பாஸ்ட்' கூடையுடன் எழிலோவியமாக மாலதி இறங்கி வருவதும் சேகரின் கண்களில் பட்டது.

''ஹலோ இன்ஸ்பெக்டர் சேகர் இருக்கிறாரா?'' — ரிஸீவரில் ஒரு பெண்ணின் குரல் பதறிக்கொண்டு கேட்டது. அழுகையை அடக்கிக்கொண்டு பேசுவது தெரிந்தது.

''எஸ். சேகர் ஹியர்...''

''ஹலோ இன்ஸ்பெக்டர்! நீங்கள் இரண்டு நிமிஷங்கள் இங்கே வரவேண்டும். பெரிய இடியே விழுந்து விட்டது இங்கே!... கைகால் ஓடவில்லை, யாருக்கும். பதறியடித்துக் கொண்டிருக்கிறோம்.''

''மேடம்! முதலில் நீங்கள் யார், எங்கே இருந்து பேசுகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்!''

''மதுரபவனத்திலிருந்து பேசுகிறேன்.. மிஸஸ் பணிக்கர் பேசுகிறேன்.''

''குட் மார்னிங் மேடம்—''

''நாட் எ குட்மார்னிங்.... வெரி வெரி பாட் மார்னிங்காகத்தான் விடிந்திருக்கிறது.. அவள் செத்துப் போய்விட்டாள்.... அதோ, விழுந்து கிடக்கிறது அவள் உடல்....தரும தேவதையே வீழ்ந்து கிடக்கிற மாதிரி கிடக்கிறது....''

''யாருடைய உடல் அப்படிக் கிடக்கிறது என்று நான் தெரிந்து கொள்ளலாமா?''

''யார் தர்ம தேவதை மாதிரி இருந்தார்கள்? யார் வந்தவர்களுக்கெல்லாம் ராஜபோகமாக உபசாரம் செய்தார்கள்? யார் இந்த ஊருக்கே திலகமாக இருந்தார்கள்?''

''மேடம்! அவர்களுக்குப் பெயர் என்று ஒன்று கிடையாதா?''

''ஏன் இல்லை? ராஜகுடும்பத்துப் பெயர் அது இன்ஸ்பெக்டர்! கற்பரசிகளின் வம்சத்தில் வந்த பெயர் அது. — தாரிணி தேவி

கன்யாஸ்ரீ ராஜமாதாஜி என்றால் சிறு குழந்தைக்குக்கூடத் தெரியுமே—''

''சரி, அவருக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டான் சேகர்.

''இறந்து கிடக்கிறாள் அவள் — தற்கொலை செய்து கொண்டு விட்டாள் அவள். இன்ஸ்பெக்டர் — என் அருமைச் சகோதரி தற்கொலை செய்து கொண்டு விட்டாள்.''

''என்னது? தாரிணி தேவியா? தற்கொலை செய்துகொண்டு விட்டாளா! என்ன?'' என்று துள்ளி நிமிர்ந்தான் சேகர். 'ஒன் மினிட்' என்று மௌத்பீஸைக் கையால் மூடிக்கொண்டு, ''மாலு! பாட் நியூஸ்! அந்த ராங்கிக்காரி தாரிணி' தற்கொலை செய்து கொண்டு விட்டாளாம்'' என்றான்.

டீயைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டிருந்த மாலதி நிமிர்ந்து, ''என்னது? நிஜமாகவா?'' என்றாள் அடங்காத வியப்புடன். ''அட பாவமே! மிஸஸ் பணிக்கர் பயந்த மாதிரியேதான் ஆகிவிட்டது! எப்பவாம்?''

''நேற்றிரவு!''

''விருந்தில் பெரிதாக டமாரம் அடித்துக் கொண்டிருப்பாள். 'மானமுள்ள ராஜ வம்ச ஸ்திரீகளுக்கு உயிர் பெரிசில்லை. நினைத்தால் விஷத்தைக் குடித்து உயிரை விட்டுவிடுவோம். இதோ இப்போதே நான் சாப்பிடுகிறேன், பார்க்கிறீர்களா?' என்று ஒவ்வொரு விருந்திலும் கேட்பாளாமே! நேற்று நிஜமாகவே குடித்து விட்டாள் போலிருக்கிறது!''

''நோ... நோ... நீ நினைக்கிற மாதிரி இல்லை மாலு.... இதன் பின்னால் வேறு ஏதோ இருக்கிறது. பொறு, கொஞ்சம் மிஸஸ் பணிக்கரின் வாயைப் பிடுங்கிப் பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டு, டெலிபோனில் ''ஹலோ!'' என்றான். ''கேட்க ரொம்ப வருத்தமாக இருக்கிறது, மேடம். எப்படி நேர்ந்தது இது?'' என்று கேட்டான்.

''யாருக்குத் தெரியும்? விருந்து முடிந்த போது மணி பன்னிரண்டு. எல்லோரும் அவரவர் வீடுகளுக்குத் திரும்பி விட்டோம். கடைசியாகக் கிளம்பினது நானும் என் கணவரும், ரமேஷும்தான்.... ரமேஷைத் தெரியுமா உங்களுக்கு?... ப்ரிலியண்ட் ஜர்னலிஸ்ட்...''

''கேட்டிருக்கிறேன் — பார்த்ததில்லை!''

''மூன்று பேரும் ஒன்றாகத்தான் கிளம்பினோம். வாசல்வரையில் வந்து எங்களை வழியனுப்பினாள்.''

''அப்போது எப்படி இருந்தாள்?''

''அப்போதா?'' என்று கொஞ்சம் தயங்கினாள் மிஸஸ் பணிக்கர். ''கொஞ்சம் கோபமாக இருந்தாள். விருந்து ஆரம்பத்திலிருந்தே பதற்றமடைந்திருந்தாள். எல்லாரையும் வரவேற்றுப் பேசினபோதே அதில் மறைமுகமாக அனல் பறந்தது.''

''காரணம்?''

''பாரிபூர் மகாராணியைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு எரிச்சல் அதிகமாகிக் கொண்டே வந்தது. மகாராணியைப் பற்றிய அவளுடைய மதிப்பீடு 'அத்தனை உயர்வாக இல்லை. 'நீயும் இருக்கிறாயே, இன்னும் உயிர் வாழ்ந்துகொண்டு. நானாக இருந்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாவேன்' என்கிற மாதிரி பேசினாள்.''

''அப்போது விஷ மோதிரத்தை எடுத்து எல்லோருக்கும் பெருமையாகக் காட்டினாளா?''

''காட்டினாள். அதை விருந்தினர் நன்றாகப் பார்க்கச் சுற்றுக்கு விட்டாள். மோதிரம் மேஜையை ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு வந்தது. என் முறை வந்தபோது அதில் விஷம் இருந்ததைப் பார்த்தேன்."

''மோதிரத்தைப் பார்த்த உடனேயே அதில் விஷம் இருப்பது தெரியுமா?''

''தெரியும். அதன் அமைப்பு அப்படி. பெரிய நீலக் கல்லின் அடியில் சின்ன சர்க்குச்சியை ஒடித்து வைத்தது போல ஒன்று தெரிந்தது. அதுதான் விஷக் காப்ஸூல்.''

''உங்களுக்குப் பிறகு அதைப் பார்த்தது யார், யார்?''

''நான் பார்த்துவிட்டு என் கணவரிடம் கொடுத்தேன். அவர் அரை விநாடி கூட வைத்திருக்கவில்லை. அதற்குள் தாரிணி தேவியே அதைக் கேட்டு வாங்கி விரலில் போட்டுக் கொண்டு விட்டாள்."

''உங்களை வழி அனுப்பியபோது அந்த மோதிரம் அவள் கையில் இருந்ததா?''

''இருந்தது.''

''உங்களை வழியனுப்பும்போது என்ன சொன்னாள்?''

'' 'எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு' என்றாள்.''

''என்ன காரணத்தினால் அப்படிச் சொன்னாள் என்று நினைக்கிறீர்கள்?''

''அவள் அடிக்கடி அப்படி விரக்தியடைவது வழக்கம்.''

''ஆகவே நீங்கள் அதைப் பொருட்படுத்தவில்லை!''

''நிஜமாகவே மனம் வெடித்துப் போயிருப்பது தெரிந்திருந்தால் அவளைத் தனியாக விட்டுவிட்டுப் போயிருக்கவே மாட்டேனே?'' என்றாள் மிஸஸ் பணிக்கர்.

''சரி, மேலே சொல்லுங்கள்.''

''எங்களை அனுப்பிவிட்டு உள்ளே வந்து படுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் அறை மாடியில் இருக்கிறது. வராந்தாவிலிருந்து ஒரு படிக்கட்டு கீழே போய் அடுத்த கட்டடத்தை இணைக்கும் தாழ்வாரத்தில் சேர்ந்து கொள்கிறது.''

''மாடி அறையில்தான் செத்துக் கிடந்தாளா?''

''ஆமாம், ரொம்பக் களைப்பாக இருக்கிறது. 'யாரும் கூப்பிட்டாலன்றி வரவேண்டாம்' என்று உத்தரவிட்டு விட்டுப் போய்ப் படுத்துக் கொண்டாளாம். காலையில் பார்த்தால் கதவு திறந்து கிடக்கிறது. அவள் கட்டிலில் பிணமாகக் கிடக்கிறாள்.''


''காயங்கள் ஏதாவது இருக்கிறதா?''

கட்டிலில் விழும்போது பின் மண்டையில் அதன் சட்டம் தாக்கியிருக்கிறது. இலேசாக அடிபட்டிருக்கிறது. தள்ளாடி விழுந்தாள் என்று தோன்றுகிறது.''

''அதற்கு முன் அவளுடன் யாராவது பேசினார்களா?''

''மிஸ்டர் கோவிந்து ஐந்து நிமிஷங்கள் பேசிக் கொண்டிருந்தாராம். 'ரொம்பக் களைத்திருக்கிறாய்; ஓய்வு எடுத்துக் கொள் கண்ணே' என்று நெற்றியில் முத்தமிட்டு விட்டு விடைபெற்றுக் கொண்டாராம்.''


உங்கள்
குடும்பத்திற்கு
ஏற்றது
மிகச்சிறந்ததே!
COLGATE
DENTAL CREAM



சென்னையில் நடந்த உலகத் தமிழ் மகாநாட்டினையொட்டி வெளிவந்த ஞாபகார்த்த நூல் திரு அண்ணாதுரை ராஜாஜிக்கு அன்பளிப்பாக வழங்க, அதனைக் கல்கி காரியாலய நூலகத்தில் வைத்திருக்கப் பணித்தார் ராஜாஜி. அண்ணா தினம் கொண்டாடப்படும் தருணத்தில் இருவரது கையெழுத்துக்களையும் பார்த்துப் புத்துணர்ச்சி பெறுவோம்.

''அப்போது ஏதாவது சொன்னாளாமா?''

'' 'ஆமாம். இனிமேல் ஒரேயடியாக ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்' என்றாளாம்.''

''இது வழக்கமாக வருகிற விரக்தி என்று நினைத்து அவரும் அதைப் பொருட்படுத்தவில்லை. அப்படித்தானே?''

''ரொம்பச் சரியாகச் சொல்கிறீர்களே, இன்ஸ்பெக்டர்.''

''மேலே சொல்லுங்கள்.''

''மிஸ்டர் கோவிந்து, அவள் அறையை விட்டு வெளியே வந்ததும் விஷம் குடித்திருக்கிறாள்.''

''குடித்தாளா? அல்லது—''

''ஓ, இன்ஸ்பெக்டர், நீங்களுமா அப்படி நினைக்கிறீர்கள்? இது தற்கொலையேதான்... சந்தேகமே இல்லை. கைவிரலில் அந்தக் கொட்டைப் பாக்கு மோதிரம் ஸாட் கேஸ் மாதிரி திறந்து கிடக்கிறதே — அதற்குள் ஏதுமில்லையே—''

''தாங்க்ஸ் மாடம்... கிரைம் பிராஞ்சிலிருந்து யாரையாவது அனுப்புகிறேன்.''

''மை காட்... இன்னொரு போலீஸ் ஆசாமியா?'' என்றாள் மிஸஸ் பணிக்கர். ''ஏற்கெனவேயே இங்கே ஒரு கிரைம்பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் வந்து ஏக ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருக்கிறாரே!''

''ஐ ஸீ'' என்றான் சேகர். ''மாடம் பின்னே எதற்காக எனக்குப் போன் செய்தீர்கள்?''

''எனக்கு உங்கள் உதவி வேண்டும் மிஸ்டர் சேகர்... இந்தக் குடும்பத்தின் பெயர் அனாவசியமாகப் பேப்பரில் அடிபடுவதை நான் விரும்பவில்லை. கௌரவமான குடும்பம் இது. இது கொலையே அல்ல; தற்கொலை. வெறும் தற்கொலை...இதைப் போய் இந்த இன்ஸ்பெக்டர், 'போஸ்ட்மார்ட்டம், அது இது' என்று சொல்லிக் கொண்டு—''

''மேடம், உங்களை நான் ஒரு கேள்வி கேட்கலாமா?''

''கேளுங்கள்.''

''தாரிணி தேவியின் உடலைப் பரிசோதனைக்கு அனுப்புவதில் மிஸ்டர் கோவிந்துவுக்கு விருப்பம் இல்லையா?''

''கடவுளே! கோவிந்து பேசக் கூடிய நிலையிலா இருக்கிறார்? 'ஐயோ! தாரிணி போய் விட்டாயா?' என்று காலையில் கதறிக் கொண்டு விழுந்தவர்தான். எழுந்திருக்கவே இல்லையே—''

''மேடம்! போலீஸார் அவசியமென்று கருதினால்—''

''எதை வேண்டுமானாலும் செய்யட்டும். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் செய்வதை இந்த வீட்டுக்குள்ளேயே செய்யுங்கள் என்றுதான் கேட்கிறோம். சட்டுப் புட்டென்று முடித்து, அவளுக்குக் கௌரவமான முறையில் இறுதிச் சடங்குகள் நடத்த அனுமதியுங்கள் என்றுதான் கேட்கிறோம்.''

''கவலைப்படாதீர்கள். நான் ஐந்து நிமிஷங்களில் அங்கே வருகிறேன். எங்கள் இன்ஸ்பெக்டரிடம் சொல்லுங்கள்.''

''என்னண்ணா?'' என்றுகேட்டாள் மாலதி.

போனை வைத்துவிட்டுத் திரும்பினான் சேகர். ''எல்லாம் கேட்டுக் கொண்டுதானே இருந்தாய்... மதுர பவனத்தில் ஏதோ பெரிதாக நடக்கப் போகிறது என்ற எங்கள் ஊகம் உண்மையாகி விட்டது. மதுரபவனத்தின் எஜமானி குடலில் விஷத்துடன் செத்துக் கிடக்கிறாள். அது அவளே உட்கொண்ட விஷமா? அல்லது யாராவது கொடுத்துவிட்ட விஷமா...?''

''அவளை ஒழித்துக் கட்டுவதில் யாருக்கு அக்கறை?''

''நீ ஒரு ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டரின் அருமைத் தங்கையாச்சே? நீ சொல், பார்க்கலாம்.''

''கோவிந்துவா?''

''எனக்குத் தெரியாது. ஏன் இருக்கக் கூடாது?''

''அப்புறம்... அந்த டாக்டர் பணிக்கர்?''

''என்ன? பணிக்கரா?'' என்று வியப்பால் புருவத்தை உயர்த்தினான் சேகர்.

''ஏன் இருக்கக் கூடாது?'' என்று திருப்பிக் கேட்டாள் மாலதி. ''எனக்கு அந்த ஆளைக்

கண்டாலே பிடிக்கவில்லே. நெஞ்சில் எதையோ அழுத்தமாகப் பொத்தி வைத்துக் கொண்டு ஊமை மாதிரி... அப்புறம் அந்த டாக்டருக்கும் தாரிணிக்குமே இரகசியமாக ஏதாவது இருந்து—''

''என்ன உளறுகிறாய்?''

''இல்லேயண்ணு! ரொம்பக் கற்பு, ஒழுக்கம் என்று தம்பட்டம் அடிக்கிற பெண்களே நம்பவே கூடாது. மேலும் 'இவர் ஒருத்தருக்குத் தான் தாரிணி கட்டுப்படுவாள்' என்று மிஸஸ் பணிக்கரே நேற்றுச் சொன்ஞளே...''

''அப்படியே இருக்கட்டும். அது கொலே செய்ய முகாந்திரமாகி விடுமா?''

''யார் கண்டார்கள்? இருவருக்குமிடையில் என்ன சண்டை நடந்ததோ என்ன இழவு நடந்ததோ, யாருக்குத் தெரியும் — அதிருக்கட்டும். நீ யார் செய்திருப்பார்கள் என்று நினேக்கிருய்?''

''நாஞ?... நான் வந்து... எனக்கு அந்தப் பாரிபூர் மகாராணி மீதுதான் சந்தேகம்.''

''போய். சும்மா சொல்கிருய். பாரிபூர் மகாராணியாவது தாரிணிக்கு விஷம் கொடுத்துக் கொல்வதாவது? நல்ல வேடிக்கை போ'' என்று சிரித்தாள் மாலதி.

''சரி சரி... மதுரபவனத்தில் இதைவிடப் பெரிய வேடிக்கை எனக்குக் காத்திருக்கிறது. நான் போகிறேன்.''

கோவிந்து அடியற்ற நெடுமரம் போல் விழுந்து கிடந்தார். ''எனக்கும் கொஞ்சம் விஷம் கொடுங்கள். நாஞம் அவளுடன் போய் விடுகிறேன்'' என்று அடிக்கடி எழுந்து உட்கார்ந்து எல்லோரையும் பார்த்துக் கதறிஞர். ''என்னே விட்டுப் போய்விட்டாயே'' என்று மார்பில் அடித்துக் கொண்டார். ''நான் இனிமேல் உயிரோடு இருக்க மாட்டேன்; உயிரோடு இருக்க மாட்டேன்'' என்று புலம்பிஞர்.

அவருக்குப் பின்ஞல் இருந்த அறையில் தாரிணி தேவியின் பூத உடல் இப்போது அங்கே இல்லே. வேலேக்காரர்கள் அது இருந்த இடத்தைக் கழுவிவிட்டுக் கொண்டிருந்தார்கள்.


ஊர் முழுதும் வந்து ஹாலில் கூடியிருந்தது. ''தைரியமாக இருங்கள் மிஸ்டர் கோவிந்து!'' என்று தலேக்குத் தலே ஆறுதல் சொன்ஞர்கள். ''தைரியப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்ருர் மாஜி நீதிபதி. பிறகு திரும்பி மிஸஸ் பணிக்கரைப் பார்த்துக் கவலேயுடன், ''இவரை இந்த நிலேயில் எப்படித் தனியாக விட்டுப் போவது? ஏதாவது பைத்தியக்காரத்தனமாகச் செய்து கொண்டு விட்டால்?'' என்று கேட்டார்.

''கூடாது! கூடவே கூடாது! யாராவது சில நாட்கள் இவர் கூடவே இருக்க வேண்டும்'' என்று உறுதியாகக் கூறிஞள் மிஸஸ் பணிக்கர். ''நாஞம் டாக்டரும் இருக்கிருேம்.''

''ரமேஷ்! நீயும் இருப்பதாகச் சொல்லு'' என்று ரமேஷின் காதைக் கடித்தான் சேகர்.

''எதற்காக?''

''காரணமாகத்தான். இந்தத் தாரிணியின் 'மறைவில்' ஏதோ மர்மம் இருக்கிறது.



அதைக் கண்டுபிடிக்கத்தான்'' என்ருன் சேகர். முற்பகலில் பஞ்சாயத்தார் கூடித் 'தாரிணியின் மரணம் தற்கொலேதான்' என்று எழுதிக் கொடுத்த அறிக்கை அவன் கையில் இருந்தது.

''நாஞம் உங்களுடன் இருக்கிறேன்!'' என்ருன் ரமேஷ்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். நாம் மூவரும் மிஸ்டர் கோவிந்துவைப் பாதுகாப்போம்'' என்று உற்சாகமாகக் கூறிஞள் மிஸஸ் பணிக்கர். ''டாக்டர்! என்ன சொல்கிறீர்கள்?'' என்றவாறே கணவன் பக்கம் திரும்பிஞள்.


ஆஞல் டாக்டர் அங்கே இல்லே. ஜன்னலடியில் போய் நின்றுகொண்டு தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பார்வை, ஜன்னலிலிருந்து ஒரு பொருளே வீசி எறிந்தால் எங்கே போய் விழும் என்பதை நிர்ணயிப்பதில் ஈடுபட்டிருந்தது... ஆ! அதோ, அந்தப் பெரிய நந்தியாவட்டைச் செடியின் அடியில்தான்—

''ஆஹா! அங்கேயா, கொலேயாளி அதைப் போட்டு மறைத்து வைத்திருக்கிருன்!'' — என்று சிலிர்த்துக் கொண்டார் டாக்டர்.

(தொடரும்)

மலரும் பூவெனப் பிள்ளை
வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்* டானிக்

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப புசிப்பாள்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டார்டு டிரேடு மார்க்


175 ml.
Incremin*
syrup
VITAMINS B₁, B₆, B₁₂
LYSINE
WITH IRON
TONIC APPETITE
STIMULANT
டிராப்ஸ் : 2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப் : 14 வயது வரையில்
Sista's INC-363 C/75 Tam

''நீதிபதி.... அவர்களின் வீடுதானே?''

''ஆமாம், உங்களுக்கு யார் வேண்டும்?''

''நீதி வேண்டும்; அதற்கு நீதிபதி வேண்டும்.....!''

''நீதிபதிதான் பேசுகிறேன்!''

'' ஆனந்தன் நிரபராதி. அவரை விடுவிக்க வேண்டும்.''

''விசாரணையில் நிரபராதி என்று ருசுவானால் அவர் விடுவிக்கப்படுவார். இல்லாவிட்டால்......''

'' அந்தப் பேச்செல்லாம் வேண்டாம். அவரை விடுவித்தாக வேண்டும்!''

''இந்த மிரட்டல்களுக்கெல்லாம் பயந்தவன் நான் அல்ல. அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்!''

''இப்படி யெல்லாம் பேசுவீர்கள் என்று தெரிந்துதான் உங்கள் மகள் நிஷாவைப் பிடித்து வைத்திருக்கிறோம். அவளை உயிரோடு காண வேண்டுமென்றால்....''

'' என்ன?''

''வழிக்கு வந்தீர்களா?''

'' அவள் நெருப்பு. நெருப்புடன் விளையாடாதீர்கள்! அதோடு நீதியை இப்படிக் கெடுபிடி செய்து அடைய முயல்வது முறையல்ல! உங்களைப் பிடிக்கிற வகையில் பிடித்துச் சரியான தண்டனை வழங்காவிட்டால்......''

''நீங்கள் நீதிபதி இல்லை!'' தொலைபேசித் தொடர்பு அறுந்தது.

* * *

டினாவுக்கு ஒரே மகிழ்ச்சி, அவள் அண்ணன் ஆனந்தனுக்கும் அவள் டீச்சர் ஆஷாவுக்கும் திருமணம் ஆகப் போகிறதென்று!

ஆஷாவுக்கும் ஆனந்தனுக்கும் சந்திப்பு நிகழ்ந்தவிதமே விந்தையானது. சிம்லாவில் படித்து வரும் தன் தங்கை டினாவை அழைத்து வர, ஆனந்தன் புறப்பட்டதென்னவோ சரியான நேரத்தில்தான். ஆனால் அவன் போய்ச் சேர்ந்த பொழுது பள்ளிக் குழந்தைகள் அனைவரும் தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போய் இரண்டு நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. டினாவைத் தனியாக விட்டுப் போக மனம் இல்லாமல் ஆஷா அவள் அண்ணன் வரும் வரைக்கும் தங்கினாள்.

ஆஷாவையும் அவள் ஊரில் கொண்டு விட்டுத் தங்கள் ஊருக்குச் செல்வதாகப் புறப்பட்ட ஆனந்தனின் பாதையைப் பனிக்கட்டிகள் மறித்துவிடவே, பாதை சரியாகும் வரை அவர்கள் ஒரு பயணிகள் விடுதியில் தங்கும்படி ஆகிவிட்டது.

''எங்களுக்கு இரண்டு அறைகள் வேண்டும்!'' என்றான் ஆனந்தன் விடுதிக் காவலனிடம்.

''காலி இருப்பது ஓர் அறைதான். ஆனால் இரட்டைக் கட்டில்களுடன் இருக்கிறது. இந்தச் சின்னப்பாப்பாவுக்கு நான் வேறு வசதி செய்து தருகிறேன். கவலைப்படாதீர்கள்!'' என்று கண்களைச் சிமிட்டினான் விடுதிக் காவலன்.

'' அதற்கில்லை!'' என்று மென்று விழுங்கிய ஆனந்தன் அன்றிரவு உறங்கவில்லை; ஏன், ஆஷாவும் கூடத்தான்! அன்று இருவருடைய நான்கு விழிகளும் கள்ளமாக உள்ளம் புகுந்ததன் விளைவு கல்யாணத்தில் வந்து முடிந்தது.

பூசை வேளையில் புகும் கரடி, கல்யாண நெருக்கத்தில் தொலை பேசி உருவமாகப் புகுந்தது. ஆம், தொலைபேசியில் ஆனந்தனை யாரோ அழைத்து ஏதோ சொன்னார்கள். பதறிப் போய் அவன் தன் நண்பன் மோகனைக் காண விரைந்தான்.

ஆனந்தன் பெரிய தொழிலதிபன். அவன் நண்பன் மோகன் அவனது தொழில்களில் பங்குதாரன். அவன் கத்தியினால் குத்தப்பட்டு ரத்தத்தில் மிதந்து கொண்டிருந்தான். அலறிப் புடைத்துக் கொண்டு அவன் மார்பில் பாய்ந்திருந்த கத்தியை எடுக்கப் போன ஆனந்தன் கத்தியும் கையுமாகப் போலீசாரின் கண்களில் வசமாக மாட்டிக் கொண்டான். எனவே, கொலையாளியாகக் குற்றம் சுமத்தப் பட்டுச் சிறைக் கம்பி எண்ணும்படி ஆயிற்று.



'நீ தப்ப முயன்று உண்மைக் குற்றவாளியைக் காட்டிக் கொடுக்க முன்வந்தால், மேலும் நான்கு கொலைகள் விழும். உன் அன்புத் தங்கை டினா, உன் ஆருயிர்க் காதலி ஆஷா, உன் அருமைத் தம்பிமார்கள் அமர்—பவன் ஆகியோர்கூண்டோடு கைலாசம் செல்வர்!' என்ற மிரட்டலும் அச்சுறுத்தலும் அவன் வாயை அடைத்து விட்டன. ஊமைக் காயம் பட்டவன் போல் அவன் உள்ளம் புண்பட்டுப் போனான். தான் ஒருவன் அநுபவிக்கும் துன்பம் போதும், மற்றவர்களாவது இன்பம்

..ரா.வீழிநாதன்..



'ஜீல் கே உஸ் பார்' என்னும் நவீனம் ஏழு லட்சம் பிரதிகளுக்கும்மேல் விற்பனையாகியுள்ளது.

'பன்வர்' என்ற நவீனம் ஒரே மாதத்தில் மூன்று பதிப்புகள் வெளிவந்துள்ளது.

திரைப்படங்களோ வெள்ளி விழாக் கண்டு வெற்றி வாகை சூடியுள்ளன.

இத்தனை புகழுக்கும் பாத்திரமான குல்ஷன் நந்தாவின் இன்பத் தென்றல் 'கல்கி' நேயர்களை மகிழ்விக்க விரைவில் தொடர்கதையாக வெளிவருகிறது.

பெறட்டும் என்ற எண்ணத்தில் சிறைத் தண்டனையை மன நிறைவோடு ஏற்ருன். ஆனால் அவன் உள்ளத்தில் ஒரே ஒரு விஷயம் நெருடியது. நாம்தான் விதிவசத்தால் சிறையுண்டு துன்புறுகிறோம். இன்னும் திருமணமாகாத ஆஷா எதற்காக என் பொருட்டுக் காத்திருந்து அல்லலுற வேண்டும்? அவள் மனத்துக்குப் பிடித்தவனை மணந்து இன்புற்று வாழட்டுமே என்று எண்ணித் தன் தம்பி அமரனிடம் கூறினன்: ''ஆஷாவின் கையில் ஐம்பதினுயிரம் ரூபாயைக் கொடுத்து என்னை மறந்துவிடச் சொல். அவள் விருப்பத்துக்கு மணம் புரிந்து கொண்டு இனிதே வாழச் சொல்!''

இதைக் கேட்ட ஆஷா சீறினள்: ''அவர் தம் நண்பரைக் கொன்றது மெய்யோ, பொய்யோ; நான் அறியேன். இப்படி ஒரு செய்கையால் மெய்க் காதலைக் கொல்பவர் கொலை நெஞ்சக்காரர் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் நான் நன்றி கொன்றவளாக ஒரு நாளும் இருக்கமாட்டேன். அவர் நினைவாகவே வாழ்ந்து அவர் நினைவாகவே மடிவேன். இது உறுதி!''

அவளது இந்த உறுதியில் அந்தப் பணம் எப்படிப் பறந்து சிதறியிருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா?

* * *

''அப்பா! நான்தான் நிஷா பேசுகிறேன். ஆனந்தன் நிரபராதியாகத்தான் இருக்கணும், அப்பா! அவர்களுடைய தம்பிமார்களைப் பார்த்தால் பொய் சொல்பவர்களாகத் தோன்றவில்லை! அதனாலே.....''

''பயல்கள் உன்னையும் கெடுத்துட்டானுகளா? இரு. இரு! இப்பொழுதே போலீசுக்குச் சொல்லி....'' தொலைபேசியிலேயே சீறினர் நீதிபதி.

தவறிப் போய் ஆனந்தனது சகோதரர்களை இனம் காட்டிக் கொடுத்துவிட்டோமே என்ற ஞானேதயம் பிறக்கவே நிஷா மேலுதடுகளையும் கீழுதடுகளையும் கடித்துக் கொண்டாள். அப்புறம் 'இப்பொழுது என்ன செய்வது?' என்ற பாவனையில் அமரனையும் பவனையும் பார்த்தாள்.

'' இத்தனை பெரிய உலகத்தில் நாம் மூவர் ஒளிந்து கொள்ள இடமா இல்லை? கவலைப்படாதே!'' என்று கூறி இட மாற்றத்துக்கு ஏற்பாடு செய்தார்கள் சகோதரர்கள் இருவரும்.

அவர்கள் அநாக்கிரமிப்புச் செய்த விடுதி ஒரு முதிய தம்பதியைச் சேர்ந்தது. அமரனும், நிஷாவும் புது மணத் தம்பதிகளாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த அவர்கள், தனி அறையே ஒழித்துக் கொடுத்துத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்திவிட்டனர். ஆனந்த நிலையை – அதாவது சிம்லா விடுதியொன்றில் ஆனந்தனுக்கு ஏற்பட்ட நெருக்க நிலையா – அல்லது நெருக்கடி நிலையா – அதை எப்படியோ சமாளித்துப் பெயரெடுத்தனர்.

தம்பிமார்கள் தன்னைக் காப்பாற்ற நீதிபதியின் மகளைப் பிடித்து வைத்துக் கொண்டு தீயோடு விளையாடுகிறார்கள் என்ற விவரம் தெரிய வரவே, ஆனந்தன் அயர்ந்து போனன். அவர்களை எப்படியாவது அந்த இக்கட்டி

புண்பட்டவன் என்று பொருள் தரும் ஜக்மீ படத்தில் ஆனந்தனாக வரும் சுநீல் தத் ஆரம்பத்தில் பதவிசாக நடித்து, அடியுண்ட புலி எப்படிச் சீறிப் பாயும் என்பதை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

அவருடைய சகோதரனாக வரும் தாரிக் கூடத் தமக்கு நடிக்க வரும் என்பதை நிரூபித்து இப்படத்தில் பெயர் வாங்குகிறார். ஏன், ரீனா ராய் கூட அல்லவா ஈடு கொடுத்து நன்கு நடித்துவிட்டார்!

ஆகாவின் காமெடி அபத்தம். ஜானிவாக்கரின் நடிப்பு...? ஐந்தில் வளையாதது ஐம்பதிலா வளையப் போகிறது? இசையும்கூட ஏனோதானோதான்!

டைரக்டர் சராசரிக் கதையைச் சலிப்பில்லாமல் எடுத்ததற்காகப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்!



தீ...
தீ...
தீ..!

லண்டனில் தியணைக்கும் படை அதிகாரி ஒருவர் ஒரு நாள் தம் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்குப் போனில் செய்தி வந்தது. இங்கே "தீப்பிடித்துவிட்டது. உடனே வாருங்கள்" என்று. சமையல் வேலையை அப்படியே விட்டு விட்டு ஓடினார் அந்த அதிகாரி ! அந்த அவசரத்தில் அடுப்பை அணைக்க மறந்துவிட்டார், அவர் ! அதனால் அடுப்பில் இருந்த உணவில் தீப் பிடித்து அது விரைவில் மற்ற இடங்களுக்கும் பரவி விட்டது. பக்கத்து வீட்டுக்காரர்கள் நகரத்தில் உள்ள மற்றொரு தியணைப்புப் படை ஆபீசுக்குப் போன் செய்து அவர்களை வரவழைத்த பிறகு தீ அணைக்கப் பட்டது ! "டெக்கான் ஹெரால்ட்" - "லரோ"

லிருந்து தப்புவிக்க வேண்டும். அதற்கு உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற உணர்வு உந்தித் தள்ளவே சிறையிலிருந்து தப்பிவிட்டான்.

இது போலீசாருக்கு மட்டும் பிரச்னையாக இல்லை ; உண்மைக் குற்றவாளிகளுக்கும் பிரச்னையாகிவிட்டது.

அவர்கள் அவனுக்கு வலை வீச, அவன் தட்டியிலும் கோலத்திலும் புகுந்து உண்மைக் குற்றவாளிகளை எப்படியோ கண்டுபிடித்துப் பழி வாங்க முயன்ற வேளையிலே, போலீஸ் அவனைப் பிடித்தது. தூண்டில் முள்ளில் சிக்கிய மீன்களையொத்த தம்பிமார்களோ தாமாகவே வந்து தலையைக் கொடுத்தனர்.

"நீதிபதி சார் ! இந்தாருங்கள், உங்கள் மகன், பத்திரம், பத்திரம் !" என்றவர்கள், " உண்மைக் குற்றவாளிகள் தான் கிடைத்து விட்டார்களே ! இனி நாங்கள் அண்ணன்-தம்பிகள் மூவரும் போகலாம் அல்லவா?" என்று கேட்டனர்.

" அதெப்படி ? நீங்களும் குற்றவாளிகள் தான் !, உங்கள் அண்ணன் ஆனந்தன் சிறையிலிருந்து தப்பி ஓடிய குற்றத்தைச் செய்தவன். நீங்களோ ஒரு பெண்ணைக் கடத்திச் சென்று மறைத்து வைத்த குற்றத்தைச் செய்தவர்கள். நீதிமன்ற நெறிப்படி உங்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கியே தீருவேன் !" என்றார் நீதிபதி.

"இதென்ன சார், அப்படி மன்னிக்க முடியாத குற்றமா? ஒரு தவறும் இழைக்காததால்தானே எங்களுக்கு இத்தகைய துணிச்சல் வந்தது ?"


" இந்தத் துணிச்சலே ஒரு குற்றம். அதனால் ஆயுள் தண்டனை வழங்குகிறேன். ஆனந்தன் ஆஷாவை மணந்து அவள் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவிக்க வேண்டும். அமரன் நிஷாவின் காவலில் நீண்ட சிறை வாசம் செய்ய வேண்டும் !" என்றார் நீதிபதி.

" அப்போ நான் பிழைத்தேன் !" என்றான் பவனன்.

" இல்லை! உனக்கும் ஒருத்தி எங்கேயோ பிறந்துதான் இருக்கிறாள்! அவளை அடையும் வரை உனக்கு மனச் சிறை!" என்று தீர்ப்பு வழங்கினார் நீதிபதி.



கண்ணு, நாம்
ஓடோனில்
உபயோகிக்கிறோம்



ஓடோனில் துர்நாற்றங்களை உடனடியாக அழிக்கிறது. பாத்ரூம் போன்ற இடங்களைத் தூய்மையாகவும் நறுமணத்துடனும் வைக்கிறது.

ஓடோனில் பல்வேறு நறுமணங்களில் கிடைக்கின்றன. ஓடோனில் வகைவகையான அளவுகளில், நிறங்களில், டப்பாக்களில் கிடைக்கின்றன.


பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லி.

CHAITRA-BLS-6 TAM REV.



நீங்களும் அணியுங்கள்
உங்கள் பணத்துக்கு அதிக மதிப்பைத் தருகிறது
MONSIEUR
RAMSON
DAYANJOY
பழைய பரம்பரை
நவீன உருவம்
எடுக்கிறது!



கனவுகளின் அர்த்தம் என்னவென்று யோசிப்பது ஒருபுறமிருக்க, தூக்கம் வந்தால்தானே கனவு காண முடியும்? தூக்கம் வராமல் அவஸ்தைப்படுகிறவர்களுக்காக மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பாஷ் - எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ஒரு சாதனத்தைத் தயாரித்திருக்கிறது. பாண்டேஜ் ஒன்றைக் கண்களில் கட்டிக்கொண்டு படுத்தால் பாட்டரியினால் இயங்கும் சாதனத்திலிருந்து இலேசாக மின் துடிப்புக்கள் அதில் செலுத்தப்படுகின்றன. கண்கள் மூலமாக மத்திய நரம்பு மண்டலத்துக்கு மின் துடிப்புச் செல்கிறது. உடனே ஆழ்ந்த ஆனந்தமான தூக்கம்தான்! உறக்கம் வந்ததும் இயந்திர சாதனம் தானாக நின்று விடுகிறது!

நேற்று இரவு கனவு கண்டீர்களா? இல்லை என்று சொல்வதால் பயனில்லை. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பிரதி இரவிலும் கனவு காண்கிறான் என்று விஞ்ஞானிகள் இன்று உறுதியாக நம்புகின்றனர்.

சிகாகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நாதேனியல் கிளீட்மான் இரவின் மையப் பகுதியில்தான் பெரும்பாலான கனவுகள் தோன்றுகின்றன என்கிறார். மூளையிலிருந்து எழும் மின் அலைகளை அளக்கும் கருவிகளால் பரிசோதிக்கப்பட முன் வந்தவர்களை ஆராய்ந்ததில் இவர்கள் கனவு காணும்போது இமைகளுக்குக் கீழாகக் கண் மணிகள் துரிதமாக அசைவதைப் பேராசிரியர் கண்டார்.


இந்தக் கண் துடிப்புக்கள் சாதாரணமாகத் தூங்கி மூன்று மணி நேரத்துக்குப்பின் ஆரம்பமாயின; சுமார் இருபது நிமிஷங்கள் நீடித்தன. இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு மீண்டும் தோன்றின. கண்ணின் மணிகள் இப்படி இங்குமங்கும் தாவித் துடிக்கும்போதே எழுப்பப்பட்டவர்கள் தாங்கள் கண்டு கொண்டிருந்த கனவு நன்றாக ஞாபகம் இருப்பதாகச் சொன்னார்கள். கண் துடிப்பு அடங்கிய பிறகு எழுப்பப்பட்டவர்களுக்குக் கண்ட கனவு நினைவில்லை!

வெஸ்டர்ன் ரிஸர்வ் பல்கலைக் கழகம் என்பதாக அமெரிக்காவில் உள்ளது. இங்கு மனோதத்துவப் பிரிவின் தலைவர் டாக்டர் கால்வின் எஸ். ஹால் கனவுகள் பற்றி மிக விரிவான ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். பத்தாயிரம் கனவுகளை ஆராய்ந்து பார்த்த பிறகு இவர், நாம் தூக்கத்திலும் சிந்தனை செய்கிறோம் என்ற முடிவுக்கு வந்தார். இதன் விளைவாக நமக்குச் சில யோசனைகள் தோன்றுகின்றன. அவை கனவுகளாக மலருகின்றன. நாம் ஏற்கனவே நினைத்துப் பாராத எதையும் கனவில் காண முடியாது என்று இவர் உறுதியாகச் சொல்கிறார்.

உள்ளத்தின் ஆழத்தில் ஒருவனுக்கு அவனையும் அறியாமல் எழுந்திருக்கக் கூடிய எண்ணங்களும் கனவுகளில் தோன்றும். கனவுச் சோதனைக்கு உள்ளாகிறவர்களில் பெரும்பாலோர் தாம் பார்த்து வரும் உத்தியோகத்தை அல்லது வேலையை வெறுப்பதை ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. பெண்களானாலும், தைப்பது, சமையல் செய்வது, துணி துவைப்பது, டைப் அடிப்பது, தோட்ட வேலை செய்வது போன்றவற்றைக் கனவில் மிக அபூர்வமாகவே காண்கிறார்கள் என டாக்டர் ஹால் கூறுகிறார்.

கனவுகள் என்பது யதார்த்த நிலைக்கு மாறுபட்டவையானதால் அங்கு விநோதமான பின்னணிகளில் சம்பவங்கள் நிகழும் என்றும் மனக் கிளர்ச்சி ஏற்படுத்தும் மனிதர்களைச் சந்திக்கலாம் என்றும் நிலவுகிற பொதுவான கருத்து தவறு என்று டாக்டர் ஹால் கண்டு பிடித்திருக்கிறார். இவர் அலசிப் பார்த்த கனவுகளில் இருபது சதவீதமே உண்மையில் மனோரம்மியமானவை. அன்பு செலுத்தும் சம்பவங்களைவிடச் சண்டை போடும் நிகழ்ச்சிகளே மூன்று மடங்கு அதிகமாயிருந்தன.

பயம்தான் கனவுகளின் மிக சகஜமான ஓர் உணர்ச்சியாக இருக்கக் கண்டார் அவர்.



அதிசயக் கனவு !

கனவுகள் பற்றிய உங்கள் அனுபவம் என்ன? வாழ்க்கைக்கும் கனவுக்கும் முடிச்சுப் போட்டு நேர்ந்த அதிசயக் கனவுகள் பற்றிக் கற்பனைக் கலப்பின்றிச் சுருக்கமாக எழுதுங்கள். பிரசுரமாகும் கடிதங்களுக்குப் பரிசு உண்டு. உறை மீது "அதிசயக் கனவு" எனக் குறிப்பிடவும்.

முடிவு தேதி: 30-9-75

கடிதப் போக்குவரத்து, திருப்பி அனுப்புகிற விவகாரமெல்லாம் கிடையாது!

ஆசிரியர் கல்கி, சென்னை-600031

இதைப் புரிந்து கொள்வதில் சிரமம் இல்லை. ஏனெனில், முழுப் பாதுகாப்பு என ஒன்று கிடையாது என்பதை நாம் எல்லோரும் நன்கு உணர்ந்திருந்தாலும் நமது வாழ்நாளின் பெரும் பகுதியை அதைத் தேடுவதிலேயே செலவழிக்கிறோம்.

கனவுகளை ஆராய்ந்துள்ள சிலர் எதிர்காலத்தைப் பற்றி ஓரளவு அறிய அது ஒரு வழி எனக் கருதுகிறார்கள். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக "ஜோசிய" சொப்பனங்களை ஆராய்ந்த டாக்டர் ஜே.பி. ரைன் அவற்றைப் பெருமளவு தாம் நம்புவதாகக் கூறுகிறார்.

இவரிடம் உள்ள பல கனவுக் குறிப்புகளுள் ஒன்று மிக அதிசயமானது. இன்ஷ்யூரன்ஸ் ஆராய்ச்சியாளர் ஒருவர் தமது போலீஸ் நண்பர் கோரியதன் பேரில் தமது துப்பாக்கியை அவருக்கு இரவல் கொடுத்தார். பதிலுக்கு அந்தப் போலீஸ்காரர் தமது போலீஸ் துப்பாக்கியை அவரிடம் விட்டுச் சென்றார். கூடவே ஓர் எச்சரிக்கையும் செய்தார் போலீஸ்காரர். "இந்தத் துப்பாக்கியை எங்கும் எடுத்துப் போகாதே. ஏன் என்று சொல்ல எனக்குத் தெரியவில்லை. எனக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாக நீ நினைத்தாலும் சரி."

அதே தினத்தில் பின்னால் அந்தப் போலீஸ்காரர் ஒரு வழிப் பறி நடக்குமிடத்துக்கு தற்செயலாகப் போய்ச் சேர்ந்தார். தமது நெஞ்சில் அடிபட்டு விழுமுன்னர் அவர் இரண்டு குண்டர்களைக் கொன்றார். மூன்றாவதாக ஒருவனைக் காயப்படுத்தி வீழ்த்தினார். இதற்கு மொத்தம் அவருக்கு **ஐந்து குண்டுகள்** தேவைப்பட்டன. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த போலீஸ்காரரைக் காண நண்பர் வந்தார். அப்போது அவரிடம் போலீஸ்காரர் தாம் அவரிடம் கொடுத்த துப்பாக்கியுடன் போலீஸார் துப்பாக்கிப் பயிற்சி நடத்தும் இடத்துக்குப் போய் அதனை இயக்கிப் பார்க்குமாறு பணித்தார். அப்படியே செய்து பார்த்தபோது அந்தத் துப்பாக்கி **மூன்றாவது தோட்டாவை** இயக்கும்போது சிக்கிக் கொண்டது; பயனற்றதாகிப் போயிற்று!

"இதனால்தான் நான் உன் துப்பாக்கியை இரவல் வாங்கிக் கொண்டேன்" என்று விளக்கினார் போலீஸ்காரர். "நான் ஒரு துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டிருப்பதாகக் கனவு கண்டேன். என் துப்பாக்கி மூன்றாவது தோட்டாவில் பயனற்றுப் போயிற்று!"

இப்படி எதிர்காலத்தைப் பற்றி அறியக் கனவுகளைக் கட்டளையிட்டுப் பெற முடியாது. தாமாகவே தோன்றி எதிர்காலம் பற்றி அவை எச்சரித்தால்தான் உண்டு.

நீண்ட காலமாகவே சந்தேகிக்கப்பட்டு வந்த ஒரு விஷயத்தை இன்று ஆராய்ச்சியாளர்கள் மெய் என்று உறுதி கூறுகிறார்கள். அதாவது 1902ம் ஆண்டில் ஒரு மனிதன் கண்ட கனவானது அவனைச் சுமார் அரை நூற்றாண்டு காலம் கனவுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்தது.

அவன் மனக் கலக்கம் ஏற்படுத்தும் விரிவானதொரு கனவு கண்டான். ஒரு தீவையும் அதில் நெடிதுயர்ந்து நிற்கும் ஓர் எரிமலையையும் பார்த்தான். வெள்ளைக்காரரும் பூர்வ குடிகளும் ஒரு பெரிய நகரின் வீதிகளில் உலவி வரக் கண்டான். ஏதோ பயங்கரமான காரியம் நடக்கப் போவதாக ஓர் உள்ளுணர்ச்சி ஏற்பட்டது.

அந்தக் கனவின் அடுத்த கட்டத்தில் அந்த எரிமலை திடீரென்று வெடித்தது. அனல் கக்கியது. நகரம் முழுவதும் தீப்பற்றி எரிந்தது. அந்தப் பயங்கர நிகழ்ச்சியில் 40,000 மக்கள் அத்தீவில் மடிந்தனர்.

கண் விழித்ததும், ஏதோ பெரிய விபரீதம் நேரப் போகிறது என்று அவனுக்குத் தோன்றியது. கனவு ஒரு முன்னெச்சரிக்கையே! நாளிதழ்களை அவன் கவனமாகப் பார்த்து வந்தான். சில வாரங்கள் கழித்து அவை, பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருக்கும் மேற்கிந்தியத் தீவான மார்டினீக் அடைந்த சர்வ நாசம் பற்றிய தலைப்புக்களையும் செய்திகளையும் தாங்கி வந்தன. அந்நாள் வரை தூங்கிக் கொண்டிருந்த பீலி எரிமலை திடீரென்று வெடித்துத் தீவில் பாதியை அழித்தது. துறைமுகத்திலிருந்த அத்தனை கப்பல்களையும் பாழாக்கியது. 40,000 மக்களைப் பலி வாங்கியது!

அசரீரி போன்று இதனை முன்கூட்டியே கனவில் கண்டவர் ஜான் வில்லியம் டன். 1949ல் காலமாகிற வரை தம் வாழ்நாள் முழுவதையும் கனவுகள் பற்றியும் காலத்தின் இயல்புகள் பற்றியும் ஆராய்ச்சி புரிவதற்கே அர்ப்பணித்தவர்.

அவரது பிரசித்திபெற்ற நூல் "காலச் சோதனை" என்பது 1927ல் பிரசுரமான போது பெரிய பரபரப்பை உண்டாக்கியது. உலகம் முழுவதிலும் மிகுந்த ஆர்வத்தை மட்டுமின்றி வாதப் பிரதிவாதங்களையும் ஏற்படுத்தியது.

பில் வினார்க் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்



பிரியாவிடை

''யாருக்கும் அடி சறுக்கும்!'' பிரகாஷ் புரொடக்ஷன்ஸ் நல்ல படங்கள் தயாரித்துப் புகழ்பெற்ற நிறுவனம். அவர்கள் இதையும் போய்....! என்னத்தைச் சொல்வது!

முத்துராமன் தம் வரையில் மிகவும் பொறுப்போடு நடித்துப் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார்; கல்லூரி மாணவியாக, காதலில் நெகிழ்பவளாக, ஆயினும் பணக்காரப் பெண்ணுக்கே உரிய அலட்சிய சுபாவம் உள்ளவளாக வரும் பிரமீளா, நன்றாகவே நடித்திருக்கிறார். இருந்தாலும் அவர் தமது உடம்பின் வளர்ச்சி நடிப்பு வளர்ச்சியைப் பாதித்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தான் பெற்ற மகனுக்கும், மருமகளுக்கும் பிரியாவிடை கொடுத்துப் படத்துக்கு உயிர் கொடுத்திருப்பவர் சாந்தகுமாரி.

வசனத்தைப் பொறுத்தவரை ஏ.எஸ். பிரகாசம் சிறப்பாய்ச் செய்திருக்கிறார். ஸ்ரீ காந்த் (நடிகரல்ல) டைரக்ஷனில் விறுவிறுப்பில்லை. எங்கள் வீட்டு மாடும் கன்று போட்டது என்பது போல் இருக்கிறது....

ஆ....று... பாடல்கள்! ஒரே அறுவை, போங்கள்! ஒரு காதல் காட்சியை மட்டும் வண்ணப் படமாக எடுத்திருக்கிறார்கள். அது நன்றாயிருக்கிறது. மற்றப்படி ஒளிப்பதிவு ஒளிந்து கொண்டுவிட்டது!

''பிரியாவிடை''க்கு ரசிகர்கள் துரிதமாக விடைகொடுத்து அனுப்பினால் வியப்பதற்கில்லை.

எங்களுக்கும் காதல் வரும்

மூத்த பெண் கார் டிரைவருடன் வெளியேறிவிடுகிறாள்; கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த இரண்டாவது பெண் அந்தக் கல்லூரி பஸ் டிரைவரை மணந்து கொண்டு வீட்டுக்குத் துணிவோடு வந்து சேருகிறாள். மூத்தவளின் செய்கையினால் தகப்பனாருக்கு இதய நோய் வந்துவிடுகிறது. இளையவளின் செயலினால் இன்னும் விபரீதம் ஏற்பட்டுவிடுமோ என்று பெற்றவள் நடுங்கிப் போகிறாள். 'இப்படிச் செய்துவிட்டு வந்து நிற்கிறாயே, என் கதி என்னவாகும்!' என்று மகளிடம் தன் தாலியைக் காட்டிக் கேட்கும் அம்மாவுக்கு, 'என் நிலையை நினைத்துப் பார்த்தாயா?' என்று தன் கழுத்துத் தாலியைக் காட்டிக் கேட்கிறாள் மகள்!

பத்மப்ரியா, கல்லூரி பஸ் டிரைவர் ஜெய்சங்கரின் தலையில் 'ணங்ணங்'கென்று குட்டும் அதிகப்பிரசங்கத்தில் ஆரம்பித்து கவர்ச்சி என்ற பெயரில் ஆபாசத்தில் முடிக்கிறார். தங்கவேலு பாவம்! அவர் வீட்டில் நடக்கும் ரகளை துளிக்கூட அவருக்குத் தெரியவில்லையே! அவர் என்ன செய்வார், திரைக்கதை அவரை அசடாக்கி விட்டது.

ஜெய்சங்கர், கல்லூரி பஸ் டிரைவர். காதல் காட்சிகளில் சக்கைப் போடு போடுகிறார்! (படத்தில் அதைத் தவிர வேறொன்றும் இல்லையே!) மனோரமா தானி பாக்கியத்தில் கண்ணாயிருக்கிறார்.

படம் எடுத்திருப்பவர்களைவிட இந்தப் படத்தில், திடீரென்று தோன்றிப் பயமுறுத்தும் பாம்பு நன்றாய்ப் படம் எடுத்திருக்கிறது!

படுக்கை அறையிலும், மற்ற இடங்களிலும் ஓடி ஓடி வெற்றிகரமாய்ப் படம் எடுத்திருக்கிறது!

கதை என்று சொல்ல இப்படத்தில் எதுவும் இல்லாவிட்டாலும் நகைச்சுவை நிறைய இருக்கிறது. மொத்தத்தில்: அர்த்தமற்ற சிரிப்பு.

— கார்தன்





திறமை மிக்க திலகங்கள்

ஹேமலதா ஆஞ்சநேயலு



எனக்குத் தெரிந்து சென்னை நகரில் முழு நேரப் பத்திரிகை நிருபராகப் பணியாற்றும் ஒரே பெண்மணி ஹேமலதா ஆஞ்சநேயலுதான். இவருடைய கணவர் ஆஞ்சநேயலு நான் பணியாற்றும் ஹிந்துப் பத்திரிகையில் சிலகாலம் உதவி ஆசிரியராக இருந்தார். பிறகுதான் அவர் ஒலிபரப்புத் துறைக்குச் சென்றார். ஆனால் தம் மனைவிக்குச் சிறந்த முறையில் பத்திரிகைகளுக்குச் செய்தி சேகரிப்பதில் உள்ள அத்தனை நெளிவு சுளிவுகளையும் நன்கு சொல்லிக் கொடுத்து விட்டார். இப்போது காசியிலிருந்து வெளியாகும் 'ஆஜ்' என்ற பத்திரிகைக்கும், பம்பாயிலிருந்து வெளியாகும் 'மாதுரி' சஞ்சிகைக்கும் இவர் சென்னை நிருபர்.

எட்டு அல்லது ஒன்பது பாஷைகளில் சரளமாகப் பேசும் திறமை வாய்ந்த இவர், மூன்று மொழிகளோடு தம் எழுத்தை நிறுத்திக் கொள்கிறார்.

மசூலிப்பட்டணத்தில் பிறந்தவராக இருந்தாலும் இவர் சிறு வயசில் வளர்ந்து படித்ததெல்லாம் மத்தியப் பிரதேசத்திலுள்ள ராய்ப்பூரில்தான். பிறகு லக்னோ சர்வகலாசாலையில் எம். ஏ. ஹிந்திப் பாடத்தில் முதல் வகுப்பில் தேறித் தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

அலகாபாத் வானொலியில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவராகவும், அறிவிப்பாளராகவும் ஒன்பது ஆண்டுகள் பணியாற்றிய இவருக்கு, அதைத் தொடர்ந்து நான்கு ஆண்டு காலம் மாஸ்கோ வானொலியில் ஹிந்திப் பகுதியில் அனுபவம் பெறும் வாய்ப்புக் கிட்டியது. கிட்டத்தட்ட மூவாயிரம் பேர்கள் போட்ட விண்ணப்பங்களில் பதினொரு விண்ணப்பங்களுக்கு வெற்றி. அந்தப் பதினொன்றில் ஒருவர் ஹேமலதா.

மாஸ்கோவில் 1960ம் ஆண்டு இந்தியக் குடியரசு தினத்தையொட்டி நாற்பத்திஐந்து நிமிஷ காலத்துக்கான 'இந்திய இசை' பற்றிய ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியைத் தயாரித்தார். இசை அனுபவத்திலும் இவர் சோடை போனவர் இல்லை. தம்முடைய இருபதாவது வயதிலேயே குவாலியரிலுள்ள சங்கீத மகா வித்தியாலயம் ஒன்றின் மூலம் 'சங்கீத ரத்ன' பட்டம் பெற்று விட்டார்.

மாஸ்கோவிலிருந்து திரும்பிய பிறகு தம்மை வானொலித் துறையிலிருந்து விடுவித்துக்கொண்டு, பத்திரிகை நிருபர் தொழிலில் இறங்கினார்.

பம்பாயிலிருந்து வெளியாகும் 'மாதுரி' இந்தி மொழியில் ஒரு பிரபல சினிமாப் பத்திரிகை. சில மாதங்களுக்கு முன் அந்தப் பத்திரிகை இவருக்கு டெலிபோன் மூலம் ஓர் அவசரப் பணியைக் கொடுத்தது.

'ஹேமமாலினி சென்னையில் திருமணம் செய்து கொண்டுவிட்டார் என்ற செய்தி பம்பாயில் பலமாக அடிபடுகிறது. சில பத்திரிகைகள் அந்தச் செய்தியைப் பிரசுரித்தும் விட்டன. நீங்கள் இதை விசாரித்து உடனே சரியான தகவல் அனுப்ப வேண்டும்' என்பது தான் அந்தப் பணி.


இந்த வதந்தியில் சம்பந்தப்பட்ட மற்றொரு பிரபல நடிகர் ஜிதேந்திராவும் அப்போது சென்னையில் இருந்தார். அவர் எந்த ஹோட்டலில் தங்கியிருக்கிறார் என்று கண்டுபிடிப்பது பெரும் பாடாகி விட்டது. பல மணி நேரங்கள் தொடர்ந்து டெலிபோன் செய்து கொண்டேயிருக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

கடைசியில் ஜிதேந்திரா தங்கியிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விட்டார். ஆனால் அந்த மனிதரோ தம்மை யாருமே காலையில் தான் பார்க்க முடியும் என்று கிட்டத்தட்ட ஒளிந்து கொண்டே விட்டார்.

மறுநாட் காலையில் நேராக இவர் ஹேமமாலினியின் வீட்டுக்கே போய் விட்டார். சுமார் நான்கு மணி நேரம் காத்திருந்து கடைசியில் ஹேமமாலினியின் தாயாரைச் சந்தித்தார். ஹேமமாலினியிடமிருந்தே மறுப்பை வரவழைத்தார். 'திருமணம் நடந்தது என்ற செய்திக்கு ஆதாரமில்லை' என்று இவர் அனுப்பிய செய்தியை 'மாதுரி' பத்திரிகை அமர்க்களமாகப் பிரசுரித்து மற்ற வதந்திகளை ஒழித்தது.

இதே போல் எம். ஜி. ராமச்சந்திரன் தி.மு.க.விலிருந்து விலகித் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியபோது உடனடியாக திரு எம். ஜி. ஆர்., திரு கருணாநிதி, திரு மு. க. முத்து ஆகிய மூவரையும் சந்தித்துச் செய்திக் கட்டுரை அனுப்புமாறு பம்பாய்ப்

சொல்பவர்: ஆர். வி. செல்லம்



பத்திரிகை வேண்டுகோள் விடுத்தது. எம்.ஜி. ஆரைச் சந்திக்க ஒரு நேரம் குறிக்க ஐம்பது தடவைகளுக்கு மேல் டெலிபோனில் முயற்சி செய்திருக்கிறார். பலன் கிட்டவில்லை. இவர் கணவர், இவரை இந்த மாதிரி சமயங்களில் டெலிபோனை நம்பாமல், நேரடி முயற்சியில் இறங்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அதன்படி செயல்பட்டபோது விஷயம் முடிந்தது. இவர் அனுப்பிய செய்திக் கட்டுரையை மூன்று புகைப்படங்களுடன் ஏழு பத்திச் செய்தியாகப் பத்திரிகை வெளியிட்டது.

ஒரு தெலுங்கு இலக்கிய மகாநாட்டுக்கு இவர் பிரதிநிதியாகவும், நிருபராகவும் போய் முதல் வரிசையில் அமர்ந்திருந்தார். இவர் திரைப்படத் தணிக்கைக் குழுவிலும் ஓர் அங்கத்தினர். அந்த மகாநாட்டில் பங்கு கொண்ட ஒரு பிரபல ஆந்திரத் திரைப்பட நடிகர் இவரைக் கண்டவுடன், தம் பேச்சில் தணிக்கைக் குழு கையாளும் முறைகளைப் பற்றிக் காரசாரமாகக் கண்டித்துப் பேச ஆரம்பித்து விட்டார். இலக்கிய மகாநாடு என்று இவர் நாசூக்காக நினைவுபடுத்தியும் பயனில்லை. இவரும் தம்முடைய செய்தியில் மகாநாட்டு நிகழ்ச்சிகளை விவரித்துவிட்டு, 'அந்த நடிகரும் கலந்து கொண்டார்' என்ற அளவிலே அந்த நடிகருக்கு மிகக் குறைந்த முக்கியத்துவத்தைக் கொடுத்தார்!

இவர் தேர்ந்த எழுத்தாளரும்கூட. சிறுகதை, கவிதை முதலியவற்றை ஆங்கில, ஹிந்தி, தெலுங்குப் பத்திரிகைகளுக்காக அவ்வப்போது எழுதுகிறார். சாகித்திய அகாடமிக்காகப் பல தெலுங்கு மொழி இலக்கியங்களை ஹிந்தியில் மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறார்.

ஒரு பெண்மணி பத்திரிகை நிருபராக இருப்பதில் ஏற்படும் சில சங்கடங்களையும் இவர் உணர்கிறார். இரவு வேளைகளில் துணையுடன் போக வேண்டிய நிர்ப்பந்தம் போன்றவை. ஆனாலும் இவர் உற்சாகமாகச் சமாளிக்கிறார்.

கேட்டு எழுதியவர்: **கோமதிஸ்வாமிநாதன்**

மகத சாம்ராஜ்யத்துக்கே பேரும், புகழும் சேர்த்த ஆடற்கலை அழகி வாசவதத்தை உபகுப்தனிடம் கொண்ட அத்யந்த பிரேமை பக்தியாக மாறி விடுகிறது. காரணம். உபகுப்தன் பௌத்த மதத்தைச் சார்ந்து விட்டதுதான். அவ்வதியற்புதக் காதல் நாடகத்தை நடனக் கலையில் காண்கிறோம், இதோ!

மகத சாம்ராஜ்யத்தின் ஆடல் அழகியான வாசவதத்தையின் மனம் கொள்ளைக்கார உபகுப்தனிடம் ஈடுபட்டுவிடுகிறது. ஆனால் அவனோ சித்ரா என்னும் அழகுப் பதுமையிடம் காதல் கொண்டிருந்ததால் வாசவதத்தையைப் புறக்கணிக்கிறான். தன் காதலன் ஒரு கொள்ளைக்காரனாக இருப்பதை விரும்பாத சித்ரா, அவனைத் திருத்த எவ்வளவோ முயன்றும் முடியாமல் உயிரை மாய்த்துக்கொள்கிறாள். இதனால் உள்ளம் உடைந்த உபகுப்தன், உலக வாழ்வைத் துறந்து புத்த பிக்ஷுவாகி, மக்களுக்குச் சேவை செய்கிறான். வாசவதத்தை, உபகுப்தன் மீது கொண்டிருந்த காதல் இப்பொழுது பக்தியாக மாறிவிடுகிறது; அவளும் புத்த சங்கத்தில் சேர்ந்து விடுகிறாள்.

இச்சுவையான வரலாற்றுக் கதையை நாட்டிய நாடகமாக்கி அதற்கேற்ற அழகான பாடல்களும் இயற்றியிருப்பவர் திரைப்படப் பாடல் ஆசிரியர் கலைமாமணி மருதகாசி அவர்கள். பாடல்களின் சிறப்புக்குத் திரு எஸ். கே. முனுசாமி அவர்களின் இசை அமைப்பும் ஒரு காரணமாகும்.

இந் நடன நாடகத்தில் பங்கு பற்றியவர்கள் அனைவரும் பெண்களே! மிகவும் நளினமாக, அல்லித் தண்டு போல் வளைந்து வளைந்து ஆடிய ஆரணங்குகளுக்கு இடையே ஆண் வேடங்களிலிருந்த பெண்கள், அனைவரும் வியக்கும் வண்ணம் மிடுக்கும் துடுக்குமாக வீரத்துடன் நடித்தனர்.

சித்ராவாகவும் வாசவதத்தையாகவும் இரு வேடங்களில் நடித்தவர் நடனக் குழுவின் தலைவி குமாரி ராஜாமணி. மிகவும் சிறப்பாக, அற்புதமான பாவங்களுடன் நடித்தார். உபகுப்தனாக வந்தவர் குமாரி நிர்மலா. மகத நாட்டு மன்னனாக நடித்தவர் சாந்தா.

நடன அமைப்பாளர் ஸ்ரீமதி உமா தம் பணியைத் திறம்படச் செய்திருக்கிறார்.

அரங்கேற்ற நிகழ்ச்சியே இவ்வளவு சிறப்பாக அமைந்தது மாபெரும் வெற்றி எனத் தலைமை வகித்த ஏ. பி. நாகராஜன் பாராட்டினார்.

பின்னணி வாத்தியக் குழுவினரின்பணி அவர்களை முன்னணியிலேயேநிறுத்துவதா யிருந்தது. -காந்தன்



நான் வணங்கும் மனித தெய்வம்-6

நல்வாழ்வு தந்தவர்!



பி. எஸ்ஸி. விலங்கியல் படித்துக் கொண்டிருந்த சமயம். மு.வ.வின் முன்னுரை பெற்றுக் கதை அனுப்பினுல், பத்திரிகைகளில் எளிதில் இடம் பெற்று விடலாம் என்ற எண்ணம் எழுந்தது. 'மங்கியதோர் நிலவினிலே' என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதி, அதற்கு முன்னுரை எழுதி அருளுமாறு மு.வ.வுக்கு அதை அனுப்பி வைத்தேன். ஒரு வாரத்தில் தம் இயலாமை தெரிவித்துச் சிறு குறிப்போடு கதையைத் திருப்பி அனுப்பி யிருந்தார். வேறு கதை ஏதாவது அனுப்பட்டுமா என்று கேட்டு இன்னொரு கடிதம் எழுதினேன். இரண்டே நாட்களில் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஆவலோடு வேகமாகப் பிரித்துப் பார்த்தேன்.

சென்னை-30
20-6-68

அன்புடையீர்,

நலம். கடிதம் பெற்றேன். இப்போது அனுப்ப வேண்டா. சிறுகதை தக்க வடிவில் இருந்தால் யாருக்கும் முன்னுரை தருவேன். ஷா அளித்த முன்னுரைகளைவிடப் பல நூல்களுக்கு யான் முன்னுரை தந்துள்ளேன். என் சிறு ஓய்வு நேரத்தில் பாதி இவ்வகையில் செலவிட வேண்டியுள்ளது. பத்திரிகைகளுக்கு அனுப்பும் கதைகளுக்கு முன்னுரை கேட்பது நன்றன்று. முன்னுரை பார்த்து அவர்கள் வெளியிடுவதில்லை. உறவு அல்லது தரம் இரண்டிலொன்றையே பார்ப்பர். அன்போடு பொறுமையுடன் கேட்டால் என் அறிவுரை கூறுகிறேன். தாகூர், காண்டேகர், புதுமைப்பித்தன், அகிலன், விந்தன், சூடாமணி, ஜெகசிற்பியன், ஜெயகாந்தன் முதலியோரின் சிறுகதைகள் முந்நூறு படித்துக் கதை அமைப்பை — வடிவை அறிக. சிறுகதையில் கருத்துக் குறைய வேண்டும். கதைப் பகுதி மிக வேண்டும். இன்னும் ஓர் ஆண்டு பொறுக்க. பிறகு அனுப்புக.

அன்புள்ள
மு. வரதராசன்.

மு.வ.வின் இந்தக் கடிதத்தால் உடனே என் நெஞ்சில் சோர்வு எழுந்தது. ஆயின் கடிதத்தின் ஊடே புலப்பட்ட அவரது பண்பட்ட அன்பு நெஞ்சம் என்னை மிகவும் கவர்ந்தது. தொடர்ந்து அவ்வப்போது அவரோடு கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டேன். ஒரு கடிதத்தில் ''அன்புக்கு நன்றி. செய்வன திருந்தச் செய்து முன்னேறுக. கல்லூரிக் கல்விக்கு முதலிடமும் சில சமயங்களில் முழு நேரமும் தருக. வாழ்த்துக்கள்'' என்று வாழ்த்தி எழுதினுர். இன்னொரு கடிதத்தில் ''ஓய்வு பெற்ற பின் மீண்டும் நூல் எழுதி உங்களைப் போன்றோரை மகிழ்விக்க விரும்புகிறேன். முயற்சிகள் வெல்க'' என்று எழுதி இருந்தார். மற்றொரு கடிதத்தில், ''23, 24, 25, 26-ல் இங்குதான் இருப்பேன் என எண்ணுகிறேன். மாலையில் வீட்டுக்கு வரின் பேசலாம்'' என்று அழைத்திருந்தார். ஒவ்வொரு முறை அவர் கடிதத்தைப் பெறும் போதும் நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. வேண்டுமானல் இளந் தாய் ஒருத்தி புத்தம் புதிதாய் — முதல் முதலாய்ப் பிறந்த தன் பச்சிளங் குழந்தையைப் பார்த்து அடையும் மகிழ்ச்சிப் பெருக்கை ஒப்பிடலாம்.

நான் மு. வ. வை முதல் முதலாகப் பார்த்துப் பேசியது 2–3–73 ஆகும். அன்று இரவு சென்னைக்குச் செல்லும் பாண்டியன் எக்ஸ்பிரஸின் முதல் வகுப்புப் பெட்டியில் அவரைச் சந்தித்தேன். அவருக்கு முன்னே சென்று நின்று கைகுவித்து வணக்கம் தெரிவித்தேன். அவர் தலை நிமிர்ந்து என்னைப் பார்த்து ''வணக்கம்'' என்றுர். அவர் என்னை இதற்கு முன் பார்த்தது இல்லை; என் கடிதங்களையே படித்திருந்தார். எனவே நானே என்னை அறிமுகம் செய்து கொண்டேன். ''ஓ. மோகனு? நீதானு? உட்கார் தம்பி!'' என்று முகம் மலர்ந்து அன்போடும் ஒருவகை வியப்புணர்வோடும் கேட்டார். எதிரே அமர்ந்தேன். பிறப்பு, குடும்பம், பெற்றோர், படிப்பு, இப்போதைய நிலை பற்றியெல்லாம் கேட்டார். எல்லாவற்றுக்கும் விடையளித்தேன். இருபது நிமிடங்கள் பேசிக்கொண்டிருக்கும் வாய்ப்பு அன்று எனக்குக் கிடைத்தது. அந்த இருபது நிமிடங்கள் என் வாழ்வில் மறக்க முடியாத பொன்னுன நிமிடங்கள் ஆகும்.

முதல் சந்திப்புக்குப் பிறகு அவ்வப்போது அவருடைய ஓய்வைத் தெரிந்துகொண்டு வீட்

டுக்குச் செல்வேன். நான் சென்ற நேரம் மாலை நேரமானால் வெளியே உலாவ அழைத்துச் செல்வார்; தோட்டத்தைச் சுற்றிக் காண்பிப்பார். பேச்சின் இடையே படிப்பு, ஆராய்ச்சி, எழுத்து பற்றியும் விசாரித்து அறிந்து கொள்வார். மு. வ.விடம் காணப்பட்ட தனிப்பெரும் பண்பு இதுவே ஆகும். உண்மையான உரிமை கலந்த அன்பு செலுத்துவது என்பது அவருக்குக் கைவந்த ஒன்றாகும். தாயன்பும் அவருடைய அன்புக்கு முன்னால் தோற்றே போகும் எனலாம்.

என் வாழ்வில் 27-1-74 ஒரு பொன்னான நாள். அன்று என் எதிர்கால வாழ்க்கைத் துணையை அழைத்துச் சென்று மு. வ.வுக்கு அறிமுகப்படுத்தினேன். 'எனக்கு விருப்பமான ஒருவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்' என்று கூறி, அவரது இசைவைப் பெற்ற பிறகே அழைத்துச் சென்றேன்.

என் காதல் உறவுக்கும் மு. வ.வின் எழுத்தே காரணமாக அமைந்தது. 'கரித்துண்டு' என்ற அவரது நாவலைப் படித்ததிலிருந்து 'நிர்மலா' என்ற பெயரின் மேல் எனக்கு ஒரு தனிக் கவர்ச்சி பிறந்தது. அந்தப் பெயரிலேயே ஒரு பெண் — எம். ஏ. தமிழ் படிக்கும் பெண் இருக்கவே, அவளையே என் எதிர்கால வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்தேன். என் காதல் எண்ணத்தை நிர்மலாவிடம் தெரிவிப்பதற்கும் மு. வ.வின் எழுத்தே ஒருவகையில் பயன்பட்டது. நிர்மலா எனக்கு எழுதிய ஒரு பொதுவான கடிதத்தில் மு. வ.வின் 'நல்வாழ்வு' என்ற நூலைக் குறிப்பிட்டு, ''எனக்கு 'நல்வாழ்வு' வேண்டும், தருவீர்களா?'' என்று கேட்டிருந்தார். அந்தக் கேள்வியையே என் நெஞ்சத்தைக் காட்டுவதற்குரிய வாய்ப்பாக ஆக்கிக் கொண்டேன்; மறுமொழியாக எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதினேன்: '' 'நல்வாழ்வு' — கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒன்று கேட்டு இல்லை என்று கூற எனக்கு மனம் வருமா? உறுதியாகத் தருகிறேன். ஆமாம், எனக்கும் அது உங்களிடமிருந்து வேண்டுமே, தருவீர்களா?''

நிர்மலாவை அறிமுகப்படுத்திய அன்று மு. வ., தம் 'நல்வாழ்வு' என்ற புத்தகத்தைப் பரிசாகத் தந்தார். ''அறிவும் அன்பும் இரு கண்கள்'' என்று எழுதிக் கையெழுத்தும் இட்டுத் தந்தார். அந்த நிகழ்ச்சி இன்னும் என் நெஞ்சை விட்டு நீங்காமல் அப்படியே பதிந்திருக்கிறது.

4–8–74 முதல் 10–8–74 வரையிலான ஒரு வார காலத்தை மு. வ. வின் வீட்டில் கழித்தேன். அந்த ஒரு வார காலமும் மு.வ.வின் தாய்மை அன்பில் திளைத்தேன். ஒவ்வொரு நாளும் காலையில் பார்க்கும்போது ''இரவு நன்றாகத் தூங்கினாயா?'' என்று கேட்பார்; உண்ணும்போது, ''உணவு உனக்குப் பிடிக்கிறதா?'' என்று கேட்பார். சில வேளைகளில் அவரே பரிமாறவும் செய்வார். ஒரு முறை அவரே எழுந்து உள்ளே சென்று ஜாங்கிரி ஒன்றை எடுத்து வந்து, ''ஜாங்கிரி என்றால் உனக்குப் பிடிக்கும் அல்லவா?'' என்று கூறி என் இலையில் வைத்தார். என்றோ எப்போதோ நான் கூறியதை நினைவில் வைத்திருந்து இப்போது சொன்னதும், அவரே கொண்டு வந்து வைத்த விதமும் என் நெஞ்சைத் தொட்டன.


என் நெஞ்சில் மு. வ. அறிவும் அநுபவமும் மிக்க துணைவேந்தராக இடம்பெற்றதைவிட, பெயரும் புகழும் அடைந்த ஒரு சிறந்த எழுத்தாளராக இடம் பெற்றதைவிட அதிகமான அளவில் அன்பும், பண்பும், அடக்கமும், அமைதியும் நிறைந்த ஒரு நல்ல மனிதராகவே—மனித வடிவில் உலவும் ஒரு தெய்வமாகவே இடம் பெற்றுள்ளார்.

— இரா. மோகன்

● சென்னை மீனம்பாக்கத்தில் அமைந்துள்ள விமானத் தபால் 'ஸார்ட்டிங்' நிலையம் பாரதத்திலேயே சிறந்தது என அங்கீகரிக்கப்பட்டு 74-75க்கான சுழல் கேடயத்தைப் பெற்றது. மத்திய அமைச்சர் ஜகந்நாத் பஹாடியாவிடமிருந்து கேடயத்தைப் பெறுபவர் சூப்பரிண்டெண்ட் திரு ஜி. ராமலிங்கம்.

● மகாபாரதத்திலிருந்து பொறுக்கியெடுத்த முக்கியமான ஐம்பது காட்சிகளைத் தேர்ந்தெடுத்து நேர்த்தியான காட்சி ஜோடனைகளுடன் பொம்மைக் காட்சி ஒன்றை நிறுவியுள்ளனர் டால்ஸ் ஆஃப் இந்தியா நிறுவனத்தினர். ஸ்ரீமதி என். சாரதா தேவியின் பொறுப்பில் நடக்கும் இக்காட்சியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒவ்வொரு காட்சியையும் பற்றி விளக்கம் தருகிறது டேப் ரிக்கார்டர். சிறார்களும் பெரியவர்களும் பார்த்து மகிழக்கூடிய இந்தப் பொம்மைக் காட்சியை ஸ்ரீ சித்ரா நாராயணஸ்வாமியின் தலைமையில் சென்னை மெமோரியல் ஹாலில் ஸ்ரீமதி சௌகார் ஜானகி திறந்து வைத்தார்.







சிந்தால்
வாக்குறுதி...
*மேனியெழிலுக்கு முழு பராமரிப்பு
*புதுமை இன்றுத நறுமணம்
*துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது.


PHILIPS
உங்களுக்காக பிலிப்ஸ் வழங்கும்
இந்த அபூர்வமான மியூஸிக் ஸிஸ்டம்
பல அரிய சிறப்புகள்
கொண்டது...
இப்போது ரூ.100 குறைவாகக் கிடைக்கிறது!
PHILIPS
533
• ஸ்டீரியோவாகவும் மாற்றிக் கொள்ளலாம்.
• மெயின்ஸ் மற்றும் பாட்டரிகளில் இயங்குகிறது.
• வீட்டிலும் வெளியிலும் இன்பமூட்டுகிறது...எடுத்துச் செல்ல வசதியான மியூஸிக் ஸிஸ்டம்.
...இன்னும் பல்வேறு சிறப்புகள்!
மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீஎஃப் 533
முந்துங்கள்! இப்போதே வாங்கி, லாபமடைவீர்!
OBM/5125 TAM
பிலிப்ஸ்

23

ராகேஷ், விஜயாவும் அவளுடைய அம்மாவும் சற்றுக் குரலை உயர்த்திப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். விஜயா தன்னுடன் வருவது அவளுடைய அம்மாவுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு எதற்காகப் போக வேண்டும் என்று அவள் கேட்டிருக்கக் கூடும். நியாயமான கேள்விதான். விஜயாவை இச்சூழ்நிலையில் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவது அவ்வளவு உசிதமல்ல. தனக்கு ஒன்றுமே தோன்றாத ஒரு குழம்பிய நிலையில் விஜயாவைக் கூட்டிக் கொண்டு போக வந்தது தன் தவறுதான். சொல்லிக் கொள்ளாமல் போவதுதான் நல்லது. இல்லாவிட்டால், விஜயா இதை ஒரு கௌரவப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு தன்னுடன் வர முற்படலாம். எதற்காக வீண் சண்டை ?

அவன் கீழே இறங்கிப் போனான். நல்ல வேளை ஒருவரும் அவனைக் கவனிக்கவில்லை.

அவன் வீட்டுக்குப் போனபோது ஹாலில் அஷோக் சோபாவில் உட்கார்ந்திருந்தான். அவன் அருகில் சசி இருந்தாள். அஷோக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். சசி ஏதோ ஒரு பெண்கள் பத்திரிகையைப் புரட்டியவாறு இருந்தாள்.

ராகேஷ் உள்ளே நுழைந்ததும், சசி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

" சதீஷைப் பற்றித் தெரியுமா?" என்று கடிதம் எழுதியபடியே கேட்டான் அஷோக். அவன் நிமிர்ந்து பார்க்கவில்லை.

" என்ன ?"

" நன்றாகக் குடித்துவிட்டுக் 'கிளப்'பில் தூங்குகிறான். அவனுக்கு ஒன்றும் தெரியாது."

"அப்பா எங்கே ?"

" அவருடைய அறையில் இருக்கிறார். என்ன செய்கிறார் என்று புரியவில்லை. உள் பக்கமாகக் கதவைத் தாளிட்டுக்கொண்டிருக்கிறார். வீட்டுக்கு வந்தவுடனேயே நேரே தம் அறைக்குச் சென்றுவிட்டதாக மான்சிங் கூறுகிறான். அவர் மனமுடைந்து போயிருக்கிறார் என்று எண்ணுகிறேன்."

" நான் போய்க் கதவைத் தட்டிப் பார்க்கட்டுமா ?"

"பாரேன்..... வீட்டில் **பாபி**யும் இல்லை, ஸ்வர்ணவும் இல்லை. எங்கே போயிருக்கிறார்கள் என்று தெரியாது."

"ரூபி?"

" எங்கள் அறையில் தூங்குகிறாள். சசி தான் தூங்கப் பண்ணினாள். ரூபிக்கு உடம்பு சரியில்லை. டெம்ப்ரச்சர் இருக்கும்போல் இருக்கிறது. அது கிடக்கட்டும், நீ எங்கே போய் விட்டு வருகிறாய்? அஞ்சலியும் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டாள்."

"விஜயாவைப் பார்க்கப் போனேன்."

அஷோக் அவனை நிமிர்ந்து பார்த்தான். "நீ இப்பொழுது சுதந்திர மனிதன், அப்படித் தானே !" என்றான் புன்னகையுடன்.

" நான் எப்பொழுதுமே சுதந்திரமான மனிதன்தான். அம்மாவின் மரணம், என் நிலைமையில், எந்தவித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை."

"மயானத்திலிருந்து நேரே விஜயாவின் வீட்டுக்குப் போய்த்தான் ஆக வேண்டுமா ? இலக்கியங்களில் வரும் தெய்விகக் காதல் போலிருக்கிறது."

" இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில், ஒருவன் அவனுக்கு மிகவும் வேண்டியவர்களாக இருப்பவர்களை நாடுகிறான் என்றால், இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? இலக்கியம் என்றும், தெய்விகக் காதல் என்றும் நேர்மையான உணர்ச்சியை அவமானப்படுத்தாதே....." என்றான் ராகேஷ்.



ராகேஷ் அப்பாவின் அறையை நோக்கிச் செல்ல முற்பட்டபோது, அஷோக் கூப்பிட்டான்.

" இப்படி வா... இங்கே வந்து உட்கார். சில முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும்."

" என்ன?"

அஷோக்கின் அருகில் உட்கார்ந்திருந்த சசி, எதிரிலிருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

"இப்படி உட்கார், சொல்லுகிறேன்" என்று சசி காலி பண்ணின இடத்தைச் சுட்டிக் காட்டினான் அஷோக்.

ராகேஷ் உட்கார்ந்தான்.

"ரவோஜா வீட்டுக்கு வந்து எல்லோரையும் விசாரிக்கப் போகிறார். நாம் அவருக்கு என்ன சொல்வது என்பதைப் பற்றி முன் கூட்டியே தீர்மானிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் முரணாகப் பேசக் கூடாது."

"எதற்காக இப்படிச் சொல்லுகிறாய் ? நாம் எல்லோருமாகச் சேர்ந்து சதி செய்து அம்மாவைக் கொலை பண்ணினது போலல்லவா பேசுகிறாய்?"

''அம்மாவை வெளி ஆட்கள் யாரும் கொன்றிருக்க முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம். அதே சமயத்தில் நம்முடைய குடும்பக் கௌரவமும் சந்தி சிரிக்கக் கூடாது. வீட்டில் தினசரி நடந்து வந்த சண்டைகளைப் பற்றி யாரும் மூச்சுவிடக் கூடாது.''

''ரவோஜா அப்பாவின் நெருங்கிய சிநேகிதர். அவருக்கு நம் குடும்பத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்று நினைக்கிறாய்?''

'' நண்பர் என்ற முறையில் தெரிந்திருக்கலாம். போலீஸ் அதிகாரி என்ற முறையில் நாம் வாக்குமூலங்கள் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். குறிப்பாக, அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடந்த சண்டைகளைப் பற்றிப் பேசவே கூடாது.''

''அப்பாதான் கொன்றிருப்பார் என்று நினைக்கிறாயா?''

''வாட் டூ யூ மீன்? நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே ?''

''அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடந்த சண்டைகளைப் பற்றிச் சொல்ல வேண்டாம் என்றால் என்ன அர்த்தம் ? நான் இப்படி நினைக்கவில்லை. அப்பாவால் கொலை செய்ய முடியாது. அவர் இதைச் செய்திருக்கவே மாட்டார்.''

''ஆஸ்பத்திரிக்கு வந்ததிலிருந்து அவருடைய நடவடிக்கைகள் வேடிக்கையாக இருக்கின்றன. ரவோஜா போன் செய்த போது 'உடனே வருகிறேன்' என்று சொன்னவர் வெகு நேரம் கழித்துத்தான் வந்திருக்கிறார். வந்தவர் யாருடனும் பேசவில்லை. வீட்டுக்குத் திரும்பி விட்டார். ரவோஜா கெட்டிக்காரர். இவற்றையெல்லாம் கவனிக்காமல் இருப்பாரா ? இதற்காகத்தான் நான் சொன்னேன், ரவோஜாவுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களை நாம் உறுதிப்படுத்த வேண்டாம் என்று.''

''நானாக எதுவும் சொல்ல மாட்டேன்.... ஆனால் உண்மையைச் சொல்வதைக் காட்டிலும் சௌகரியமானது வேறு எதுவும் இருக்க முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம். அப்பாவும் அம்மாவும் இலட்சியத் தம்பதிகளாக இருந்தார்கள் என்று சொல்லி யாரை ஏமாற்ற முடியும்? நம் குடும்பத்து விஷயங்களைப் பற்றித் தெரியாதவர்கள் இவ்வியில் யார் இருக்கிறார்கள்? நீ அப்பாவைச் சந்தேகப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது.''

அஷோக் ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

'' அப்பா வெகு நேரமாக அறைக்குள் தாளிட்டுக் கொண்டிருக்கிறார். போய்ப் பாருங்களேன் '' என்றாள் சசி.

'' நான் போய்ப் பார்க்கிறேன் '' என்று சொல்லிவிட்டுப் போனான் ராகேஷ்.



அவன் கதவைத் தட்டினன். பதில்இல்லே.

மறுபடியும் தட்டினன்.

'' யார் அது ?''

''ராகேஷ்.''

சில விநாடிகள் கழித்துக் கபூர் கதவைத் திறந்தார். அவருடைய கண்கள் சிவந்திருந் தன. குடித்திருந்தார்.

'' என்ன வேணும் ?''

ராகேஷ் பதில் கூருமல் உள்ளே போய்க் கட்டிலில் உட்கார்ந்தான்.

'' இது உங்களே எவ்வளவு தூரம் பாதித் திருக்கும் என்று எனக்குப் புரிகிறது.......''

'' எது?'' என்று இடைமறித்தார்.

''அம்மா....''

கபூர் பெரிதாகச் சிரித்தார். அவர் அப் படிச் சிரித்து அவன் பார்த்ததே கிடையாது.

'' என்னுடைய சுதந்திரத்தைக் கொண் டாடிக் கொண்டிருக்கிறேன். நீயும் கலந்து கொள்ளுகிருயா ? டபில் ஆன் தி ராக்ஸ் ?''

ராகேஷ் அவரை உற்றுப் பார்த்தான். அவர் குடித்திருக்கிருர்! சாதாரணமாக அவர் குடிக்கவே மாட்டார். இப்பொழுது இவர் இப்படிக் குடித்திருப்பதற்கு என்ன காரணம்? அஷோக்கின் சந்தேகம் சரிதானே ? – இவரா கொலே செய்திருப்பார் ? நிச்சயம் இருக் காது. இவரை அந்த அளவுக்குக் கற்பனே பண்ணிப் பார்க்க முடியவில்லே.

நேற்றிரவு அவர் எங்கே போயிருப்பார் ? இதைப் பற்றி அவர் சரியான தகவல் ஒன்றும் கொடுக்கவில்லே. நள்ளிரவுக்குப் பிறகு தான் கொலே நடந்திருக்க வேண்டும் என்பது டாக்டர் கருத்து. அப்படியென்றல் . . . .? அம்மா அப்படித் திரும்பி வந்தாலும், விவாக ரத்து செய்யப் போவதாகச் சொன்னுரே. இதனுல் கொலேயைப் பற்றி அவருக்கு ஒன் றும் தெரியாது என்றுதானே அர்த்தம் ? ஆனுல் அவர் எதையோ மறைக்க முயல்கிருர் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது.

அவர் ஒரு கண்ணுடித் தம்ளரில் விஸ்கியை ஊற்றி ஐஸ் கட்டிகளே அதில் போட்டு, அவ னிடம் நீட்டினுர்.

'' தாங்க் யூ.... எனக்கு வேண்டாம்.''

'' ஏன் மறுக்கிருய்? குடி... விஜயாவை நீ இப்பொழுது தாராளமாக மணந்து கொள்ள லாம். மிகவும் நல்ல பெண். நீ அதிர்ஷ்டக் காரன்.''

'' என் கல்யாணத்துக்கு அம்மாவை ஒரு தடையாக நான் நினேத்ததே கிடையாது. நான் விரும்பியதை என்னுல் செய்திருக்க முடியும். விஜயாவை மணம் செய்து கொள் வது என்பது என்னேப் பொறுத்தவரையில் ஒரு பெரிய பிரச்னே அல்ல.''

''பார்த்தாயா ! உன்னுல் விரும்பியதைச் செய்திருக்க முடியும். என்னுல் முடியாது. ஆனுல் விரும்பியதைச் செய்து முடித்துவிட் டேன் நான். எஸ்... மோகினியைக் கொன்று விட்டேன்.''

'' என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்?''

'' நீதான் எனக்குப் பிரியமான மகன். உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன். மோகினியைக் கழுத்தை நெரித்துக்கொன்ற வன் நான்தான். அட கடவுளே! அவள் முகத் தில் அப்பொழுது தோன்றிய பாவனே...., ! எப்படியோ அவளே ஆட்கொண்டுவிட்டேன். மரணத்தில்.... எதுவாக இருந்தால் என்ன? இனி மேல் அவளால் எதிர்த்துப் பேச முடி யாது.... ரவோஜாவைக் கூப்பிடு. நான் குற்றத்தை ஒப்புக் கொள்ளப் போகிறேன்.''

'' நீங்கள் கொலே செய்திருக்க முடியாது.''

கபூர் கோபமாகச் 'சடக்'கென்று திரும்பி ஞர். ''ஏன்?''

'' உங்களால் முடியாது.''

''நான் கோழை என்று நினேக்கிருய்? உன் னேக் கொலே செய்து காண்பிக்கட்டுமா ?''





" நம்ம கல்யாணத்தை எப்போ வைத்துக் கொள்வோம் விஜி ?"

"உங்களுடைய ஐம்பத்து ஏழாவது வயதில் !"

" அவ்வளவு காலம் கழித்தா, ஏன் ?"

" ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டாமா ?"

- விவேக்

அவர் அவன் அருகில் வந்து அவன் கழுத்தைப் பிடித்து நெரித்தார். அவன் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

இவன் யார் ? என் மகன்.... எனக்குப் பிரியமான மகன். விஜயாவை மணக்கப் போகிறவன். இவனை என்னால் கொல்ல முடியாது. கொல்ல முடியாது. மோகினியையே என்னால் கொல்ல முடியவில்லை..... யாரோ ஏமாற்றிவிட்டார்கள்..... இவன் சொல்வது வாஸ்தவம்தான்..... என்னால் ஓர் ஈயைக்கூடக் கொல்ல முடியாது. ஜஸ்ட் இம்பாஸிபில்.... கோழைத்தனத்துக்குக் கண்ணியம், நாகரிகம் என்றெல்லாம் மேற்பூச்சு... 'கான்ஷியன்ஸ் டத் மேக் கவர்ட்ஸ் அஃப் அஸ் ஆல்.' நான் மோகினியைக் கொன்றிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் ? ஏதோ ஒன்று என்னை வஞ்சித்துக்கொண்டே இருக்கிறது......

ராகேஷ் தன் கழுத்திலிருந்து அவர் கைகளை விலக்கினான். புன்னகை செய்தான்.

" இப்பொழுது நான் சொல்வது புரிகிறதா ?" என்றான் ராகேஷ்.

" நான்தான் மோகினியைக் கொன்றேன். நான்தான் கொன்றேன். ஷி டிஸர்வ்ட் டு டை."

" கழுத்தில் கையை வைத்து நெரித்து இப்படியா கொன்றீர்கள் ?"

"ஆமாம்.... நேற்றிரவு.... நான் இருந்த அந்த அறைக்குள் அவள் வருகிறாள். அவள் நிழல்தான் எனக்குத் தெரிகிறது. என்னைத் தாக்க வருகிறாள். இது என் ஆண்மைக்குச் சவால்.... அவள் கழுத்தில் கையை வைத்து நெரிக்கிறேன்.... ஆண்மை வென்றது.... துவண்டு கீழே விழுந்துவிட்டாள். 'பாடி'யை ரீட்ஜ்' அருகே போட்டுவிட்டு வந்தேன்.... 'எ ஸ்கெலிடன் இன் மை கப்போர்ட்!'

ராகேஷ் அவர் அருகில் சென்று அவருடைய கண்ணுக்குள் உற்றுப் பார்த்துக் கொண்டே கேட்டான்: " உங்கள் நேர்மையின் ஆணையாகச் சொல்லுங்கள்.... நீங்கள்தான் கொன்றீர்களா?"

ஒரு வினாடித் தயக்கம் அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டது. ராகேஷ் பதிலை எதிர் பார்க்காமல் சற்றுப் பின்னால் தள்ளி நின்று கொண்டான்.

"எஸ்..... நான்தான் கொன்றேன்."

"நோ...."

"என்ன 'நோ'? உனக்கென்ன தெரியும்?"

"அம்மாவைக் கையினால் நெரித்து யாரும் கொல்லவில்லை. துணியைச் சுற்றி இறுக்கியிருக்கிறார்கள்......"

" துணியா ?"

"இதுவே போதும்..... நீங்கள் கொல்லவில்லை. செய்யாத குற்றத்தைச் செய்ததாகச் சொல்லிக் கொள்வதில் உங்களுக்கு என்ன பெருமை.....?"

"நோ.... நான்தான் கொன்றேன்..... நான்தான் கொன்றேன்."

அவர் உரக்கக் கத்திக் கொண்டே கட்டிலில் சாய்ந்தார். கண்களை மூடிக் கொண்டார்.

ராகேஷ் அறையை விட்டு வெளியேறினான்.

ஹாலில் ரவோஜா உட்கார்ந்து கொண்டிருந்தார்.

" எப்படி இருக்கிறார்?" என்றார், ரவோஜா.

"அப்ஸெஷன் இருக்கிறது."

"என்ன 'அப்ஸெஷன்'?"

"அம்மாவை அவர் கொன்றதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்."

" இதை 'அப்ஸெஷன்' என்று எப்படிச் சொல்லுகிறாய்?"

" அவர் கொன்றிருக்க முடியாது. கையினால் நெரித்துக் கொன்றதாகச் சொன்னார். துணியினால் இறுக்கிக் கொல்லப்பட்டாள் என்று நான் சொன்னது, அவருக்குச் செய்தியாகத்தான் இருந்தது."

"அப்புறம்?"

"உங்களுக்கு அவரை நன்றாகத் தெரியும். அவரால் ஓர் ஈயைக்கூடக் கொல்ல முடியாது."

இதுவரை பேசாமலிருந்த அஷோக் கேட்டான்: "வீட்டில் உள்ளவர்களைத்தான் நீங்கள் சந்தேகிக்கிறீர்களா ?"

"அப்படியில்லை.... எல்லாச் சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்ள வேண்டாமா ?" என்றார் ரவோஜா.

" 'ரீட்ஜ்' அருகே 'பாடி' கிடைத்ததென்றால், அங்கே அம்மா போக வேண்டிய அவசியம் என்ன ?"

" வேறு இடத்தில் கொலை செய்து 'பாடி'யை அங்கு கொண்டு போட்டிருக்கக் கூடிய வாய்ப்பும் உண்டு" என்றார் ரவோஜா.

" இப்படித் திட்டமிட்டு என் தந்தை கொலை செய்திருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ?" என்று கேட்டான் ராகேஷ்.

" நான் எதைப் பற்றியும் உறுதியான தீர்மானத்துக்கு வரவில்லை. தகவல்களையும் யூகங்களையும் ஒட்ட வைத்துப் பார்க்க முயல்கிறேன், அவ்வளவுதான்" என்றார் ரவோஜா.

அப்பொழுது அஞ்சலியும் ஷம்மியும் உள்ளே நுழைந்தனர்.

அஞ்சலி எல்லார் மீதும் பொதுவாக ஒரு பார்வையைச் செலுத்தினாள்.

"இந்த வீடு ஒரு நரகம். நீங்கள் எங்கே வந்தீர்கள் ?" என்று ரவோஜாவைக் கேட்டாள்.

"ஏன் நரகம் என்கிறாய்?"


"இதுவரையில் இங்குகொலை நடக்கவில்லை. அதுவும் நடந்துவிட்டது. வேறு என்ன வேண்டும் ?"

"கொலையைத் தவிர, வேறு என்ன இங்கு நடப்பதுண்டு?" என்று கேட்டார் ரவோஜா.

"அஞ்சலி... யு ஆர் அப்ஸெட்...கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்" என்றான் அஷோக்.

(அடுத்த இதழில் முடியும்)

புதுமையின் பொலிவுக்கு
ஹமாம்



நாள்தோறும் ஹமாம் தேய்த்துக் குளியுங்கள். ஹமாம் தரும் நறுமணமுள்ள நுரை உங்கள் சருமத்தை சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் ஊட்டுகிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.



அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்

டாடா
தயாரிப்பு

CMTH-14-152 TAM

‘‘சூர தலைவனும் நிலவினிலே ராதே ராதே... நான் கண்டெடுத்த பெண்மணியே ராதே ராதே....’’

பக்கத்து அறையிலிருந்து காற்றைக் கிழித்துக்கொண்டு — கூடவே காதையும் கிழித்துக் கொண்டு — வந்த அந்தப் பாட்டைக் கேட்டதும்—

‘டப்’ என்று படித்துக் கொண்டிருந்த வார இதழைக் கடுங்கோபத்துடன் மூடினாள் அவள்.

‘எவ்வளவு ஒன்றிப் போய் இந்தக் கதையைப் படித்துக் கொண்டிருந்தேன்? முக்கியமான கட்டத்திலா இம்மாதிரி அபஸ்வரக் கூச்சலிட்டுக் கொண்டிருக்க வேண்டும்? சே சே!’

அந்தக் கதையைப் படித்து முடித்துவிட வேண்டும் என்பதற்காகவே சிறிது நேரத்துக்கு முன்பு கோவிலுக்குக் கூப்பிட்ட அம்மாவைக் கூடத் தட்டிக் கழித்து விட்டாள். அவள் விரும்பிய வண்ணமே தனிமை இடைத்தும். படிக்க ஆரம்பித்தபோதே இப்படி ஒரு தொந்தரவா?

‘பக்கத்து அறைக்காரர் வெளியே போயிருப்பதாக அல்லவா நினைத்திருந்தேன்? உள்ளேயேதான் இருக்கிறாரா? இவர் வந்து இரண்டு மாதங்கள் போல் ஆகிறது. இது வரை இல்லாமல் இந்த ஒரு மாதமாய்த்தான் எதையாவது சமய சந்தர்ப்பம் தெரியாமல் பாடித் தொலைத்துக் கொண்டிருக்கிறார்!...’

அவள் இவ்வாறு எரிச்சலில் இருக்கும் போது— மறுபடியும்—

‘‘மாதரசே! செல்வப் பெண்ணே ராதே! ராதே!’’ என்று அவள் காதில் உருகிய ஈயமாய்ப் பாய்ந்து வந்தது பாடல்.



ரசிகை

அன்பிற்கனியவன்

''அம்மணி!'' பவ்யமாக அழைத்தான், அவன். ''இது உங்கள் வீடாக இருக்கலாம். ஆனால் நான் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கும்போது இது என் சொந்த அறை போலத்தானே? இங்கு நான் குடிவரும்போது கூடத் தண்ணீரை அதிகமாக உபயோகிக்கக் கூடாது, சுவரில் ஆணிகளை அடிக்கக் கூடாது, உங்கள் அறைக்கென்று தனியாக உள்ள வாசலைத் தவிர எங்கள் வாசலை உபயோகிக்கக் கூடாது, மின்சாரத்தை அதிகம் செலவழிக்கக் கூடாது... என்று இப்படித்தானே சொல்லியிருந்தீர்கள். பாடக்கூடாது என்று கூடவா சொல்லியிருந்தீர்கள்? நான் பாடத்தான் செய்வேன்...'' தொண்டையைச் செருமிக் கொண்டான். ''ராதே..ஏ..ஏ..!''

படபடப்போடு அவள் சொன்னாள்: ''நீங்கள் பாடுங்கள் — ஆடுங்கள்....வேண்டாமென்று சொல்லவில்லை. இப்போது பாடிய பாட்டைத்தான் வேண்டாம் என்கிறேன்.''

''என்ன?'' அதிர்ந்தான் அவன். ''எங்கள் பாரதி பாட்டுக்குத் தடையா? ஆ... நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலைகெட்ட மாதுதனை நினைந்துவிட்டால்!''

அவ்வளவுதான்.

'இனிப் பொறுப்பதில்லை நெஞ்சே' என்பது போல் விரைந்தாள்.

''நிறுத்துங்கள், நிறுத்துங்கள்!'' என்று கத்தினாள். அவளது சிவப்பு முகம் கோபத்தால் மேலும் சிவப்பாகி விட்டது.

அறைக்குள் உட்கார்ந்து கன குஷியாக வெளியில் பார்த்தவாறு பாடிக்கொண்டிருந்த அந்த வாலிபன் திடுக்கிட்டான்.. இவளைப் பார்த்தான். இலேசாகச் சிரித்தான். ''ஹி...ஹி...''

''என்ன ஹிஹிக்கிறீர்கள்?'' என்று சிடுசிடுத்தாள்.

''உங்களைப் பார்த்ததும் சாட்சாத் மதுரையை எரித்த மிஸஸ் கோவலனின் ஞாபகம் வந்துவிட்டது'' என்றான் அவன். ''நல்லவேளை! அவள் முன்பு தோன்றியது போல அக்கினி தேவன் உங்கள் முன்பு தோன்றவில்லை! அடியேன் பாக்கியசாலி!''

''இண்டல் இருக்கட்டும். பாடக் கூடாது தெரியுமா?''

''தெரியாதே!... ஏன், ஔரங்கசீப் இங்கே இருக்கிறாரா என்ன? நீங்கள்தானே இருக்—''

''ஷட் அப்... பாடக் கூடாதென்றால் கூடாது!''

''ஏன் குதிக்கிறீர்கள்? தடை பாரதி பாட்டுக்கல்ல — சற்று முன்பு நீங்கள் பாடியதில் உள்ள ஒரு வார்த்தைக்காக மட்டும்தான்!'' அவள் அழுத்தமாகக் கூறினாள். ''என் பெயர் என்ன தெரியுமா? ராதை.''

''நல்ல பெயர் ராதை...ராதை...'' அவனுக்குத் தன் பெயர் ஏற்கெனவே தெரியும் என்பது அவளுக்கும் தெரியும்.

''நீங்கள் திருப்பிச் சொல்வதற்காகவா என் பெயரைச் சொன்னேன்? நீங்கள் ஏன் பாடக்கூடாது என்பதை விளக்குவதற்காக!''

கோவிலிலிருந்து அம்மா வீட்டுக்கு வருவது தெரியவே ராதை திரும்பவும் ஹாலுக்கு வந்தாள்.

ஓர் அலுவலகத்தில் வேலை செய்யும் கணபதி, தங்குவதற்காக வீட்டுக்காக அலைந்து தேடிக் கடைசியில் ராதையின் வீட்டுக்கு வந்தான். ஹாலை ஒட்டியுள்ள வலது பக்க அறை. வாசலுடன் கூடியது. ராதையின் அம்மா அவனிடம் வாடகை வாங்குபவள் என்ற முறையில் இல்லாமல் உறவுக்காரி போல் அன்பாகப் பழகினாள். ராதையோ அவனிடம் ஆவசியம் ஏற்படும்போது மட்டுமே பேசுவாள். மற்றப்படி சதா வார, மாத இதழ்களைப் படித்துக் கொண்டிருப்பாள். 'சரியான புத்தகப் புழு!' என்று அவளைப் பற்றிக் கணபதி எப்போதோ முடிவுக்குவந்து விட்டான்.

ஒரு நாள் மாலை.

அலுவலகத்திலிருந்து தன் அறைக்குத் திரும்பிய கணபதி டவலை எடுத்துக் கொண்டு கிணற்றை நோக்கி வீட்டின் பின்புறம் கிளம்பிக் கொண்டிருக்கும்போது—

அறை வாசலருகே நின்றாள் ராதை!

அவனுக்குத் திகைப்பு. என்ன இது புதிதாக?

''எனக்கு எது நிறையப் பிடிக்கும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்குமே?'' என்று கேட்டாள் ராதை.

''ஓ, நிச்சயமாய். பைத்தியம்தான் பிடிக்கும்'' என்றான் இவன் சிறிதும் சிரிக்காமல்.

''ஊம்!'' விழிகளைக் கடுமையாக்கினாள். உடனே அமைதி அடைந்தவளாய், ''எனக்கு யாருடைய கதைகள் அதிகம் பிடிக்கும் தெரியுமா?''

அவன் எரிச்சலுடன் சொன்னான்: ''தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. இதில் எனக்கென்ன லாபம்?''

''உமாநாதன் கதைகளை!''

''சந்தோஷம்...'' தலையை ஆட்டினான் அவன். ''வழியைவிட்டு விலகிக் கொண்டால் நன்றாயிருக்கும்.''

'சரியான அசடு! கொஞ்சம்கூட இலக்கிய ரசனை இல்லாதவன்!' என்று நினைத்துக் கொண்டாள் ராதை. ''இதில் எனக்கு

மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்ருல்....'' அவள் வழியை விடுவதாக இல்லை. ''அந்த உமாநாதனுக்குக் கடிதம் போட்டிருந்தேன். பதில் வந்திருக்கிறது....''

'' வைத்து, மாலையிட்டு, பூஜை செய்ய வேண்டியதுதானே?'' என்று எரிச்சலுடன் சொன்னுன்.

'' அப்படித்தான் செய்யப் போகிறேன். அவரைப் பார்க்க அனுமதி கேட்டிருந்தேன். வரச் சொல்லியிருக்கிருர். போக வேண்டும்.''

''ச்சு! இது மாதக் கடைசி. இல்லாவிட்டால் நீங்கள் பஸ்ஸில் போவதற்குப் பணமாவது கொடுப்பேன்.''

'' உங்களிடம் யார் கேட்டது? என்னிடம் இல்லாத பணமா? சிறந்த சிறுகதை ஆசிரியரைச் சந்திக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. எவ்வளவு பெரிய பாக்கியம்!''

'' இதை நீங்கள் என்னிடம் சொல்லி அதை நான் கேட்பது எவ்வளவு பெரிய துர்ப்பாக்கியம்! நீங்கள் சந்தியுங்கள்; சந்திக்காமல் இருங்கள். எனக்கென்ன வந்தது?''

''கசாப்புக் கடைக்காரனுக்கு, கருணை பற்றி என்ன தெரியும்?'' என்று முணுமுணுத்தவாறே விலகிக் கொண்டாள் அவள்.

அலட்சியமான சிரிப்புடன் அவளை விநோதமாகப் பார்த்தபடி நகர்ந்தான் ,அவன்.

ராதைக்கு ஒரே பரபரப்பு. இதயத்தில் துடிதுடிப்பு.

ஆம்! இதோ உமாநாதனைச் சந்திப்பதற்காகக் கிளம்பிக் கொண்டிருக்கிருள்!

பஸ்ஸில் ஏறி, குறிப்பிட்ட ஸ்டாப்பை அடைந்தாள். அதன் பக்கத்திலேயே இருந்தது அந்தப் பெரிய லாட்ஜ். உள்ளே விரைந்தாள். அறைகளின் எண்களைக் கண்களால் தாவினுள். 16, 17...18...

இதோ 19!

ஒருக்களித்துச் சாத்தப்பட்டிருந்தது அறைக் கதவு. கதவிலே உமாநாதன் என்று எழுதப்பட்டிருந்தது அவளுக்கு நிச்சயத்தைத் தந்தது. கையைத் திருப்பி, கடிகாரத்தைப் பார்த்தாள். எவ்வளவு சரியான நேரத்துக்கு வந்திருக்கிருள்!...

உள்ளத்திலும், கண்களிலும் ஆர்வம் மின்ன, மெதுவாகக் கதவைத் தள்ளியவாறு உள்ளே நுழைந்தாள் புன்னகையுடன்.

உள்ளே அமர்ந்திருந்த உமாநாதனைக் கண்ட போது —

அவளை யாரோ தூக்கி அதல பாதாளத்தில் போட்டது போலிருந்தது.

'' நீங்களா அந்த உமாநாதன்?'' அவளுடைய கேள்வியில் திடுக்கிடலும் வியப்பும் கலந்திருந்தன.

''ஆம். நானேதான்!'' என்ருன் கணபதி இளம் சிரிப்புடன். ''உட்காருங்கள் ராதை!''

உட்கார்ந்தவாறே சொன்னுள் அவள்: ''கதைகளில்தான் எதிர்பாராத திருப்பங்கள் தருகிறீர்கள் என்ருல், வாழ்க்கையிலும் இப்படியா?''

'' உங்களிடம் கொஞ்சம் வேடிக்கை செய்து பார்க்கத்தான் ராதை! நீங்கள் எம் பெயரிட்டுப் பத்திரிகைக்கு அனுப்பிய கடிதம் நம் வீட்டு முகவரிக்குத்தான் எனக்கு அனுப்பப்பட்டது. என் அறைக்குத்தான் தனியாய் முன் வாசல் இருக்கிறதே! அதனால் எனக்கு வருகின்ற தபால்கள் எல்லாம் நேரடியாக என் கைக்கே வந்து விடுகின்றன. உங்களுக்குப் பதில் எழுதும்போதுகூட என் இருப்பிடமாக நம் வீட்டு முகவரியை எழுதினல் நீங்கள் கண்டு பிடித்துவிடுவீர்களே என்பதற்காகவே இந்த முகவரியை எழுதினேன். உண்மையில் இது என் நண்பனின் அறை. என் வேண்டுகோளுக்கிணங்கி, அவன் எனக்காக இதை இன்று மட்டும் ஒதுக்கியிருக்கிருன்....''

கணபதியின் பேச்சில் உற்சாகம் துள்ளியது. அவளையே ரசித்துப் பார்த்தவாறு முறுவலித்துக் கொண்டிருந்தான்.

''....இப்படிப்பட்ட நீங்கள் ஒன்றும் தெரியாதவர் போன்று நடித்து என்னை நம்ப வைத்துவிட்டீர்களே!'' ராதை சிரித்தபோது அதில் நாணமும் இருந்தது. ''நான் உங்களை மிகவும் மதிக்கிறேன் சார். பெரிதும் விரும்புகிறேன் — அதாவது நீங்கள்தான் உமாநாதன் என்று தெரிந்த பிற்பாடு....''

கணபதியின் கண்கள் மின்னின. தன்னை விரும்புவதாக அவளே சொல்கிருள்! தன்னை இதோ அவள் நெருங்கிக் கொண்டேயிருக்கிருள்! அவன் மனத்தில் இன்பக் கோட்டை உயர்ந்தது, வானளாவ.

ராதை தொடர்ந்தாள்: ''ஆறு மாதங்களுக்கு முன்பு வரை பொழுதுபோக்குக்காகவேதான் எல்லாப் புத்தகங்களையும், எல்லாக் கதைகளையும் படித்து வந்தேன். எழுதியவருடைய பெயரையே நான் கவனிப்பதில்லை. அந்தச் சமயத்தில்தான் என் தூரத்து உறவினரான சுரேந்திரன் எங்கள் வீட்டுக்கு வந்தார். முன்பும் அடிக்கடி அவர் வருவதுண்டு. அவரிடம் முன்பே நான் என் மனத்தைப் பறிகொடுத்துவிட்டேன். அவருக்கு உங்கள் கதைகள் என்ருல் அப்படியொரு வெறி. அவர் எதைப் பேசினுலும், அதை உங்களின் ஏதாவது ஒரு கதையோடு இணைத்தே பேசுவார். தவிர, உங்கள் மீது அவருக்கு ரொம்பவும் மரியாதை, ஒரு பக்தி. அவர் மீது நான் காதலாகியிருப்பது அவருக்கும் தெரியும். அவரும் என்னை விரும்பினுலும், வெளியே காட்டிக் கொள்ள ஏனே தயங்குகிருர். அவரிடம் மிகவும் நெருங்குவதற்காகவும், அவருக்கேற்றவளாக ஆவதற்காகவுமே அவர் விரும்புகின்ற உங்கள் எல்லாக் கதைகளையும் நான் விடாமல் தேடிப் பிடித்துப் படிக்கவும், படித்தவைகளை அவரிடம் விவாதிக்கவும் ஆரம்பித்தேன். தவிர, உங்களை நேரில் கண்டு பேச நான் ஆசைப்பட்டதற்குக்கூட என் சுயநலம்தான் காரணம். என் காதல் விரைவில் கல்யாணத்தில் முடிய உங்கள் உதவி தேவைப்படுகிறது. எனக்காக நீங்கள் சுரேந்திரனிடம் சொல்ல வேண்டும் சார்! ஏனெனில் நீங்கள் சொன்னுல், அவர் மறுக்காதவர்....''

கணபதிக்கு அந்த அறையே சுற்றுவது போலிருந்தது.



குழந்தைகள் ஷூவில் பாலிஷ் மறுகிட்டால் புதுசில வெட்டிய உருளைக்கிழங்குத் துண்டை உபயோகித்து, பிறகு பாலிஷ் போடவும்.

இவான் வில் ஸெய் சந்திகை - பாலி

கொரிக்கக் கொஞ்சம்

— தராஜா —

"பெயின்ட் கடைக்காரர்கள் சங்க ஆண்டு விழாவாம்... இன்விடேஷன் வந்திருக்கு..."

"டீ பார்ட்டியா, டின்னரா?"

"ரெண்டும் இல்லே... வார்னிஷ் பார்ட்டி!"



"'எல்லோரையும் நம்புங்கள்' என்ற தலைப்பில் ஒரு படம் எடுத்தீங்களே - அது ஏன் இன்னமும் ரிலீஸ் ஆகவில்லை?"

"ஹீரோ கால்ஷீட் கொடுக்காமல் ஏமாற்றி விட்டார்; பைனான்ஷியர் பணம் தராமல் டபாய்த்து விட்டார்; விநியோகஸ்தர்கள் அட்வான்ஸ் கொடுக்காமல் மோசம் பண்ணி விட்டார்கள்... அதனால்தான்!"



"ரயில்லே சங்கிலியைப் பிடிச்சு இழுத்தான்னு என் மச்சினனை ஆறு மாசம் ஜெயில்லே தள்ளிட்டாங்க சார்..."

"வழக்கமா அபராதம்தானே போடுவாங்க?"

"இவன் பிடிச்சு இழுத்தது ஒரு பெண்ணின் கழுத்திலே இருந்த தங்கச் சங்கிலியை சார்!"



"அப்பளம் நிறையத் தின்றால் காது கேட்காது என்பதெல்லாம் சுத்தப் பொய்... நான் தினமும் இருபது அப்பளம் தின்கிறேன் - எனக்கு ஒன்றும் ஆகவில்லையே?"

"எத்தனை வருஷமாக இப்படிச் சாப்பிடுகிறீர்கள்?"

"என்ன சார் கேட்டீர்கள்?... கொஞ்சம் உரக்கக் கேளுங்களேன்!"



"உங்க வீட்டிலே கிளி ஒண்ணு வளர்த்துண்டிருந்தீங்களே - அதை எங்கே காணோம்?"

"என் பையனுக்குக் கொஞ்சம் பொறுமை அதிகம்... அவன் அதை விரட்டிட்டான்..."

"பொறுமையா?... எதனாலே?"


"அந்தக் கிளி ஒண்ணிலேருந்து நூறு வரை இங்கிலீஷ்லே கரெக்டா சொல்லும்...என் பையனுக்கு இருபதுக்கு மேலே சொல்ல வராது!... அதனாலேதான்!"




"அதோ போறாரே, அவருக்குப் படிப்பு வாசனையே கிடையாது.. இருந்தாலும் வியாபாரத்திலே லட்சம் லட்சமா சம்பாதிச்சுட்டார்..."

"என்ன வியாபாரம்?"

"செண்ட் வியாபாரம்!"



வேகத்துக்கு ஏற்ற வெகுமதி




○ சர்வதேச மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் கலந்துகொள்ளும் திறமை படைத்த ஷெரீப் தயானுக்கு ஜப்பானில் உள்ள நொருகி மோட்டார் நிறுவனம் ஒரு 'யமஹா' மோட்டார் சைக்கிளை வெகுமதியாக அளித்திருக்கிறது. இத்தகைய வெகுமதியை இந்தியர் பெறுவது இதுவே முதல் தடவை. சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் ஸ்தாபனம் இந்த 'யமஹா' மோட்டார் சைக்கிளை இலவசமாகத் தன் விமானத்தில் ஏற்றி வந்து ஷெரீப் தயானுக்கு உதவியது.

''உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த 'யமஹா' மோட்டார் சைக்கிளின் விசேஷத் தகுதிகள் என்ன?''

''சர்வ தேச மோட்டார் சைக்கிள் பந்தயத்துக்குத் தகுந்தபடி தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்த 'யமஹா'! வெகு விரைவாகச் செல்லும் திறமை படைத்த இவ்வண்டி இலேசில் பழுதடையாது. சாதாரணமாக ரேஸ் மோட்டார் சைக்கிள் காற்றுப் பதனம் செய்யப்பட்டிருக்கும். இதில் விசேஷமாக 'நீர்ப் பதனம்' புகுத்தப்பட்டிருக்கிறது. 345 சி.சி. மோட்டார் சைக்கிள் 'யமஹா'வின் எடை 115 கிலோக்கள்தான். எடையை வெகுவாகக் குறைத்திருக்கிறார்கள்!'' என்று 'யமஹா'வின் சிறப்பை நவின்றார் ஷெரீப் தயான்.

படம்: ஷெரீப் தயானுக்கு 'மெக்கானிக்'காக உதவும் செல்லப்பன், ஷெரீப் தயான், சிங்கப்பூர் ஏர் லைன்ஸ் சேல்ஸ் மானேஜர் ஜே. பெலிக்ஸ் வாஸ்.



ஒயிட் செஞ்சுரியா? பிளாக் செஞ்சுரியா?

○ கிரிக்கெட்டில் செஞ்சுரி கேள்விப்பட்டிருக்கலாம்! ஆனால் ஒயிட் செஞ்சுரி, பிளாக் செஞ்சுரி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?


கேரம் விளையாட்டில் ஆரம்ப ஆட்டக்காரர் ஒன்பது வெள்ளைக் காய்களையும் சிவப்புக் காயையும் ஒரே மூச்சில் குழிக்குள் போடும் சாமர்த்தியத்துக்கு 'ஒயிட் செஞ்சுரி' என்று சொல்கிறார்கள். எதிரி ஆட்டக்காரர் கறுப்புக் காய்கள் ஒன்பதையும் சிவப்புக் காயையும் ஒரே மூச்சில் குழிக்குள் போட்டு விட்டால் 'பிளாக் செஞ்சுரி' என்கிறார்கள்! சென்னையில் நடைபெற்ற தேசிய கேரம் விளையாட்டுப் போட்டியில் லாஸர் பல ஒயிட் செஞ்சுரிகளைப் போட்டு ரசிகர்களைத் திணற அடித்தார்! ஆனால் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த காதிர்கான் அவரைத் தோற்கடித்து அனைவரையும் அயர வைத்தார்! ஆனால் இறுதியில் தேசிய சாம்பியன் ஆனவர் சுஹாஸ் காம்ப்ளி!

○ சென்னை நகரசபை இன்டோர் ஸ்டேடியத்தில் பெண்மணிகளுக்கான கேரம் போட்டியில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது! பெரியவர்களுக்கான போட்டியில் விதர்பாவைச் சேர்ந்த சிறுமி ஷீலா குப்தே வெற்றி பெற்றாள்! சிறுமிகளுக்கான போட்டியில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி மாதவி கார்வே வெற்றி வாகை சூடினாள்! டீம் சாம்பியன் போட்டியில் தமிழ் நாடு வென்று தமிழ் நாட்டின் பெருமையைக் காத்தது. — குன்றுமணி

படம்: கேரம் தேசியப் போட்டியில் மகாராஷ்டிர சாம்பியன் சுஹாஸ் காம்ப்ளியும், தமிழக சாம்பியன் லாஸரும்.

ஆளப் பிறப்பானே, ஆறடி வளருவானே'...
கருத்தரித்தவள் கனவு பலித்திடுமே
கால்ஷியம்-ஸாண்டோஸ்
இனிப்பினிலே!

கருவிலிருக்கும்போதே உங்கள் குழந்தையின் பற்களும் எலும்புகளும் அமையத் தொடங்கும். அப்போதுதான் அவனுக்குக் கால்ஷியம் மிகவும் தேவை. அளித்திட உங்களால்தான் முடியும். அதற்கு இலகுவான வழி: கால்ஷியம்-ஸாண்டோஸ்.



அன்றாடம் மும் முறை மென்றிடுங்கள் 3-4 வில்லைகள்; வைட்டமின்கள் C, D, B_{12} அடங்கிய, இனிய ராஸ்ப்பெர்ரி-சுவையுள்ள கால்ஷியம்-ஸாண்டோஸ். வளரும் குழந்தையின் பற்களும் எலும்பும் வலுப்பெறும்; கால்ஷியம் குறைபாடுகளும், காலில் பிடிப்பும், தசை வலியும் வராது குழந்தைக்கு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்—
தூய கால்ஷியம் படைப்பதில்
உலக முன்னோடிகள்.





SANDOZ

கால்ஷியம் ஸாண்டோஸ்®

தினமும் தேவை எவருக்கும்

dCP/CS/9iTam

மன்னித்து விடு, சாரு!

ஓ. நமசிவாயம்

அந்த மணப் பெண், பொன்னுன இச்சுப தினத்தில் ஒரு புது அத்தியாயம் மலர்வதால், தங்கப் பொம்மை மாதிரி, தந்தச் சிலை மாதிரி, பூரணச் சந்திரன் மாதிரி நாணத்தோடு அமர்ந்திருந்தாள்.

அவள் ரூபவதி! அவள் அருகே வீற்றிருந்த மணமகனே சுந்தர ரூபன்! அங்கு கூடியிருந்த அனைவரும் இந்த அபூர்வமான ஜோடிப் பொருத்தத்தைக் கண்டு அதிசயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எங்கும் மகிழ்ச்சி, சிரிப்பு! எங்கும் குதூகலம்!

அந்த மணப் பெண் பட்டாடை அணிந்து குங்குமப் பொட்டிட்டு, மலர் மாலை சூடி, 'மகாலட்சுமி'போல் நாணத்தோடு மண அறையில் அமர்ந்திருந்தாள். அவள் எண்ணங்கள், ஆசைகள் யாவும் ஈடேறிவிட்டன வல்லவா? ஆனால் கர்வப்பட என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை — நல்லவேளையாக அவள் தந்தை அவளது விருப்பத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதைத் தவிர, அவளுடைய உயர்ந்த நிலையோடு ஒப்பிடும்போது அவன் சாதாரணம்! மிகச் சாதாரணம்!


'கிரிக்கெட்'டில் அப்பொழுதுதான் அவன் புகழ் பெறத் தொடங்கியிருந்தான். பம்பாயிலும், கல்கத்தாவிலும் நடைபெற்ற 'டெஸ்ட் மாட்ச்'களில் அவன் குவித்த ரன்களைப் பற்றி 'வீக்லி'யில் கட்டுரைகளும், படங்களும் வந்தன. தோழிகள் அவனைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அவளும் ஒரு நாள் சென்றிருந்தாள். அன்று அவன் ஆட்டம் அபாரம்! ஆட்டம் மட்டுமா அவளைக் கவர்ந்தது? அவனும்தான்! பிறகு நகரில் எந்த இடத்தில் அவன் ஆட்டம் நடைபெற்றாலும், அங்கே முன் வரிசையில் அவளைக் காண முடிந்தது. பிரேமை மெல்ல அரும்பிற்று. வளர்ந்து முழு நிலவாய்ப் பிரகாசித்தது.

யார் அந்த 'இரகசியத்தை', அவள் அந்தரங்க 'தாப'த்தைத் தந்தையிடம் சொன்னார்கள்? நாணத்தோடு உண்மையை அவள் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. தந்தை காரை எடுத்துக் கொண்டு விரைந்தார். அவரால் முடியாதது எது? திருமணத்தை நிச்சயம் பண்ணிக் கொண்டு திரும்பினார். இவ்வளவு சுலபமாக முடிந்து விடும் என்று அவள் நினைக்கவேயில்லை. அதனால்தான் இந்த ஆனந்தமா!

கொட்டு மேள முழக்கத்தோடு, பெண்களின் பரிகாசம், கேலி, கிண்டல், சிரிப்போடு, பெரியவர்களின் ஆசியோடு அவள் கழுத்தில் அவன் தாலி கட்டினான்.

'' விலகுங்கள்.... வழி விடுங்கள்....''

முதிர்ந்த வயது; தளர்ந்த நடை; நரைத்த கூந்தல்; அம்மூதாட்டி முன்னால் வருவதற்காக அனைவரும் வழிவிட்டார்கள்.



போட்டிக் கதை-2

"என் ஜென்ம சாபல்யம்! இவ்வைபவத்தைக் காண்பதற்கே நான் பிழைத்திருந்தேனடா மகனே....!" என்று நினைத்துப் பூரித்துப் போனாள்.

இந்த வைபவம், இவ்விழா — மணவிழா உண்மையாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? பொய்யில்லையே! நிஜம் தானே! எப்படி நம்புவது? எப்படி நம்பாமல் இருப்பது? மண மேடையில் அமர்ந்திருப்பது யார்? அவளுடைய மகன்! இந்தக் கோலாகலங்கள் எவர் பொருட்டு? அவள் மகனுக்காக......!

அவளை மகனைப் பெற்றதே பேரதிர்ஷ்டம்! பெரும் பாக்கியம்! மகனைப் பிறந்து அவளுக்குப் புகழும், கீர்த்தியும் ஏற்படுத்தினான். "அதோ, அவள் மகன் படிப்பில் முதல் மாணவன்! விளையாட்டுகளிலும் அவன்தான் முதல் மாணவன்!" என்று அனைவரும் அவளைப் பாராட்டும்போது, அவள் அகம் குளிரும்.

ஓர் ஓலைக் குடிசையின் சாணமிட்டு மெழுகிய மண் தரையில் அவனை ஈன்ற நாள்முதலாய், கௌரவமுள்ள, உயர்ந்த, சிறந்த மனிதனாக்கி மணக் கோலத்தில் பார்க்கும் இன்றைய தினம் வரை என்னென்ன அரும்பாடுகள் பட்டிருப்பாள்! எத்தனை வீடுகளில் பாத்திரங்கள் துலக்கினாள்! வேலைக்காரியாக, சமையல்காரியாக உழைத்தாள் மகனுடைய முன்னேற்றம் ஒன்றுக்காகவே அயராது, சலியாது பாடுபட்ட அவள் கைகள் - அவன் வெற்றிகளுக்காகத் தியாகங்கள் புரிந்து மெலிந்த அவள் கரங்கள் அவனை ஆசீர்வதிக்க உயர்ந்தன. "சகல சௌபாக்கியங்களுடனும் சிரஞ்சீவியாக வாழ்ந்திடு, மகனே!"

கல்யாண முகூர்த்தம் முடிந்துவிட்டது.

'அவர்கள் வந்திருப்பதாக' வேலைக்காரன் சொன்னவுடனே, அவன் திடுக்கிட்டு விட்டான். அடுத்த அறையில் அவன் மனைவி விமலா மறுநாள் காஷ்மீர் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள். அப்போதுதான் தேன் நிலவு. 'எந்த நிமிஷமும் வந்து விடலாம்' என்று



அச்சத்தோடு, தவிப்போடு நேற்று முழுதும் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் வரவில்லை. இப்போது வந்து விட்டார்கள்.

'அவர்கள் வருகை' உண்மையாகவே ஒரு நேரடியான பீரங்கித் தாக்கு. எந்த வகையிலும் அதை அவனால் சமாளிக்க இயலாது. ''நான் இல்லை என்று அவர்களை அனுப்பி விடு'' என்று வேலைக்காரனிடம் சொல்லி முடிப்பதற்குள் அவர்களே உள்ளே வந்து விட்டார்கள்.

''வணக்கம் பையா ! அதிக நேரம் நாங்கள் உனக்குத் தொந்தரவு கொடுக்கப் போவதில்லை. சீக்கிரமே போய் விடுகிறோம்.''

குப்பென்று வியர்த்துவிட்ட முகத்தைத் துடைத்துக் கொள்ளக் 'கர்ச்சிப்'பைத் தேடினான். என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. சொற்களும் அவனைக் கைவிட்டு விட்டன.

''நேற்றே நாங்கள் வரவில்லை என்று கோபித்துக் கொள்ளாதே. நான் ஒரு வாரமாக ஊரில் இல்லை. இன்றுதான் வந்தேன். அதிருக்கட்டும். ஏண்டா மடையா ! எங்களுக்கு ஏன் நீ அழைப்பு அனுப்பவில்லை ?''

''நாம் உட்கார்ந்து கொண்டே பேசலாமே. உட்கார் சம்பத். உட்கார் சாரு!''

அவர்கள் உட்கார்ந்தார்கள். ''புத்தம் புது சோபா! நாங்கள் உட்காருவதால் அழுக்காகிவிடலாம்'' என்றான் சம்பத்.

'எதற்காக வந்திருக்கிறீர்கள்? 'நீ ஒரு நம்பிக்கைத் துரோகி! அயோக்கியன்!' என்று தூற்றுவதற்கா? தூற்றுங்கள். உங்கள் இதயங்களை உடைத்து நொறுக்கி ரத்தம் கொட்டச் செய்து முடிவில்லாத சோகத்தில் ஆழ்த்தி, விமோசனம் இல்லாத நரகத்தில் தள்ளிவிட்ட பாவி என்று சபியுங்கள்' என்று அவர்கள் முன் மண்டியிட்டுக் கதற நினைத்தான். அவர்களை ஏறிட்டுப் பார்க்கவே தைரியமில்லாது, எங்கேயோ வெறித்துப் பார்த்தான்.

''கல்யாணச் சாப்பாடுதான் கிடையாது. ஏண்டா, காப்பி கூடவா இல்லை ?''

காப்பி வரவழைக்கப்பட்டது.

காப்பியைப் பருகிக் கொண்டே சம்பத் சொன்னான்: ''உன் அதிர்ஷ்டத்தைக் கண்டு எனக்கே பொறாமையாக இருக்கிறதடா!.... டே....டேய்.... சும்மா தமாஷுக்குச் சொன்னேன்....''

அவனுக்குத் தெரியும்—இந்தப் பேச்சு, இந்தத் தமாஷ், இந்தச் சிரிப்பு, எல்லாம் வெறும் போலி. நொறுக்கப்பட்ட அவர்களுடைய மென்மையான இதயங்களிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இந்தச் சம்பத் திடீரென்று எழுந்து பளாரென அவன் கன்னத்தில் அறைந்து, கும்மென நெஞ்சில் ஒரு குத்து விட்டிருந்தான் என்றால், அது எவ்வளவோ இயற்கையாக இருந்திருக்கும்!

ஒரு நிமிஷம் யாரும் அங்கு பேசாததால் அங்கு நிலவிய அமைதி கொடூரமாக இருந்தது. ''முட்டாள் ! நானொரு முட்டாள் ! உனக்கு எந்த ஒரு பரிசும் கொண்டு வரவில்லை, பார் ! அதனால் என்ன? எங்கள் வாழ்த்துக்களையே பரிசாக ஏற்றுக் கொள்.''

எழுந்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தான்; வாழ்த்தினான். ''உற்சாகமாக இருடா, பையா ! தைரியமாக இரு! சந்தோஷமாக இரு! நாங்கள் வருகிறோம்....ஓ.. இதோ, சாரு உன்னிடம் தனியாக ஏதோ பேச வேண்டுமாம்.'' அவர்களைத் தனியே விட்டுச் சென்றான்.

அது — அவனும் சாருவும் தனித்துவிடப்படுவது — மிகக் கொடிய தண்டனையாக இருக்கும் என்று அவன் அஞ்சினான். சாரு அவனை நெருங்கித் தரையைப் பார்த்துக் கொண்டே மெல்லச் சொன்னாள்: ''மறந்து விடுங்கள்!''

அவன் பதிலுக்காக அவள் நிற்கவில்லை.

அவர்கள் புறப்பட்டார்கள். அப்போது அவன் அவர்களிடம் வந்து, ''நடந்து போக வேண்டாம். கார் இருக்கிறது. உங்களை வீட்டில் இறக்கிவிடச் சொல்கிறேன்'' என்றான்.

''மிகவும் நன்றி. ஆனாலும் சிரமம் எதற்கு? நாங்கள் நடந்தே செல்கிறோம். கடவுள் எங்களுக்குக் கால்களைக் கொடுத்திருக்கிறார்.''

இருள்போல் படர்ந்திருந்தது சோகம் அவர்கள் முகங்களிலும், நெஞ்சங்களிலும்.... இருளில் நடப்பதுபோல் தள்ளாடிச் சென்றார்கள்.

''மறந்து விடுங்கள்.''

மறந்துவிட வேண்டும்.... நடந்ததையெல்லாம் மறந்துவிட வேண்டும். அடியோடு மறந்துவிட வேண்டும்.

இந்தச் சம்பத் இருபது வருஷங்களாகப் பழகி வரும் ஆத்ம சிநேகிதன் என்பதையும் அவன் சகோதரி சாருலதா அவனால் உளமார நேசிக்கப்பட்டவள் என்பதையும் மறந்துவிட வேண்டும்.

அவர்கள் சிறு வயதினராக இருந்த போதே, அவனுக்கு ஏற்ற மனைவி அவள்தான் என்று அடிக்கடி பேசப்படும். வாலிபமான போது அது ஸ்திரப்பட்டிருந்ததை மறந்து விடவேண்டும்.

வேலைக்குச் சேர்ந்து சம்பாதிக்கத் தொடங்கிய புதிதில் ஒரு முழம் கதம்பப் பூ வாங்கிக் கொண்டு நண்பன் இல்லாத சமயமாகப் பார்த்து அவர்கள் வீட்டுக்குச் சென்று முகம் பார்க்கும் கண்ணாடியை அவளிடம் கொடுத்துத் தானே அவள் கூந்தலில் அதைச் சூட்டி ரசித்தான். அதை மறந்துவிட வேண்டும்.

இரகசியமாக ஒருதடவை அவளை 'சபைய'ருக்கு மேட்னி ஷோவுக்கு அழைத்துச் சென்றான். அதே தினம், அதே தியேட்டருக்கு நண்பனும் படம் பார்க்க வந்து இவர்கள் பக்கத்திலேயே அமர்ந்து, இடைவேளையில் இவர்கள் திருட்டுத்தனம் வெளிச்சமாகி, என்ன சமாதானம் சொல்வது என்று பரக்கப் பரக்க விழித்தார்களே— அதை மறந்துவிட வேண்டும்.

எப்போது வேண்டுமானாலும், அவர்கள் வீட்டின் எந்த ஒரு பகுதிக்கும் போகும் உரிமை அவனுக்கு இருந்தது. குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தாள். ஓசை எழுப்பாமல் பின்புறமாகப் பதுங்கிச் சென்று 'சிக்'கென அவளை அணைத்துக் கொண்டான்.

திமிற முயன்று தோற்ருன். பட்டுப் போன்ற கூந்தலைச் சற்று விலக்கி அவள் காதுக்குள் 'சாரு.... சாரு...' என்ருன். அவன் இதழ்களின் துடிப்பால் அவள் மேனி சிலிர்த்ததை மறந்துவிட வேண்டும்.

பெருமூச்சுக்களோடு ஆரத் தழுவிய மனைவியை அப்பால் தள்ளி விட்டு மல்லாந்து படுத்தவாறே, 'நான் இந்தத் திருமணத்துக்கு ஒத்துக் கொண்டிருக்கக் கூடாது' என்று நினைத்தான். அவன் தாய் காரிலிருந்து இறங்கி வந்த அந்தப் பெரிய மனிதரிடம் முதலிலேயே ஒப்புக் கொண்டு விட்டாள். ஏனே தாயின் வார்த்தையை மறுத்துப் பேசும் துணிவு அவனுக்கு வரவில்லை. அரை வயிறு சாப்பிட்டுக் கொண்டு, சாயம் கலைந்துபோன, கிழிந்த, பழைய புடவையைக் கட்டிக் கொண்டு, கடினமான வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் அவளைப் பார்க்கும்போதெல்லாம், ''இந்தக் கஷ்டங்களுக்கு எப்படியும் ஒரு முடிவு கட்டியே தீருவேன் அம்மா!'' என்று சங்கல்பம் எடுத்திருக்கிருன். போராட்டங்களும், அவலங்களும் நிறைந்த பால பருவத்தில் பெரிய பணக்காரனுக வேண்டும்; வெளிநாடு சென்று படிக்க வேண்டும்; பிரும்மாண்ட பங்களா ஒன்று கட்ட வேண்டும்; கார் வாங்க வேண்டும் என்று (அஸ்திவாரம் இல்லாமலே) ஆகாயக் கோட்டைகள் எழுப்பியிருந்தான். இந்தத் திருமணம் எந்தவிதப் பிரயாசைகளுமின்றி ஒரு நொடிப் பொழுதில் அவற்றை நிறைவேற்றி விடும் என்று அறிந்ததும் அவன் மனத்தில் சபலங்களும் சலனங்களும் தோன்றி அவனைப் பலி கொண்டனவா? இருக்கலாம். தன்னுடைய அற்பத்தனமான சுயநலத்துக்கு நண்பனிடமும், அவனது சகோதரியிடமும் பின்னல் சமாதானங்களும், விளக்கங்களும் கூறிக் கொள்ளலாம் என்று கருதியிருக்கலாம்.

தவறு நடந்து விட்டது. மன்னிக்க முடியாத, பிராயச்சித்தமில்லாத தவறு நடந்து விட்டது. ஒவ்வொரு நாளும் அவள் நினைவுகள் வேட்டை நாயைப் போல் அவனைத் துரத்தின.

பகலில் தொடர்ச்சியாகச் சிகரெட்டுகளை (எல்லாம் உயர்ந்த ரகம்) ஊதிக் கொண்டு—இரவில் தூக்கம் பிடிக்காமல் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டு, ''ஓர் அற்ப விஷயத்துக்காக நான் ரொம்பத்தான் அலட்டிக் கொள்கிறேன்!'' என்று நினைத்தான். தேவையில்லை, நானென்ன கொலையா செய்து விட்டேன்!

அதன் பிறகு அவள் நினைவுகளால் துன்புறுகிற போதெல்லாம், 'நான் கொலை செய்து விடவில்லை!' என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ள முயன்ருன்.

அழகான மனைவி—ஒரு செவர்லே அல்லது இம்பாலா கார் — பர்ஸ் நிறையப் பணம் — பூரண விடுமுறை நாட்கள் — வாழ்க்கையை இனிமையாக்க இன்னும் என்ன வேண்டும்!

மெதுவாகக் கார் ஓட்டவே அவளுக்குத் தெரியாது. (அவன் மனைவிக்கு). வேகம், படு வேகம். அவன் அஞ்சி, ''மெல்ல.. மெல்ல ஓட்டேன், எங்காவது மோதி விடாமல்....'' என்று அலறுவான்.

அவளுக்கும் 'குஷி' வந்துவிடும். வேகம் மேலும் கூடும்.

''உன்னேடு காரில் வரவே பயமாயிருக்கிறது.''

''நீங்கள் ஓட்டுங்கள், நான் கற்றுத் தருகிறேன்.''

அவளிடம் 'டிரைவிங்' கற்றுக்கொண்ட பின்பு, அவன் மட்டும் தனியாக, நிதானமாக, மிக மெதுவாக நகரின் வீதிகளில் ஒரு தேரைச் செலுத்துவது போலக் காரை ஓட்டிக் கொண்டு செல்கிற போது, 'ஒரு பெண்ணின் கண்ணீர்க் கடலில் நான் இப்போது படகுச் சவாரி செய்து கொண்டிருக்கிறேன்!' என்ற எண்ணம் அவனுக்குத் தோன்ருதது ஒரு நல்ல மாற்றமே!

அவன்மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றிருக்கிருள் என்ற பொன்னுன செய்தி கிடைத்தபோது, பில்லியர்ட்ஸ் ஆடிக் கொண்டிருந்தான். பங்களாவுக்கு விரைந்து பூப்போலக் குழந்தையைத் தூக்கிய அவனிடம் சொன்னுள்: ''சாருலதா' என்று பெயர் வைத்திருக்கிறேம்!''

''என்ன?''

உடனே மறந்து போயிருந்த அந்தப் பழைய சம்பவங்கள் எல்லாம் அவன் நினைவுக்கு வந்தன. சாருலதா! அவளிடம் தனிமையில் பேசப்பட்ட காதல் மொழிகளும், அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும்.....! இலையுதிர் காலத்தில் பொலபொல என்று உதிரும் இலைகளைப் போல் உதிர்ந்து மண்ணேடு மண்ணுகிவிட்டனவே அந்த நினைவுகள்!.... மீண்டும் பிசாசைப் போல் வந்து அவனைப் பயமுறுத்தும்.

''அந்தப் பெயர் வேண்டாம்.''

ஐய்யா! கார்ப்பொரேஷன் குழாயிலே தினசரி தண்ணி வர ஆரம்பிச்சுடுத்து!

புகைப்படம்: எம். நடராஜன்



'' ஏன் ?''

கோபமாக, ''வேண்டாம் என்றால் வேண்டாம் !'' என்றான்.

'' இந்தப் பெயர் அழகாய்த்தானே இருக்கிறது ?''

''எனக்குப் பிடிக்கவில்லை.''

'' ஏன்?''

அவனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. '' பிடிக்கவில்லை என்றால் விடு. விளக்கம் கூற வேண்டியதில்லை.''

'' நீங்களே ஒரு நல்ல பெயராகச் சொல்லுங்கள்.''

'' 'கறுப்பாயி' என்று வை. 'மூக்காயி' என்று வை. அந்தச் சனியன் பிடித்த பெயர் வேண்டாம்.''

அந்த இடத்தைவிட்டு விர்ரென்று ஸிம்பிக் காரை எடுத்துக் கொண்டு மூர்க்கத்தனமான வேகத்துடன் செலுத்திக் கொண்டு சென்றான். எங்கே போவது ? அவள் நினைவுகள் தோன்றாத ஓர் அமைதியான இடத்துக்கு. அப்படியோர் இடம் இந்த நகரத்தில் கிடையாது.

அவன் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த அல்சேஷன் நாய்களைக் கண்டதும் நின்றான்.

''பயப்படாதீர்கள் — கடிக்காது!''

குழந்தையோடு நின்ற அந்தப் பெண் மணி அவன் மனைவியாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ''யார் வேண்டும் ?''

'' சந்திரமோகன்''

''வந்துவிடுவார். உட்காருங்கள்.''

காத்துக் கொண்டிருந்தபோது 'ஏன்டா வந்தோம்' என்று நினைத்தான்.

அரை மணி நேரத்துக்குப் பிறகு வந்த சந்திரமோகன் இவனைப் பார்த்ததும் உணர்ச்சியற்ற குரலில், '' என்ன சௌக்கியமா ?'' என்றான்.

''சௌக்கியம்தான்.''

'சாரு, எப்படி இருக்கிறாள்? அவளை ஏன் அழைத்து வரவில்லை?' என்று கேட்பான் என நினைத்தான். கேட்கவில்லை.

''ஆப்பிள் ஜூஸ் கொண்டு வரச் சொல், விமலா.''

வந்திருக்கவே வேண்டாம். பழைய ஆசாமியல்ல இவன். இவனிடம் எப்படி ஆரம்பிப்பது ?

''நாளை நாங்கள் ஜெனிவாவில் இருப்போம் !''

''.........................''

''மூன்று மாத உலகச் சுற்றுப் பயணம். ஜெனிவா.... ரோம்.... பாரீஸ்.... லண்டன் நியூயார்க்......''

''...........''

மண்ணெண்ணெய் விளக்கின் மங்கிய வெளிச்சம் போதாமல் தெரு விளக்கில் படித்துக் கொண்டிருந்தான் இவன், ஒரு காலத்தில். அந்தப் பழைய ஆள் அல்ல.

'' எங்கள் பிரயாணத்தின் மிக முக்கிய அம்சம் என்ன தெரியுமா ? பாரமௌண்ட் ஸ்டுடியோவில் மார்லன் பிராண்டோவைச் சந்திப்பது !''

''........''

''இந்தப் பிரயாணத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுத வேண்டுமாம். விமலா சொல்கிறாள். என்னால் முடியுமா ?''

''நான் எதற்கு வந்தேன் என்றால்....''

''பணம் வேண்டுமா ?''

''இல்லை. நான் பணத்துக்காக வரவில்லை.'' தயங்கினான். ''சாரு உன்னைப் பார்க்க விரும்புகிறாள். வீட்டுக்கு வருகிறாயா ?''

''இன்னொரு நாள் வருகிறேன்.''

''கொஞ்ச நேரம்.''

''ஓ, உனக்குத் தெரியாது. நாளைப் பிரயாணத்துக்கு வேண்டிய வேலைகள் நிறைய உள்ளன. ஆகவே, இப்போது...''


வீட்டுக்கு வந்ததும் நோய்வாய்ப்பட்டு உதிர்ந்த சருகு போல் படுக்கையில் கிடந்த அவன் சகோதரி, ''என்ன, அவரைப் பார்த்தாயா?'' என்றாள்.

அடக்கி வைத்திருந்த சினமெல்லாம் சீறிக் கொண்டு கிளம்பியது. ''அந்தச் சீமான் இங்கே யெல்லாம் வருவாரா? 'அவனை மறந்துவிடு' என்று உன்னிடம் ஆயிரம் தடவை சொன்னேன். கேட்டாயா? அவனைப் பார்க்கப் போவதில் பிரயோசனமில்லை என்றேன். கேட்டாயா? அவன் மாறிவிட்டான். முற்றிலும் மாறிவிட்டான். புத்தி கெட்டவளே! நீதான் அவனை நினைத்து நினைத்து உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டாய்!'' என்றவன், அவள் மெல்ல விம்மி அழுவதைக் கண்டதும், 'இவள் நாட்கள் எண்ணப்படுகின்றன. இவள் வாழப் போவது ஒரு நாளோ இரண்டு நாட்களோ, அதிகமானால் ஒரு வாரமோ, இவளைப் போய்க் கோபித்துக் கொண்டேனே, அறிவில்லாமல்!' என்று வருந்திக் கீழே குனிந்து முழங்காலிட்டு அன்புடன் அவள் கையைப் பற்றிக் கொண்டு, ''மன்னித்துவிடு, சாரு!'' என்றான்.




பளபளப்பாய், வெண்மையாய் டிடர்ஜன்ட் சோப்பு துணிகளைத் தீவிரமாகச் சுத்தப்படுத்துகிறது — எப்படிச் செய்யவேண்டுமோ அப்படி. இன்னும் சிறப்பாக. பிரமிக்கத்தக்க அளவு சிறப்பாக.


புதிய ரம்யா விஞ்ஞான முறையில் கலவையானது. துணியில் ஆழச் சென்று, அழுந்தப் படிந்த ஒவ்வொரு துளி அழுக்கையும் இழுக்கும் தீவிரம் கொண்டது.



புதிய ரம்யா சர்பேக்டன்ட் (டோடிசில் பென்ஸேன் ஸல்ப் போனேட்) தன் சுத்தமாக்கும் தன்மையால் அழுக்கைத் தாக்குகிறது; அதனை வெளியே இழுக்கிறது.

புதிய ரம்யாவிலுள்ள கார்பாக்ஸி மெதல் செல்லுலோஸ் கரைசலி லுள்ள வெளியேறும் அழுக்கைத் தனிப்படுத்துகிறது — உங்கள் ஆடைகளில் அது மீண்டும் படியாமல் பாதுகாக்கிறது; சுத்தத் திருப்தி உத்திரவாதமளிக்கிறது.





அழுக்குத் துணி வெளுக்க— பளீரென ஒளிவீச

அல்ட்ராமரின் & பிக்மென்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு

SAA/UPL/1801R TAM

கடைசிப் பக்கம்



கண்ணதாசன்

குதிரை கிடைத்தால் லகானை மறந்துவிடாதீர்கள்

அதிருஷ்டம் என்பது என்ன?

இறைவன் உருவாக்கிக் கொடுக்கும் சந்தர்ப்பம்; அவ்வளவுதான்.

கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்பவனையே அதிருஷ்டசாலி என்கிறோம்.

சந்தர்ப்பங்களைத் தேடி அலைகிறவர்கள் பலர்; அது கிடைக்கவில்லை என்று அவர்கள் வாடுவார்கள். அவர்கள் எல்லாம் மதுரைக்குப் போவதாக எண்ணிக் கொண்டு, சேலம் ரயிலில் ஏறி உட்கார்ந்தவர்கள்!

கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட்டவர்கள் பலர்; அவர்களெல்லாம் ரயிலைத் தவறவிட்ட பிரயாணிகள்!

சரியான ரயிலுக்குச் சரியான நேரத்தில் போய்ச் சேர்ந்தவனே, தான் விரும்பிய ஊருக்குப் போய்ச் சேருகிறான்.

சரியான சந்தர்ப்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டவனே, தெய்வத்தின் உதவியோடு முன்னேறுகிறான்.

'எந்த நேரத்தில் எதைச் செய்தால் சரியாயிருக்கும்' என்ற தெளிந்த அறிவு எல்லோருக்குமே வாய்ப்பதில்லை.

உண்மைதான்.

ஆனால் கிடைக்கிற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளாதவர்கள், எந்த விதத் தெளிவும் இல்லாதவர்கள்.

வாய்ப்புக் கிடைத்ததாலே, முட்டாள் பணக்காரன் ஆனதுண்டு; வாய்ப்புக் கிடைக்காததாலே, திறமைசாலி தெருவிலே அலைந்ததுண்டு.

இந்த 'வாய்ப்பு' என்பது இறைவன் அவ்வப்போது காட்டும் பச்சை விளக்கு.

கொத்தவால்சாவடியில் காய்கறி வாங்கி, ஜாம்பஜாரில் கொண்டு போய் விற்றால், ஐம்பது ரூபாய் லாபம் கிடைக்கும் என்று உனக்குத் தெளிவாகத் தோன்றினால், அதை உடனடியாகச் செய்துவிட வேண்டும்.

அந்த முதல் லாபத்திலேயே உனக்கு இரண்டாவது யோசனை உதயமாகும்.

வியாபாரத்தில் லாபம் வந்தால் அந்த வியாபாரத்தைத் தொடர்ந்து செய்யலாம்.

ஆனால் சூதாட்டத்தில் லாபம் வந்தால் தொடர்ந்து சூதாடக் கூடாது.

ஒருவனிடம் கத்தியைக் காட்டி நீ ஆயிரம் ரூபாய் வாங்கி விட்டால், அந்தத் தைரியம் போலீஸ்காரரிடமும் கத்தியைக் காட்டச் சொல்லிப் பிடித்துக் கொடுக்கும்.

சிலர் வியாபாரத்தையே சூதாட்டம் போலவும் கொள்ளையடிப்பது போலவும் நடத்துவர். இதைத் தவிர்க்காவிடில் சர்வநாசம் தான்.

தர்மத்துக்கு உட்பட்டு நடப்பதுடன் புத்திசாலித்தனமும் வேண்டும்.

சொத்தின் மதிப்புக் குறையும்போது அதை வாங்க வேண்டும்; இன்னும் குறையும் என்று எண்ணினால், அது ஏறிவிடக்கூடும்.

மதிப்பு ஏறினால் அதை விற்றுவிட வேண்டும்; இன்னும் ஏறும் என்று கருதினால், அது இறங்கிவிடக்கூடும்.

பர்மாவிலும், சைகோனிலும், இலங்கையிலும் எங்கள் நகரத்தார்கள் சொத்துக்களை விற்காமல் கெட்டார்கள்; மலேஷியாவிலே விற்றுக் கெட்டார்கள்.

கத்திரிச் செடி காயைத்தான் தரும்; அதிலேயே குழம்பு வராது.

கைகாட்டி வழியைத்தான் காட்டும்; அதுவும் கூட வராது.

தெய்வம் பாதி; திறமை பாதி.

தெய்வம் வாய்ப்பைக் காட்டுகிறது; திறமை அதை லாபகரமாக்குகிறது.

உன்னிடம் விதை இருக்கலாம்; உரம் இருக்கலாம்; வெள்ளம் போல் தண்ணீர் தரும் கிணறும் இருக்கலாம்; நிலத்தில் வளம் இல்லை என்றால் அனைத்தும் வீண்.

ஆனால் வளமான நிலம் உன்னிடம் இருந்துவிட்டால் மற்ற அனைத்தையும் நீ உருவாக்கிவிட முடியும்.

அந்த வளமான நிலமே வாய்ப்பு என்பது.

பாம்பு நஞ்சு நிறைந்தது; வேங்கை பயங்கரமானது; யானையின் பலத்தின் முன்னால் மனிதன் எம்மாத்திரம்?

ஆனால் அவற்றை ஆட்டி வைக்கக்கூடிய திறமை சில மனிதர்களிடம் இருக்கிறது.

உங்களாலும் என்னாலும் முடியுமா? அந்த வாய்ப்பும் சிலருக்கே அமைகிறது.

அதனால்தான் வாய்ப்பு என்பது இறைவன் அளிப்பது என்றேன். அதை முறையாகப் பிடித்துக் கொண்டு முன்னேறுவதை அதிருஷ்டம் என்கிறேன்.

எழுதுவதற்குப் பத்திரிகைகளோ, படங்களோ இல்லை என்றால் நான் யார்?

நான் ஓர் அதிருஷ்டக்காரன்.

காரணம், இறைவன் எனக்கு அளித்த வாய்ப்பை மனித யத்தனத்தால் எவ்வளவு காப்பாற்றிக் கொள்ள முடியுமோ அவ்வளவு காப்பாற்றிக் கொள்கிறேன்.

ஹிட்லருக்குக் கிடைத்த வாய்ப்பு, ஆணவத்தால் அழிந்தது.


சோவியத் மக்களுக்குக் கிடைத்த வாய்ப்பு, திறமையினால் வளர்ந்தது.

வாய்ப்பைத் தவற விடுபவனே துரதிருஷ்டசாலி.

அந்த வாய்ப்பு எல்லோருக்கும் எப்போது வரும்?

அது முன்கூட்டியே தெரிந்துவிட்டால், இறைவனை நீங்கள் ஏன் நினைக்கப் போகிறீர்கள்!

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



சேமிப்பதற்கு யூகோ பாங்க் அருகாமையில் உள்ள வசதியான பாங்க்

நீங்கள் எங்கு இருந்தாலும் அங்கே உங்களருகில் ஒரு வசதியான யூகோபாங்க் உள்ளது. சேமிப்பை எளிதாக்குவதற்காகவே. உங்களை வரவேற்கவும், உங்கள் சேமிப்பை வளரச் செய்யவும் நாடு முழுவதும் எங்கள் கிளைகள் பரந்து இருக்கின்றன.

விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள யூகோ பாங்க் கிளையை அணுகவும்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-50A TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)



SIMOES/AG/13C